**கடன் மற்றும் அடைமான ஒப்பந்தம்**

**பிற்சேர்க்கை I-இல்** குறிப்பிடப்பட்டுள்ளது தேதி மற்றும் வருடத்தில் **இந்த ஒப்பந்தம் ("ஒப்பந்தம்")**

## இவர்களிடையே

**ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடட் (Volkswagen Finance Private Limited),**
சில்வர் யுதோபியா, 3-ஆம் தளம், ஏ விங், கார்டினல் கிரேசியஸ் சாலை, சகலா, கிழக்கு அந்தேரி, மும்பை 400 099-இல் பதிவு செய்யப்பட்ட அலுவலகம் மற்றும் நிறுவனங்கள் சட்டம், 1956-இன் கீழ் இணைக்கப்பட்ட ஓர் நிறுவனம் (இனிமேல் **"வி.டபில்யூ.எஃப்.பி.எல்" ("VWFPL")** என்று குறிப்பிடப்படும் இது அதன் பின்வருவோர் மற்றும் ஒப்படைக்கப்படுவோரையும் உள்ளடக்கும்**) முதல் பகுதியாக;**

## மற்றும்

பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் அதன்/அவரது அலுவலகம்/இருப்பிடம் கொண்டுள்ள, பிற்சேர்க்கை I-இல் 'கடன் பெறுபவர்' மற்றும் 'கூட்டுக் கடன் பெறுபவர்' என்று குறிப்பிடப்பட்டுள்ள நபர்(கள்)[இனிமேல் கூட்டாக **"கடன் பெறுபவர்(கள்)"** எனக் குறிப்பிடப்படும், இது சூழல் அல்லது அர்த்தத்துடன் பொருந்தாமல் இருந்தால் ஒழிய, பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகக் கருதப்படும் (i) கடன் பெறுபவர்(கள்) ஓர் தனிப்பட்ட நபராக இருக்கும் இடத்தில், அவரது வாரிசுகள், செயல்படுத்துபவர்கள், மற்றும் நிர்வாகிகள்; (ii) கடன் பெறுபவர்(கள்) ஒரே உரிமையாளராக இருக்கும் இடத்தில், ஒரே உரிமையாளர் என்று எந்த நபரின் பெயர் உள்ளதோ அவரை மற்றும் வாரிசுகள், செயல்படுத்துபவர்கள் மற்றும் நிர்வாகிகளைச் சேர்க்கலாம்; (iii) கடன் பெறுபவர்(கள்) இந்திய கூட்டாண்மை சட்டம், 1932-இன் கீழ் ஓர் கூட்டாண்மை நிறுவனமாக இருக்கும் இடத்தில் அவ்வப்போதான எதாவது மற்றும் ஒவ்வொரு கூட்டாளி, மற்றும் அவர்களால் பிழைத்து வாழ்பவர்(கள்) அல்லது அவர்களது கூட்டாளிகள் மற்றும் அவர்களது வாரிசுகள், சட்டப்பூர்வமான பிரதிநிதிகள், செயல்படுத்துபவர்கள் மற்றும் நிர்வாகிகள்; (iv) கடன் பெறுபவர்(கள்) ஓர் இந்து கூட்டுக் குடும்பமாக

(எச்.யு.எஃப்), கர்டா மற்றும் இந்து கூட்டுக் குடும்பத்தின் எதாவது அல்லது ஒவ்வொரு வயது வந்த உறுப்பினர் மற்றும் அவர்களால் பிழைத்து வாழ்பவர்கள் மற்றும் அவரது வாரிசுகள், செயல்படுத்துபவர்கள் மற்றும் நிர்வாகிகள்;(v) கடன் பெறுபவர்(கள்) ஓர் நிறுவனம் அல்லது சமூகம் அல்லது வரையறுக்கப்பட்ட பொறுப்பு கூட்டாண்மையாக(எல்.எல்.பி) இருக்கும் இடத்தில், அதன் வழித்தோன்றல்கள்; (vi) கடன் பெறுபவர்(கள்) இணைக்கப்படாத நிறுவனமாக இருக்கும் இடத்தில், அதன் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் அவர்களது வழித்தோன்றல்கள்; (vii) கடன் பெறுபவர்(கள்) ஓர் அறக்கட்டளையாக இருக்கும் இடத்தில், அதன் அறங்காவலர்(கள்) மற்றும் அறக்கட்டளை/அறங்காவலர்களின் வழித்தோன்றல்கள்)] **இரண்டாம் பகுதியாக**; இவர்களிடையே செய்யப்பட்டுள்ளது



SPECIMEN COPY

**அதேசமயம்:**

a கடன் பெறுபவர்(கள்) பிற்சேர்க்கை-I-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போல அனைத்து உதிரிப் பாகங்கள், துணைக்கருவிகள், அகந்திரள்வுகள், உபகரணங்கள், உபகரணங்களுக்கான கூடுதல் கூறுகள், எதாவது கூடுதலான உடல் கட்டுமான/ மாற்றியமைத்தல் வேலைகள், பொறி இயந்திர மேம்பாடு உட்பட புதிய அல்லது பழைய வாகனம்(கள்) [இனிமேல் கூட்டாக **"தயாரிப்பு(கள்)"** என்று குறிப்பிடப்படும்] வாங்கும் நோக்கத்திற்காக வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் கோரியுள்ளனர்;

b கடன் பெறுபவரின்(களின்) கோரிக்கையின் மீது, இனிமேல் வரும் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளில் உள்ள பிற்சேர்க்கை I-இல் **("நோக்கம்")** குறிப்பிடப்பட்டுள்ளது போல, மேற்படி நோக்கத்திற்காக, வி.டபில்யூ.எஃப்.பி.எல் கடன் வழங்க ஒப்புக்கொள்கிறது.

**தரப்பினர்களால் அவர்களிடையே பின்வருவனவற்றின் படி இப்பொழுது ஒப்புக்கொள்ளப்படுகிறது:-**

**1. <u>கடன், வழங்கல்</u>**

1.1 இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, இதன்மூலம் கடன் பெறுபவர்(கள்) கடன் பெற ஒப்புக்கொள்கிறார் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் கடன் பெறுபவருக்கு(களுக்கு) பிற்சேர்க்கை I-இல் **("கடன்")** குறிப்பிடப்பட்டுள்ள கடன் தொகையை

வழங்க ஒப்புக்கொள்கிறது. கடன், கடன் பெறுபவரின்(களின்) கோரிக்கையின் மீது,

வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் (அ) கடன் பெறுபவரிடம்(களிடம்) அல்லது

(ஆ) பிற்சேர்க்கையில் I-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று அத்தகைய உற்பத்தியாளர் / வியாபாரி / நபரிடம் வழங்கப்படலாம். மாத முன் தவணை வட்டி, முன் தவணை, ஆவணக் கட்டணங்கள், கடன் நடைமுறைப்படுத்துதல் கட்டணங்கள், காப்புறுதிக்கான தவணை (பொருந்துமானால்), பராமரிப்பிற்கான கட்டணங்கள், உத்தரவாத நீட்டிப்பிற்கான கட்டணங்களுக்கான அனைத்து முதல் கட்ட பணம் செலுத்தலின் நிகர கடன் தொகை கடன் பெறுபவருக்கு(களுக்கு)வழங்கப்படலாம். அவ்வாறு வி.டபில்யூ.எஃப்.பி.எல்- ஆல் உற்பத்தியாளர்/வியாபாரி/உரிமையாளர்/நபருக்கு(களுக்கு) வழங்கப்படும்/செலுத்தப்படும் அனைத்து கடன்களும் கடன் பெறுபவரிடம்(களிடம்) வழங்கப்பட்டு, அவரால்(களால்) பெறப்பட்டதாகக் கருதப்படும். வி.டபில்யூ.எஃப்.பி.எல்- ஆல் தேவைப்பட்டால், கடன் பெறுபவர்(கள்) வழங்கிய கடனைப் பெற்றதை வி.டபில்யூ.எஃப்.பி.எல்- ஆல் தேவைப்படும் வடிவில் மற்றும் விதத்தில் ஒப்புக்கொள்ளலாம்.

1.2 வழங்கப்பட்ட கடன், காசோலை(கள்)/செலுத்தல் ஆணை(கள்)/ ஒப்புதல் சான்று(கள்)/ கேட்பு வரைவோலை(கள்)/ நிகழ்நேர பெருந்திரள் தீர்வு (ஆர்.டி.ஜி.எஸ்)/ தேசிய மின்னணு பணப் பரிவர்த்தனை அமைப்பு (என்.இ.எஃப்.டி)/ ஒருமித்த கொடுக்கல் இணைப்பிடைமுகம் (யு.பி.ஐ) ஆகியவை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் வழங்கப்பட்ட/ செய்யப்பட்ட மற்றும் கடன் வைக்கப்படுகிறது என்றால், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் கடன் வைக்கப்பட்ட தேதியில் கடன் வழங்கப்பட்டதாகக் கருதப்படுமே தவிர, அது உண்மையில் பெறப்பட்ட தேதியில் அல்ல.

1.3 கடன் ஒப்புதல் வழங்கப்பட்டு, கடன் பெறுபவருக்கு(களுக்கு)ஒப்படைக்கப்படும் தயாரிப்பின்(களின்)உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளருக்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் வழங்கப்படும் ஒப்படைப்பு ஆணை அல்லது அறிவுறுத்தல்கள் அல்லது உறுதிப்பாடு, அத்தகைய உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரிடம் கடன் அல்லது வேறு நிதி ஏற்பாட்டை வி.டபில்யூ.எஃப்.பி.எல் செய்திருந்தால் மற்றும் அத்தகைய உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளருக்கு உண்மையில் பணம் வழங்கப்படவில்லை என்றாலும் கடன் வழங்கப்பட்டதாகவே கருதப்படும் மற்றும் அத்தகைய நிகழ்வின் போது



SPECIMEN COPY

இந்த ஒப்பந்தம் கடன் பெறுபரிடம்(களிடம்) முழுமையாகப் பிணைப்பில் இருக்கும் (மற்றும் கண்டிப்பாக உடன்படும்) என்று கடன் பெறுபவர்(கள்) ஒப்புதல் மற்றும் உறுதி அளிக்கிறார்(கள்). கடன் பெறுபவரின்(களின்) கோரிக்கை/அறிவுறுத்தல்களின் படி அவர்(கள்)சார்பாக எதாவது நபருக்கு(களுக்கு) வழங்கல்(கள்)மேற்கொள்ளப்பட்டால் அவர்கள் மீதும் பிணைப்பை ஏற்படுத்தும்.

1.4

தயாரிப்பின்(களின்) விலை மற்றும்/அல்லது காப்பீடு அல்லது தயாரிப்பை(களை) பதிவு செய்வதற்கு ஆகும் செலவில் எதாவது உயர்ந்திருந்தால் அதைக் கடன் பெறுபவர்(கள்) தான் முழுமையாகப் பொறுப்பேற்றுக்கொள்ள வேண்டும்.

1.5 உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரிடமிருந்து தயாரிப்புக்கான(களுக்கான) ஆர்டர்/விற்பனை பதிவை ரத்து செய்து நேரடியாக உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரிடமிருந்து விற்பனை பதிவின் விலை அல்லது மற்ற எதாவது தொகையைத் திரும்பப் பெற மற்றும் அதை கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய தொகையிலிருந்து சரிக்கட்டும் உரிமை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது: (i) கடன் வழங்கப்பட்டு 7 நாட்களுக்குள்ளாக இருந்தால் (அ) உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளர் கடன் பெறுபவரிடம்(களிடம்) தயாரிப்பை(களை)ஒப்படைக்கவில்லை அல்லது (ஆ) கடன் பெறுபவர்(கள்) ஒப்படைக்கப்பட்ட தயாரிப்பை(களை) எடுத்துக்கொள்ளத் தவறுவது, அல்லது (ii) கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் தயாரிப்பை(களை) வாங்கியதற்கான தனது பங்களிப்பிற்குச் சான்றான ஆவணங்களை வழங்கத் தவறினால், அல்லது (iii) கடன் வழங்கப்பட்டு 30 நாட்களுக்குள் எதாவது காரணத்திற்காகத் தயாரிப்பு(கள்) கிடைக்கவில்லை என்றால். எதாவது பற்றாக்குறை, கடன் பெறுபவரால்(களால்)உடனடியாக சரி செய்யப்படவில்லை என்றால், கடன் செலுத்தத் தவறியதாகவேக் கருதப்படும்.

1.6 பின்வரும் எதாவது ஒரு நிகழ்வு ஏற்பட்டால் (அ)இந்த ஒப்பந்தம், (ஆ) 'அனுமதி கடிதம்', (இ) 'கடன் விண்ணப்பம்', (ஈ) பாதுகாப்பு ஆவணங்கள், மற்றும் (உ) கடன் பெறுபவரால்(களால்) செயல்படுத்தப்பட்ட கடன் சம்பந்தப்பட்ட மற்ற ஆவணங்கள்(கூட்டாக **"பரிவர்த்தனை ஆவணங்கள்"**) முழுமையாகக் கடன் பெறுபவரை(களை)பிணைக்கும் என்று கடன் பெறுபவர்(கள்)ஒப்புதல் மற்றும் உறுதியளிக்கிறார்:

i ) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்துதல் மற்றும்/ அல்லது கடன் பெறுபவரால்(களால்) விண்ணப்பிக்கப்பட்ட கடன் (அல்லது அதன் எதாவது பகுதி) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் அனுமதிக்கப்படுதல்/வழங்கப்படுதல்/ கொடுக்கப்படுதல்; அல்லது

ii ) அத்தகைய அனுமதி/ வழங்கல் பெற்ற கடன் பெறுபவருக்கு(களுக்கு) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடமிருந்து குறிப்பிட்ட உறுதிப்பாட்டிற்கான எந்த தேவையுமின்றி, குறிப்பிடப்பட்ட உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளருக்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் வழங்கப்படும் அறிவுறுத்தல்கள்/உறுதிப்பாடுகளுக்கு இணங்கக் கடன் பெறுபவருக்கு(ளுக்கு) தயாரிப்பை(களை) ஒப்படைத்தல்.

1.7 கடன் வழங்கல், கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டது:

அ) பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள தயாரிப்பை(களை) வாங்குவதற்காகப் பணம் செலுத்தியதில் கடன் பெறுபவரின்(களின்) பங்கிற்கான ஆதாரமான ஆவணங்களைக் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் வழங்கலாம்.

ஆ) கடன் பெறுபவர்(கள்), தயாரிப்புக்கு(களுக்கு) அறுதியான, தெளிவான மற்றும் சந்தைப்படுத்தக் கூடிய தலைப்பு/உரிமை கொண்டிருக்கலாம் மற்றும் தயாரிப்பு(கள்) முற்றிலும் வில்லங்கமற்றதாகவும் மற்றும் எதாவது பொறுப்பு மற்றும் முன் கட்டணமற்றதாகவும் இருத்தல் வேண்டும்.

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

இ) இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவரின்(ளின்) கடைமைகளை சாத்தியமற்றதாக்கும் அசாதாரணமான அல்லது மற்ற சூழ்நிலைகள் ஏற்படாமல் இருத்தல்.

ஈ) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கடன் தகுதிக்கான தேவைகளை கடன் பெறுபவர்(கள்) பூர்த்தி செய்தல். இது சம்பந்தமாக, கடன் பெறுபவர்(கள்)கடன் தகுதிக்கு ஏற்றவர் என்று வி.டபில்யூ.எஃப்.பி.எல் கருதி அத்தகைய இயல்புடைய விசாரணைகளை நடத்த வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உரிமை உள்ளது. மேலும் கடன் பெறுபவரின்(களின்) கடன் தகுதியை நிரூபிக்கத் தேவைப்படும் சான்றுகளைக் கடன் பெறுபவர்(கள்) அல்லது கடன் முகமைகள் அல்லது எதாவது சம்பந்தப்பட்ட மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெற வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உரிமை உள்ளது.

உ) பிரிவுக்கூறு 7-இல் வரையறுக்கப்பட்டுள்ளதின் படி கடன் கட்டத் தவறாமல் இருத்தல் மற்றும் காலக்கெடு அல்லது அறிவிப்பு கழித்தல் மற்றும் கூறப்பட்டுள்ளப் பிரிவுக்கூறில் குறிப்பிடப்பட்டுள்ளதின் படி காலக்கெடு கழித்தல் கடன் கட்ட தவறியதாகும், அவை ஏற்பட்டுத் தொடராமல் இருத்தல்.

ஊ) இப்பொழுது கடன் பெறுபவரின்(களின்) வசம் இருந்தாலும் இந்த அவர்(கள்) வசம் வரவிருந்தாலும், கடன் மூலமாக வாங்கப்பட்ட/பெறப்பட்ட அல்லது வாங்கப்பட/பெறப்படப் போகின்ற தயாரிப்பின்(களின்) மீது அடைமானம் வைப்பதன் மூலம் முதலாவதான மற்றும் பிரத்தியேகமான பொறுப்பாணையை உருவாக்குவதன் மூலம், கடன் பெறுபவரால்(களால்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய அனைத்து வட்டி, அறுதியிட்ட இழப்புகள், செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்கள் மற்றும் கடன் தொகையான மற்ற பணத்துடன் கடனின் அசல் தொகையில் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் திருப்தியைக் கடன் பெறுபவர்(கள்) பெறலாம்.

SPECIMEN COPY

**2.** **<u>செலுத்த வேண்டிய தொகை, முற்செலுத்தப்படவேண்டிய தொகை, வட்டி மற்றும் மற்ற கட்டணங்கள்</u>**

2.1 கடன் பெறுபவர்(கள்), கடன் மீதான வட்டியை பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் மற்றும் தேதிகளில் செலுத்துவதற்குப் பொறுப்பாகலாம். வட்டி மற்றும் மற்ற கட்டணங்கள் மீதான வட்டி தினசரி இருப்பின் அடிப்படையில் மாதாந்திர நிலுவை அசல் இருப்பின் மீது கணக்கிடப்படும். ஓர் வருடத்தின் 360 நாட்கள் மற்றும் உண்மையில் கடந்துவிட்ட நாட்களின் மீது வட்டி கணக்கிடப்படும். கடன் பெறுபவரால்(களால்) அல்லது அவரது வங்கியால் காசோலையைக் கொண்டு செல்லுதல், சேகரிப்பு, பெற எடுத்துக்கொள்ளும் நேரம் எதுவாக இருந்தாலும் கடன் காசோலை வழங்கிய நாளிலிருந்து கடனுக்கான வட்டி சேரத் தொடங்கும். அவ்வப்போது இந்தியன் ரிசர்வ் வங்கியால் **("ஆர்.பி.ஐ")** வழங்கப்படும் வழிகாட்டுதல்கள் அல்லது பொருத்தமான நேரத்தில் பணச் சந்தையில் உள்ள நிலை, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் நிதிக்கு ஆகும் செலவு மற்றும் கடனுக்குரிய நிதிகள் கிடைப்பதன் அடிப்படையில் கடன் பெறுபவரால்(களால்) செலுத்தப்பட வேண்டிய வட்டி விகிதம் மாற்றத்திற்குட்பட்டது.

2.2 கடன் பெறுபவர்(கள்), பிற்சேர்க்கை I-இல் (ஒப்பந்தத்தின் சாராம்சத்தின் நேரம்) குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய தவணைகள் எண்ணிக்கையில் மற்றும் அத்தகைய தவணை(கள்) தொகையில் மற்றும் **'தவணை தேதியில்(களில்)'** கடனை வட்டியுடன் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு திரும்பச் செலுத்தலாம்; இனிமேல் அத்தகைய தவணைகள் தனியாக **"தவணை/இ.எம்.ஐ"** என்றும் மற்றும் கூட்டாக **"தவணைகள்/இ.எம்.ஐ-கள்"** என்றும் குறிப்பிடப்படும். மாதாந்திர தவணை தொகை அடுத்த உயர் ரூபாய் மதிப்பிற்கு நிகராக்கப்படும். தவணை தேதி, பணம் செலுத்த வேண்டிய இடத்தில் வேலை நாளாக இல்லை என்றால், கடன் பெறுபவர்(கள்) தவணையை அத்தகைய திரும்பச்

செலுத்தலுக்கான தவணை தேதிக்கு அடுத்த வேலை நாளில் செலுத்தலாம். கடன் பெறுபவரால்(களால்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்தப்பட வேண்டிய அனைத்து தொகையும் எந்த வரியின் மீதான கழிப்புமின்றி செய்யப்பட வேண்டும். கடன் பெறுபவர்(கள்) அத்தகைய கழிப்பை மேற்கொள்ள வேண்டுமென்றால், பின்னர், இது போன்ற விஷயத்தில், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய தொகை, அத்தகைய கழிப்பை மேற்கொண்ட பிறகு, வி.டபில்யூ.எஃப்.பி.எல் பெறும் தோகை (அத்தகைய கழித்தலுக்கான எந்தவொரு பொறுப்பும் இல்லாமல்) அத்தகைய கழித்தலை மேற்கொள்ளாத போது பெறப்படும் தொகைக்குச் சமமாக இருப்பதை உறுதி செய்யும் விதத்தில் அதிகரிக்கப்படும்.

2.3 வி.டபில்யூ.எஃப்.பி.எல், கடன் பெறுபவருக்கு(களுக்கு) ஏழு (7) நாட்களுக்கு முன்னதாகவே எழுத்துப் பூர்வமான அறிவிப்பை வழங்கி; வழங்கல் தொகை/வழங்கல் தேதி/வட்டி விகிதம்/தவணை தொகை/தவணை அட்டவணை/முற்செலுத்தல் கட்டணங்கள்/சேவைக் கட்டணங்கள் ஆகியவற்றில் உள்ள மாற்றங்கள் குறித்து கடன் பெறுபவருக்கு(களுக்கு) அறிவிக்கலாம் என்று கடன் பெறுபவர்(கள்) ஒப்புக்கொள்கிறார்(கள்). அத்தகைய அறிவிப்பு, கடன் பெறுபவருக்கு(களுக்கு) இரண்டு மொழிகளில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் அதாவது, ஒன்று ஆங்கிலத்தில் மற்றும் மற்றொன்று கடன் பெறுபவரால்(களால்) புரிந்துகொள்ளக்கூடிய வட்டார மொழியில் மற்றும் அத்தகைய மாற்றம் அத்தகைய தகவல் கடன் பெறுபவருக்கு(களுக்கு) தெரியப்படுத்திய நாளிலிருந்து செயல்படுத்தப்படலாம்.

2.4 கடன் பெறுபவர்(கள்) எதாவது தவணை(கள்) அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கான மற்ற எதாவது கடன் தொகையைத் தவணை தேதியில்(களில்) செலுத்த/திரும்பச்செலுத்தத் தவறினால், பொருந்தும் தவணை தேதியிலிருந்து பணம் செலுத்தப்படும்/பெறப்படும் நாள் வரை அத்தகைய நிலுவைகளின் மீது பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் கூடுதல் வட்டி/தவறியதற்கான வட்டி மற்றும் இதர கட்டணங்களைச் செலுத்தக் கடன் பெறுபவர்(கள்) பொறுப்பாகலாம். அத்தகைய கூடுதல் வட்டி/தவறியதற்கான வட்டி மற்றும் இதர கட்டணங்கள், இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் படி வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு, கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டிய மற்ற எதாவது கட்டணங்களுடன் கூடுதலானதாக இருக்கலாம்.

2.5 பின்வருவனவற்றில் எதாவது ஒன்றின் மூலம் தவணை மற்றும் மற்ற பணத்தை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு, கடன் பெறுபவர்(கள்) திரும்பச்செலுத்தலாம்/செலுத்தலாம்: (i) பிந்தைய தேதியிட்ட காசோலைகள் ("**பி.டி.சி முறை**"), (ii)ஆர்.பி.ஐ-ஆல் அறிவிக்கப்பட்டதின் படி மின்னணு தீர்வு அமைப்பு (**கடன் தீர்வு**) ("**இ.சி.எஸ் முறை"),** (iii) தொகையைப் பணமாக அல்லது "ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடடின்" பெயரில் வழங்கப்படும் காசோலை/வரைவோலையாக நேரடியாகச் செலுத்துதல் ("**நேரடி பணம் செலுத்தல் முறை**"), அல்லது (iv) என்.ஏ.சி.எச், அல்லது (v) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் அனுமதிக்கப்பட்ட வேறு எதாவது முறை. பணம் செலுத்தும் முறை, பிற்சேர்க்கை I-இல் கடன் பெறுபவரால்(களால்) தேர்ந்தெடுக்கப்பட்டதாக இருக்கலாம். அத்தகைய தேர்வு/ஆணையை, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் முன்கூட்டிய எழுத்துப்பூர்வமான ஒப்புதலின்றி கடன் பெறுபவரால்(களால்) மாற்ற/ரத்து செய்ய/திரும்பப்பெற முடியாது. மேலும், கடன் அல்லது கடன் பெறுபவரின்(களின்)தவணையில் நிலுவை இருக்கும் வரை பின்தேதியிட்ட

காசோலைகள்/இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச் பொருத்து ரத்து செய்ய அல்லது பண அளிப்பு நிறுத்து ஆணை அறிவுறுத்தல்களை வழங்கக் கடன் பெறுபவருக்கு(களுக்கு) உரிமை இல்லை. இந்த ஒப்பந்தம் அல்லது பரிமாற்று ஆவணங்களில் உள்ளவை தவிர மற்றும் கடன் பெறுபவர்(கள்) தேர்ந்தெடுத்த பணம் செலுத்தல் முறையைக் கருதாமல், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு பணம் செலுத்த வேண்டிய தேதியில் எதாவது தவணையை மெய்ப்பிக்க அல்லது கடன் பெறுபவரால்(களால்) செலுத்தப்படத் தவறினால், அதன் மீது கடன் பெறுபவரால்(களால்) வழங்கப்பட்ட பின் தேதியிடப்பட்ட காசோலைகள் அல்லது இ.சி.எஸ் அல்லது என்.ஏ.சி.எச்-ஐ வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு ஆதரவாக வழங்க மற்றும்/அல்லது குறித்துக்காட்ட வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உரிமை உள்ளது.

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

2.6 பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, கடன் வழங்குவதற்கு முன்னதாக (வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் குறிப்பிடப்படும் வேறு எதாவது நேரத்தில்) கடன் பெறுபவரால்(களால்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு (அல்லது அதனால் பெயர்க்குறிப்பிடப்பட்டவர்) செலுத்தப்பட்ட முன் தவணைகள், செலுத்தப்படும் இறுதி தவணையில் (சம எண்ணிக்கையில்) அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் முடிவு செய்யப்படும் முறையில் சரிக்கட்டப்படும். அத்தகைய முன் தவணைகளின் தொகை மீதான வட்டிக்கு, கடன் பெறுபவர்(கள்) உரிமை பெற முடியாது.

2.7 கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் வசம் இருக்கும் பயன்படுத்தப்படாத காசோலையை/களை கடன் முடிவடைந்த 30 நாட்களுக்குள் கோரலாம், தவறினால் வி.டபில்யூ.எஃப்.பி.எல் வசம் இருக்கும் கோரப்படாத/விநியோகிக்கப்படாத காசோலைகளை அழிக்க வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உரிமை உள்ளது.

2.8 இதன்மூலம் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு விநியோகிக்கப்பட்ட காசோலையில்/களில் இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் கடன் பெறுபவருக்கு(களுக்கு) எந்த அறிவிப்புமின்றி கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய தொகைக்கு மிகாமல் தேவையான விவரங்களை நிரப்பக் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு நிபந்தனையற்ற மற்றும் திரும்பப்பெற முடியாத அனுமதியை வழங்குகிறார்(கள்). வி.டபில்யூ.எஃப்.பி.எல், அதன் சுய விருப்பத்தின் படி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய காசோலைகள் அல்லது இ.சி.எஸ் அல்லது என்.ஏ.சி.எச்-ஐ கடன் திரும்பச்செலுத்தலின் முறைப்படுத்துதல்/தீர்வுக்குப் பயன்படுத்த வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உரிமை உள்ளது என்று இதன் மூலம் கடன் பெறுபவர்(கள்) உறுதிப்படுத்தி ஒப்புக்கொள்கிறார்(கள்). இந்த நோக்கத்திற்காக, இந்த ஒப்பந்தத்திற்கு இணங்க கடன் பெறுபவரால்(களால்)வழங்கப்பட்ட காசோலைகள் அல்லது இ.சி.எஸ் அல்லது என்.ஏ.சி.எச் தீர்ந்து போனால் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு புதிய காசோலைகளை வழங்குவார்(கள்).

2.9 இ.சி.எஸ், பின் தேதியிட்ட காசோலைகள், அல்லது என்.ஏ.சி.எச், கடன் பெறுபவரால்(களால்) வழங்கப்பட்டிருந்தால் அவை மறுக்கப்படாமல் இருப்பதை மற்றும் பொருந்தும் தவணை தேதியில் அல்லது அதற்கு முன்னதாக தவணைகள் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் பெறப்படுவதை உறுதி செய்யக் கடன் பெறுபவர்(கள்) அனைத்து நேரத்திலும் போதுமான நிதியை அவரது/ அவர்களது வங்கிக் கணக்கில் பராமரிக்கலாம்.

2.10 கடன் பெறுபவரால்(களால்) தேர்ந்தெடுக்கப்பட்ட பணம் திரும்பச்செலுத்த/பணம் செலுத்தல் முறையைத் தவிர, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கடன் சம்பந்தமான அனைத்து தவணைகள் மற்றும் மற்ற அனைத்து தொகைகளும் பொருந்தும் தவணை தேதியில் அல்லது அதற்கு முன்னதாக செலுத்தப்பட்டதை/திரும்பச்செலுத்தப்பட்டதை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எந்த அறிவிப்புமின்றி கடன் பெறுபவர்(கள்) உறுதிப்படுத்தும் பொறுப்பை அனைத்து நேரங்களிலும் தொடர வேண்டும் மற்றும் கடன் பெறுபவரால்(களால்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்தப்பட வேண்டிய அத்தகைய அனைத்து தொகைகளும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் குறிப்பிடப்படும் இடத்தில்(களில்) எந்த கழிப்புமின்றி செலுத்தலாம், எனவே செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்த வேண்டிய தேதியில் அல்லது அதற்கு முன்னதாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் முழுமையாகப் பெற முடியும். எந்த முறையிலும் பணம் செலுத்தியதற்கான வரவு, செலுத்தப்பட்ட பணம் பெறப்பட்ட பிறகே வழங்கப்படும். அத்தகைய நேரத்தில் முழு தவணை அல்லது செலுத்த வேண்டிய மற்ற தொகைக்குக் குறைவான பணம் செலுத்தலை வி.டபில்யூ.எஃப்.பி.எல் ஏற்றுக்கொள்வது அத்தகைய நேரத்தில் அல்லது அதைத் தொடர்ந்து வரும் நேரத்தில் முழு தொகையைப் பெறும் உரிமையிலிருந்து வி.டபில்யூ.எஃப்.பி.எல் விலக்களித்ததாக அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் வரும் மற்ற எதாவது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமைகளிலிருந்து விலக்களித்ததாகக் ஆகாது.

2.11 இந்த கடன் வழங்கலின் போது வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் சமர்ப்பிக்கப்பட்ட காசோலைகள்/இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச்-இல் கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரை மாற்றுவதற்குக் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடமிருந்து முன்கூட்டியே எழுத்துப்பூர்வமான

SPECIMEN COPY

ஒப்புதலைப் பெற வேண்டும். பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள "காசோலை/இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச் இடமாற்று" கட்டணங்களை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு வழங்குவதற்கு உட்பட்டு வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு வழங்கப்பட்ட பின் தேதியிட்ட காசோலைகள்/இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச்-ஐ அதற்கு மாற்றான மற்றொரு வங்கியில் வரையப்பட்ட பின் தேதியிட்ட காசோலைகள்/இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச் உடன் இடமாற்றம்/பரிமாற்றம் செய்யக் கடன் பெறுபவரை(களை) வி.டபில்யூ.எஃப்.பி.எல் அனுமதிக்கலாம்.அத்தகைய நிகழ்வின் போது, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் திருப்திக்காகக்

கடன் பெறுபவர்(கள்) தவணையைச் செலுத்துவதற்காகச் செயல்படுத்திய பின் தேதியிட்ட காசோலைகள் மற்றும்/அல்லது இ.சி.எஸ் அல்லது என்.ஏ.சி.எச் ஆணைகள், ஒப்பந்தங்கள் மற்றும்/அல்லது மற்ற ஆவணங்களை உடனடியாக மாற்றி, அதற்குப் பதிலாக புதிய பின் தேதியிட்ட காசோலைகள், இ.சி.எஸ் அல்லது என்.ஏ.சி.எச் ஆணைகளை வழங்க வேண்டும்.

2.12 எதாவது குறைபாடு, ஒப்படைப்பில் தாமதம் அல்லது ஒப்படையாமை அல்லது இழப்பு, திருட்டு, பறிமுதல், ஒப்படைப்பின் போது அல்லது அதற்கு முன் தயாரிப்பின் (களின்) விபத்திற்கு அல்லது தயாரிப்பின் (களின்) எதாவது குறைபாடு, சேதம் அல்லது தரத்திற்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல் பொறுப்பாகாது என்று கடன் பெறுபவர் (கள்) ஒப்புக்கொள்கிறார் (கள்). தவணையைச் செலுத்துதல், பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் படி தொடங்கி, தொடரும் மற்றும் ஒப்படையாமை/ஒப்படைப்பதில் தாமதம், தயாரிப்பில்(களில்) குறைபாடு மற்றும் தயாரிப்பு(கள்) தொடர்பாகத் தரப்பினர்களிடையே எந்த சர்ச்சை / வேறுபாடு ஏற்பட்டாலும் எதாவது தவணையை அல்லது மற்ற தொகையைச் செலுத்துவதை நிறுத்தி வைக்க அல்லது தாமதிக்கக் கடன் பெறுபவருக்கு(களுக்கு) உரிமை இல்லை.

2.13 குறைந்தபட்ச முன் செலுத்தல் தொகை, முன் செலுத்தல் தவணை, அல்லது தள்ளுபடி செய்யப்பட்ட வட்டி, மற்றும்/அல்லது எதாவது மற்ற கட்டணங்கள் உட்பட வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் குறிப்பிடப்பட்ட அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எழுத்துப்பூர்வமான ஒப்புதலுக்கு உட்பட்டு, கடன் பெறுபவர்(கள்) பணம் செலுத்தவேண்டிய தேதிக்கு/களுக்கு முன்னதாகவே கடன் அல்லது தவணைகள் அல்லது கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டிய தொகையை (இதன் பிறகு வரையறுக்கப்படுகிறது) பகுதியாக அல்லது முழுமையாக முன் செலுத்தலாம்; எனினும், கடன் அல்லது தவணைகளை வருடத்திற்கு இரண்டு முறை மட்டுமே பகுதியாக அல்லது முழுமையா முன் செலுத்தும் உரிமை கடன் பெறுபவருக்கு(களுக்கு) உள்ளது. எதாவது அத்தகைய பகுதி முன் செலுத்துதல் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் அனுமதிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டால், வி.டபில்யூ.எஃப்.பி.எல், பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி திரும்பிச் செலுத்தல் அட்டவணை/ தவணை(கள்) தொகையைத் திருத்தலாம் மற்றும் கடன் பெறுபவர்(கள்) அதன் பிறகு திருத்தப்பட்ட பணம் செலுத்தல் அட்டவணையின் படிப் பணம் செலுத்த வேண்டும். அத்தகைய முன் செலுத்தல், காசோலைகள்/வரைவோலைகள்/கொடுப்பாணைகள்/ஆர்.டி.ஜி.எஸ்/என்.இ.எஃப்.டி/என்.ஏ.சி.எச் நிதி பரிமாற்றத்தின் பணம் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் பெறப்பட்ட பிறகு மட்டுமே அமலுக்கு வரும் மற்றும் திரும்பச்செலுத்தல் அட்டவணை அடுத்த மாதத்தின் இ.எம்.ஐ தேதிக்குப் பின்னர் மட்டுமே அமலுக்கு வரும்.

2.14 ஒப்பந்தச் சட்டம், 1872-இன் எதாவது விதிமுறைகள் அல்லது மற்ற எதாவது சட்டம் அல்லது ஒப்பந்தம் மற்றும் அல்லது எதாவது பரிவர்த்தனை ஆவணங்களில் உள்ள எதாவது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் தவிர, கடன் பெறுபவரிடம்(களிடம்) இருந்து பெறப்படும் எதாவது தொகை அல்லது பிணையமாக வைக்கப்பட்டதை அமலாக்குவதன் மூலம் அல்லது வேறு வழியில் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் பெறப்படும் தொகை, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொள்ளப்படாத பட்சத்தில், பின் வருபவற்றிற்கு உரியதாகப்பட வேண்டும் என்று கடன் பெறுபவர்(கள்) ஒப்புக்கொண்டு, சாற்றி, உறுதிப்படுத்துகிறார் (i) முதலாவதாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் மற்ற பணத்திற்குச் சார்பாக; (ii) இரண்டாவதாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய வட்டி மற்றும்/ அல்லது சேர்ந்துள்ள வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய பணத்திற்குச் சார்பாக; (iii) மூன்றாவதாக



SPECIMEN COPY

இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய அல்லது செலுத்த வேண்டியதாகக்கூடிய அசல் தொகைக்கான எதாவது தவணை(கள்) தொகையைத் திரும்பச் செலுத்துவதன் சார்பாக; மற்றும் (iv) இறுதியாகக் கடன் பெறுபவர்(கள்) மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு இடையே உள்ள மற்ற எதாவது ஒப்பந்தங்களின் கீழ் செலுத்த வேண்டிய பணத்தின் சார்பாக

2.15 கடன் பெறுபவர்(கள்) பொருந்தும் தவணை/இ.எம்.ஐ, குறிப்பிடப்பட்ட நேரத்தில் அல்லது அதற்கு முன்னதாக செலுத்தத் தவறினால், கடன் பெறுபவருக்கு(களுக்கு) பொருந்தும் ஜி.எஸ்.டி மற்றும் மற்ற எதாவது வரிகளுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களை விதிக்க வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உரிமை உள்ளது: -தண்ட வட்டி - தாமதித்துப் பணம் செலுத்தல் கட்டணங்கள் - காசாகாத காசோலை கட்டணங்கள் - அபராதம். மேலே உள்ள கட்டணங்கள் கடன் பெறுபவரால்(களால்) உடனடியாக செலுத்தப்பட வேண்டும். கூறப்பட்ட தொகை செலுத்தப்படாத வரை கூறப்பட்ட தொகை செலுத்தப்படாத வரை தவணை/இ.எம்.ஐ மற்றும்/ அல்லது மேலே குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்தத் தாமதித்தால் கடன் பெறுபவர்(கள்), பொருந்தும் தண்ட வட்டியை, வருடத்திற்கு @ ………%செலுத்த வேண்டும்.

## 3 <u>வரிகள்/கட்டணங்கள்</u>

3.1 அரசாங்கம் அல்லது மற்ற அதிகார அமைப்பால் அவ்வப்போது விதிக்கப்படும் வட்டி வரி, சேவை வரி, சரக்கு மற்றும் சேவை வரி **("ஜி.எஸ்.டி"),** கட்டணங்கள் (பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று ஒரு முறை வெளிப்படையான நடைமுறைப்படுத்தல்

கட்டணம் உட்பட), இறக்குமதி வரிகள் (முத்திரை வரி மற்றும் தொடர்புடைய பதிவு மற்றும் தாக்கல் கட்டணங்கள் மற்றும் வரிகள் எதுவாயினும் அவை உட்பட), (அ)கடன் விண்ணப்பம், கடன் வழங்கல் மற்றும் அதன் திரும்பச் செலுத்தல், முன் செலுத்தல்/காசோலை மாற்றக் கட்டணம், அல்லது தயாரிப்புடன்(களுடன்) தொடர்புடைய மற்ற குறிப்பிடப்பட்ட கட்டணங்கள்; (ஆ) இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது எதாவது பரிவர்தனை ஆவணம், (இ) கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டிய பணத்தை மீட்பது மற்றும் பெறுவது, (ஈ) பிணையை உருவாக்குதல், அமலாக்குதல் மற்றும் பெறுதல் [தயாரிப்பை(களை) வசப்படுத்துதல், பராமரித்தல், சேமித்தல் மற்றும் விற்றல்/இடமாறல்/பணமாக்கல் உட்பட], (உ) தயாரிப்பை(களை) பழுது பார்த்தல் மற்றும் தயாரிப்புடன்(களுடன்) தொடர்புடையதாகச் செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள அனைத்து வரிகள் மற்றும் மற்ற எதாவது கட்டணங்கள் மற்றும் விதிப்புகள், (ஊ) தயாரிப்பின்(களின்) ஆய்வு மற்றும் மதிப்பீடு, (எ) தயாரிப்பிற்கான(களுக்கான) காப்பீடு, வாகன நிறுத்தல் கட்டணங்கள், வாடகைகள், தயாரிப்பு(கள்)கிடங்கு அல்லது பாதுகாப்பாக வைப்பதற்கான கட்டணங்கள் மற்றும் (ஏ) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் வழக்கறிஞர் கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் தொடர்புடைய மற்ற அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களை (வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு ஏற்படும் செலவுகள் மற்றும் செலவினங்கள் உட்பட ஆனால் அவை மட்டுமல்ல) கடன் பெறுபவர்(கள்) ஏற்றுக்கொண்டு செலுத்த வேண்டும். முத்திரை வரி, மற்ற வரிகள், கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தம் மற்றும் பிணையத்தின் கீழ்/தொடர்புடையதாகச் சட்டம் அல்லது அதன் விளக்கத்தில் அல்லது நிர்வாகத்தில் எதாவது மாற்றம் காரணமாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் செலவு அதிகரித்தல் உட்பட ஆனால் இவை மட்டும் அல்லாமல், அனைத்து மற்றும் எதாவது இழப்புகள், சேதங்கள், செலவுகள், கட்டணங்கள், கோரிக்கைகள், செலவினங்கள் மற்றும் பொறுப்புகள், எந்த வகை அல்லது இயல்புடையதாக இருந்தாலும், மேலுள்ள விஷயங்கள் தொடர்பாகக் கடன் பெறுபவரால்(களால்) உருவாக்கப்பட்டு வி.டபில்யூ.எஃப்.பி.எல் பாதிக்கப்பட்டு அல்லது ஏற்பட்டால், அவை தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டத்தின் படி எப்பொழுது செலுத்த வேண்டுமோ, கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் செலுத்தலாம்/ஈடுசெய்யலாம்.

3.2 மேலே குறிப்பிடப்பட்ட பணத்தைக் கடன் பெறுபவர்(கள்) செலுத்தத் தவறினால், அதைச் செலுத்தும் தனியுரிமை (ஆனால் கடமைப்பட்டிருக்காது) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது. அவ்வாறு வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் செலுத்தப்பட்ட அனைத்து தொகையையும் பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள பணம் செலுத்தத்



SPECIMEN COPY

தவறியதற்கான வட்டியுடன் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் ஈடு செய்ய வேண்டும். இந்த கடன் தொடர்பாக

வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் (பிரதிநிதிகள்/ஆலோசகர்கள்/மதிப்பீட்டாளர்களால் அல்லது அவர்கள் சார்பாகவும்) செலுத்தப்பட்ட தொகை மற்றும்/அல்லது ஏற்பட்ட செலவினங்கள் அனைத்தையும் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடமிருந்து கோரிக்கை விடப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் ஈடு செய்ய வேண்டும். அத்தகைய அனைத்து தொகையும், செலுத்தப்பட்ட நாளிலிருந்து அது ஈடு செய்யப்படும் வரை பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகிதத்தில் வட்டியைச் சுமக்கும்.

3.3 சரக்கு மற்றும் சேவை வரி (ஜி.எஸ்.டி)செயல்படுத்தப்பட்டுள்ளதால், செயலாக்கக் கட்டணங்கள், ரத்தாக்கல் கட்டணங்கள் உட்பட ஆனால் இவை மட்டும் அல்லாமல் கட்டணங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட முன்பணத்திலிருந்து வரி(கள்) (அதாவது, ஐ.ஜி.எஸ்.டி அல்லது எஸ்.ஜி.எஸ்.டி & சி.ஜி.எஸ்.டி), பொருந்தும் விகிதத்தில் விதிக்கப்பட்டு மீட்கப்படும். கடன் பெறுபவர்(கள்) எதாவது காரணத்திற்காகப் பணத்தைச் செலுத்தத் தவறினால்/மறுத்தால், பிறகு அதைப் பொருந்தும் வட்டி விகிதத்துடன் மீட்க வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உரிமையுள்ளது. செயலாக்கக் கட்டணங்கள், ரத்தாக்கல் கட்டணங்கள் உட்பட ஆனால் இவை மட்டும் அல்லாமல் கட்டணங்கள் தொடர்பாகக் கடன் பெறுபவர்(கள்) முன்பணம் செலுத்திவிட்டு, ஒப்பந்தம் நிறுத்தப்பட்டால் அல்லது எதிர்காலத்தில் எதாவது காரணத்திற்காகக் கடன் பெறுபவர்(கள்) 'வசதியை' பெற மறுத்தால், முன்பணம் பெறும் போது வசூலித்த வரியை(களை) (அதாவது, ஐ.ஜி.எஸ்.டி அல்லது எஸ்.ஜி.எஸ்.டி & சி.ஜி.எஸ்.டி) திருப்பிக் கொடுக்காமல் இருக்கும் உரிமை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது.

3.4 **ஜி.எஸ்.டி இணக்க உட்கூறு:** கடன் பெறுபவர்(கள்) ஓர் பதிவு செய்யப்பட்ட நபர் மற்றும் ஜி.எஸ்.டி சட்டத்தின் கீழ் செல்லுபடி ஆகும் ஜி.எஸ்.டி.ஐ.என்/யு.ஐ.டி வைத்துள்ளார்(கள்) என்றால் ஜி.எஸ்.டி சட்ட இணக்கங்களுடன் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஐ இணங்கச் செய்ய

வி.டபில்யூ.எஃப்.பி.எல் மற்றும் கடன் பெறுபவரால்(களால்) பரஸ்பரம் முடிவு செய்யப்பட்ட காலகட்டத்தில் தகுந்த நேரத்திற்குள் செய்யப்பட்ட விநியோகத்துடன் ஆனால் அவை மட்டும் அல்லாமல் தொடர்புடைய ஜி.எஸ்.டி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இணக்கத்தை நிறைவேற்றும் காலத்தில் அவர் செய்த எதாவது திருத்தங்கள்/மாற்றங்கள் குறித்து வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளார். ஜி.எஸ்.டி சட்டத்துடன் இணங்காத காரணத்தால் ஒப்பந்தத்தை ரத்து செய்ய/முடிக்க அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஐ சீராக்குவதற்காக ஏற்படும் செலவை மீட்க வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உரிமை உள்ளது.

3.5 **வரி வசூல் உட்கூறு:** அரசாங்கத்தால் ஜி.எஸ்.டி சட்டத்தில் அறிவுறுத்தப் பட்டுள்ளது போல் கடன் பெறுபவருக்குச் செய்யப்படும் விநியோகத்தின் மதிப்பில் அவ்வப்போது பொருந்தும் சதவிகிதத்தில் ஓர் தொகையை வசூலிக்கும் உரிமை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது.

**4. <u>பிணையம்</u>**

4.1 வி.டபில்யூ.எஃப்.பி.எல், கடன் பெறுபவருக்கு(களுக்கு) கடன் வழங்கியது/வழங்க ஒப்புக்கொண்டது என்று கருத்தில் கொண்டு, கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டிய தொகைக்காக(பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது), கடன் மூலமாக வாங்கப்பட்ட/பெறப்பட்ட அல்லது வாங்கப் போகின்ற/பெறப் போகின்ற தயாரிப்பை(களை) அல்லது அதற்குச் சொந்தமான தயாரிப்பு(கள்) இப்பொழுது கடன் பெறுபவரின்(களின்) வசமிருந்தாலும் அல்லது இனி வசம் வரப் போகிறதென்றாலும் மற்றும் பிற்சேர்க்கை I-இல் உள்ள பொதுவான விதிமுறைகளில் விவரிக்கப்பட்டுள்ளது படி (இனிமேல் **"அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள்"** என்று குறிப்பிடப்படும்)கடன் பெறுபவர்(கள்), இதன் மூலம், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு சாதகமாக அதன் முதலாவது மற்றும் பிரத்தியேகமான கட்டணங்கள் மூலம் அடகு வைக்கின்றார். வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் அனுமதி பெற்று அல்லது பெறாமல், அடகு வைக்கப்பட்ட சொத்துகளில் சேர்ப்பு, மேம்பாடு அல்லது இணைப்புகள் கடன் பெறுபவரால்(களால்) அல்லது மற்றொருவரால் மற்றும் கடன் பெறுபவரின்(களின்) அல்லது



SPECIMEN COPY

மற்றொருவரின் செலவில் மேற்கொள்ளப்பட்டால், அதுவும் அடகு வைக்கப்பட்ட சொத்துகளின் ஓர் பகுதியாகவேக் கருதப்பட்டு, அடகு வைக்கப்பட்ட சொத்துகள் அத்தகைய சேர்ப்பு/மேம்பாடு அல்லது இணைப்புகளுக்கு முன்னதாக இருந்த முழுமையான மற்றும் மொத்த அளவிலேயே, அதே முறையில் இந்த இப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு உட்படும்.

4.2 அடகு வைப்பதன் மூலம் உருவாக்கப்படும் பிணை, இந்த ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டதும் அல்லது தயாரிப்பு(கள்) கடன் பெறுபவரிடம்(களிடம்)ஒப்படைக்கப்பட்டதும், இவற்றில் எவை முதலில் நிகழ்கிறதோ அப்பொழுதிலிருந்து உடனடியாக உருவாக்கப்பட்டதாகக் கருதப்படும். கடன் பெறுபவர்(கள்), ஏற்கனவே தயாரிப்பை(களை) சொந்தமாக வைத்திருந்தால், செயல்படுத்தப்படும் போதே, கடன் பெறுபவரால்(களால்) தயாரிப்பின்(களின்) விவரங்கள் வழங்கப்பட வேண்டும். கூறப்பட்ட விவரங்கள் இந்த ஒப்பந்தத்தின் பகுதியானதாகக் கருதப்படும்.

4.3 அடைமானத்தின் மூலம் தயாரிப்பின்(களின்) மீது உருவாக்கப்படும் கட்டணம் பின் வருவனவற்றிற்குப் பிணையாக அமையலாம்: (அ) கடன் பெறுபவரால்(களால்) செலுத்தப்பட வேண்டிய/ திரும்பச்செலுத்தப்பட வேண்டிய கடன், தவணைகள், இ.எம்.ஐ, அனைத்து செலவுகள், கட்டணங்கள் (முன் செலுத்தல் கட்டணம், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் பல்வேறு ஒப்புதல்கள்/என்.ஓ.சி/அனுமதிகள்/அறிவிப்புகள் வழங்கப்படுவதற்கானக் கட்டணங்கள் உட்பட), செலவினங்கள் மற்றும் கடன் சம்பந்தமாகச் செலுத்த வேண்டிய அனைத்து தொகை;

(ஆ) கடன் பெறுபவரால்(களால்) உடன்படிக்கைகள் மற்றும் கடமைகள் கடைப்பிடித்தல், செயலாக்குதல் மற்றும் நிறைவேற்றுதல்; (இ) செலவுகள் (வழக்கறிஞர் மற்றும் கட்சிக்காரரிடையே உட்பட), கட்டணங்கள் (பொருந்தும் படி பிற்சேர்க்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது உட்பட), அல்லது அவ்வப்போது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் குறிப்பிடப்படுவது போல், காசோலை/இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச் மாற்றுவதற்கான கட்டணங்கள், காசோலை/இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச் காசாகாதல் கட்டணங்கள், அல்லது பி.டி.சி முறை/ இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச் முறை தொடர்புடைய கட்டணங்கள், நிலை அறிவுறுத்தல்களைத் திரும்பிக் கொடுத்தல், திரும்பப்பெறுதல் அல்லது ரத்து செய்தல், பிணையின் காப்பீடு, பாதுகாப்பு, பேணுதல்(வாடகைகள், சொத்து வரிகள், கிடங்குக் கட்டணங்கள்/பாதுகாத்தல் கட்டணங்கள், பராமரிப்பு, வேலை செய்தல், வெளிச்செல்லுதல் உட்பட), கடைப்பிடித்தல், அமலாக்குதல், அல்லது பெறப்படுதலுடன் தொடர்புடையதாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு ஏற்பட்ட செலவினங்கள்(ஊதியம்/ ஆலோசகர்களின் கட்டணம்/ மதிப்பீட்டாளர்கள்/ ஆய்வாளர்கள்/ மதிப்பீடு செய்பவர்கள்/ தணிக்கையாளர்கள், வசூலிப்பு நிறுவனம் அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் பிரதிநிதி, ஆகியோருக்கு செலுத்த வேண்டிய மற்ற செலவினங்கள் உட்பட) அல்லது அவற்றால் செலுத்தப்பட்ட தொகைகள் மற்றும் அவற்றைத் திரும்பப் பெறுவதற்கு; (ஈ) மற்ற எதாவது தயாரிப்புகள்/சேவைகள் சார்ந்து செலுத்தவேண்டிய நிலுவைகள், வரிகள், கட்டணங்கள் மீதான வட்டி; (உ) அனைத்து கடன்களையும் செலுத்துதல் மற்றும் நிறைவேற்றுதல் அல்லது எந்த நேரத்திலும் வரையப்பட்ட உறுதிமொழி குறிப்புகள் அல்லது கருவிகளைக் கடன் பெறுபவர்(கள்) சுயேச்சையாக அல்லது மற்றவர்களுடன் இணைந்து ஏற்றுக்கொள்ள அல்லது ஒப்புக்கொள்ளச் செய்தால் அதை வி.டபில்யூ.எஃப்.பி.எல் தள்ளுபடி செய்யலாம் அல்லது இது தொடர்பாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய அல்லது ஏற்பட்ட அனைத்து வட்டிகள், தள்ளுபடி, விற்பனை பங்கு, கட்டணங்கள், செலவுகள் (வழக்கறிஞர் மற்றும் கட்சிக்காரரிடையே உட்பட) மற்றும் செலவினங்களுடன் வட்டியாக்கப்படலாம்; மற்றும் (ஊ) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடமிருந்து கடன் பெறுபவர்(கள்), அல்லது கடன் பெறுபவருடன்(களுடன்) தொடர்புடைய நபர் அல்லது நிறுவனத்தால் கடனாகப் பெறப்பட்ட, ஒப்பந்தமிடப்பட்ட அல்லது பெறப்பட்ட (பணத்தைக் கருத்தில் கொண்டாலும் இல்லாவிட்டாலும்)அல்லது எந்த முறையிலும் (உத்தரவாதங்கள், இழப்பீடுகள், ஏற்புகள், வரவுகள், கொள்முதல் மற்றும் குத்தகையின் கீழ் உட்பட) ஒப்பந்தமிடப்பட்ட பொறுப்புகள் (இனிமேல் கூட்டாக "**கடன் பெறுபவர்(கள்) நிலுவைகள்**" என்று குறிப்பிடப்படும்)

4.4 வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு திருப்திகரமான அத்தகைய வடிவில் மற்றும் முறையில், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் வரையறுக்கப்பட்ட அத்தகைய மற்ற அல்லது கூடுதலான பிணைகளை உருவாக்குவதைக் கடன் பெறுபவர்(கள்) மேற்கொள்வர். தயாரிப்பு(கள்) என்ற

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

சொல் அத்தகைய மற்ற/கூடுதலான பிணைகளை உட்படுத்தலாம் மற்றும் தயாரிப்பிற்கு(களுக்கு) பொருந்தும் அனைத்து கடமைகள்/உடன்படிக்கைகள்/பணிகள்/குறிப்பீடுகள் மற்றும் உத்தரவாதங்கள் அத்தகைய மற்ற/கூடுதலான பிணைகளுக்கும் பொருந்தலாம் மற்றும் தயாரிப்பு(கள்) என்ற சொல் அதற்கேற்றார் போல் பொருள் கொள்ளப்பட வேண்டும்.

4.5 கடன் பெறுபவரால்(களால்) இதன்மூலம் உருவாக்கப்பட்ட பற்றுகை/அடைமானம் இந்த ஒப்பந்தத்தின் விதிமுறையின் கீழ் நிலுவையிலுள்ள தொகை அல்லது கடன் பெறுபவரால்(களால்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகளை முழுமையாகச் செலுத்தும் வரை அல்லது நிறைவேற்றும் வரை மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் 'தடையின்மைச் சான்றிதழ்' வழங்கும் வரை முழு திறனுடன் தொடரும். இவ்வாறு உருவாக்கப்பட்ட பிணை மற்றும் கடன் பெறுபவரின்(களின்) பொறுப்பு/கடமை முடிப்பதனால் அல்லது நொடித்துப் போவதால் அல்லது இணைப்பால், மறுகட்டமைத்தலால் அல்லது நிர்வாகம் கையகப்படுத்தப்படுவதால், கடன் பெறுபவரின்(களின்) வியாபாரம் அல்லது சொத்துக்கள் கலைக்கப்படுவதால் அல்லது ஒதுக்கப்படுவதால் பாதிக்கப்படாது, பலவீனமடையாது அல்லது விடுவிக்கப்படாது.

4.6 மேலும், திருட்டு, வானிலையினால் ஏற்படும் சேதம் அல்லது தரமிழப்பு போன்ற எதாவது காரணத்திற்காக அடகு வைக்கப்பட்ட சொத்திற்கு ஏற்படும் இழப்பு அல்லது சேதத்திற்குக் கடன் பெறுபவர்(கள்) தான் பொறுப்பு. கடன் பெறுபவர்(கள்), அவரது(களது) சொந்த உடைமையாக மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் முறையாகப் பயன்படுத்தி, இயக்கி, பராமரித்து, அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை நன்றாகச் செயல்படும் நிலையில் வைத்திருக்க வேண்டும் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் முன் கூட்டிய எழுத்துப்பூர்வமான ஒப்புதல் இல்லாமல் அடகு வைக்கப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்த, இடமாற்ற அல்லது அகற்ற எந்த நபர், நிறுவனம் அல்லது அதிகார அமைப்புடனும் எந்த ஒப்பந்தம்/ஏற்பாடும் செய்யக்கூடாது. எங்கு எல்லாம் வி.டபில்யூ.எஃப்.பி.எல்- ஆல் தேவைப்படுகிறதோ, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் திருப்திக்காகக் கடன் பெறுபவர்(கள்) அடகு வைக்கப்பட்ட சொத்துக்களின் உற்பத்தியாளர்கள்/விநியோகஸ்தர்களுடன் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தங்களை ஏற்பாடு/ ஒப்பந்தம் செய்ய வேண்டும் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு எதாவது தொகை நிலுவையிலிருந்தால் அல்லது செலுத்த வேண்டி இருந்தால் அது வரை அத்தகைய பராமரிப்பு ஒப்பந்தங்களைப் புதுப்பித்து நடைமுறையில் வைத்திருக்க வேண்டும்..

4.7 ஒப்பந்தம் அமலிலுள்ள காலத்தில் எந்த நேரத்திலும், கடன் பெறுபவரால்(களால்) வழங்கப்பட்டுள்ள எதாவது பிணை, நிலுவையில் உள்ள கடனை ஈடு செய்ய போதவில்லை என்று வி.டபில்யூ.எஃப்.பி.எல் கருதினால், பிறகு வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் அறிவுரையின்

படி, அத்தகைய பற்றாக்குறையை ஈடு செய்வதற்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் ஏற்றுக்கொள்ளப்படக் கூடிய கடன் பெறுபவரின்(களின்) மற்ற சொத்துக்களை அடகு வைப்பது மற்றும்/அல்லது கடன் பெறுபவரின்(களின்) அசையும் அல்லது அசையாச் சொத்துக்களின் அடைமானம் அல்லது பற்றுகை உட்பட அத்தகைய கூடுதல் பிணை/பிணைகளைக் கடன் பெறுபவர்(கள்)வழங்கலாம்.

4.8 கடன் பெறுபவர்(கள்), அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை எதாவது மற்றும் அனைத்து பற்றுரிமைகள், கட்டணங்கள் மற்றும் வில்லங்கங்களின்றி வைத்திருத்தல் வேண்டும், சேமித்தல் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு சாதகமாக உருவாக்கப்பட்ட/உருவாக்கப்பட வேண்டிய முதலாவது மற்றும் பிரத்தியேகமான கட்டணம் தவிர, மற்றும் கடன் பெறுபவர்(கள்), அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை அடகு வைக்க, அடைமானம் வைக்க, ஈடு வைக்க, உரிமையாக்க, வில்லங்கப்படுத்த, விற்க, உரிமை மாற்றம் செய்ய, வாடகைக்கு விட, குத்தகைக்கு விட, வெளியே விட அல்லது உரிமையில் பங்கு வகிக்கக் கூடாது மற்றும் அவர்களது சொந்த செலவில் அத்தகைய அனைத்து சட்டங்கள், விஷயங்கள், பத்திரங்கள் மற்றும் ஆவணங்களைச் செயல்படுத்த வேண்டும் மற்றும் மேம்பட்ட உரிமைமூலம் வழங்க வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் தேவைப்படும் சரக்குகள் அல்லது அதன் எதாவது பகுதியை முழுமையாக உறுதி செய்து அடகு வைத்தல்.

4.9 விபத்து, தீவிபத்து, மின்னல் தாக்குதல், நிலநடுக்கம், கலவரம், உரிமையியல் குழப்பம், போர், திருட்டு, சிறு திருட்டு, வரம்பற்ற மூன்றாம் தரப்பினர் பொறுப்புகள், மற்றும் அவ்வப்போது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல்



SPECIMEN COPY

குறிப்பிடப்படும் அத்தகையா ஆபத்துகள் போன்ற அனைத்து ஆபத்துகளுக்கும் எதிராகக் கடன் பெறுபவர்(கள்) அடகு வைத்த சொத்துக்களை அதன் முழு சந்தை மதிப்பின் அளவிற்கு அவ்வப்போது முழுமையாக மற்றும் விரிவாகக் காப்பீடு செய்ய வேண்டும். இதன் படி எடுக்கப்படும் காப்பீட்டுத் திட்டம் கடன் பெறுபவர்(கள்) மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கூட்டுப் பெயரில் அல்லது கடன் பெறுபவரின்(களின்)பெயரில் இருக்கலாம் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் இத்தகைய காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் இழப்புப் பணம் பெறுநர் என்று விவரிக்கப்படும். அத்தகைய திட்டங்களின் மீதான அனைத்துத் தவணையையும் கடன் பெறுபவர்(கள்) முறையாகச் சரியான நேரத்தில் செலுத்த வேண்டும் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் முன்பு ஆய்விற்காக அசல் தவணை ரசீதையும் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் ஆவணத்திற்காக அதன் முறையாகச் சான்றளிக்கப்பட்ட நகலையும் வழங்க வேண்டும். பிணை அமலிலுள்ள காலத்தில் அத்தகைய காப்பீட்டின் திட்டங்கள் உயிர்ப்புடனிருப்பதை கடன் பெறுபவர்(கள்) உறுதி செய்ய வேண்டும் மற்றும் கடன் பெறுபவர்(கள்) அத்தகைய காப்பீட்டை ரத்து செய்யக்கூடிய எதையும் எந்த காரணத்திற்காகவும் செய்யக் கூடாது அல்லது செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4.10 கடன் பெறுபவர்(கள்) மேற்படி அடகு வைக்கப்பட்ட சொத்தை காப்பீடு செய்ய மற்றும் காப்பீட்டுத் திட்டத்தைப் பெற மற்றும்/அல்லது அதன் சான்றை வழங்கத் தவறினால், வி.டபில்யூ.எஃப்.பி.எல், சுயேச்சையாக, ஆனால் அவ்வாறு செய்ய வேண்டும் என்ற எந்த கடமையுமின்றி, அடகு வைக்கப்பட்ட சொத்தின் காப்பீட்டை ஏற்றுக்கொள்ளும் மற்றும்/அல்லது அதன் தவணையைச் செலுத்தும் மற்றும் இதன் மூலம் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் செலுத்தப்பட்ட மற்றும்/அல்லது இதனால் ஏற்பட்ட தொகை அனைத்தையும் கடன் பெறுபவர்(கள்) ஏற்றுக்கொண்டு வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு இழப்பீடு வழங்க வேண்டும் மற்றும் கடன் பெறுபவர்(கள்) அத்தகையத் தொகையைச் செலுத்தத் தவறினால், அத்தகைய தொகையை வி.டபில்யூ.எஃப்.பி.எல் உடன் கடன் பெறுபவருக்கு(களுக்கு)இருக்கும் கணக்கிலிருந்து கழிக்க வி.டபில்யூ.எஃப்.பி.எல் உரிமையுள்ளது மற்றும் அத்தகைய தொகை, பிற்சேர்க்கை I-இல் வழங்கப்பட்டுள்ள அதே விகிதத்தில் வட்டியைக் கொண்டிருக்கும்.

4.11 எதாவது விபத்தின் காரணமாக அடகு வைக்கப்பட்ட சொத்திற்கு எதாவது இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால், காப்பீட்டு நடவடிக்கை மீது வி.டபில்யூ.எஃப்.பி.எல் முதல் கோருரிமையைக் கொள்ளும் மற்றும் காப்பீட்டு நடவடிக்கையால் பெறப்படும் தொகையை வி.டபில்யூ.எஃப்.பி.எல், முற்றிலும் சுயேச்சையாக, சேதமடைந்த அடகு வைக்கப்பட்ட சொத்தை மற்ற அல்லது பழுது பார்க்கப் பயன்படுத்தலாம் அல்லது கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகளுக்கு எதிராகப் பயன்படுத்தலாம் அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல் உகந்தது எனக் கருதும் மற்ற முறையில் பயன்படுத்தலாம். மேலும், அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை முழுமையாக இழப்பு/சேதமடையும் போது, காப்பீட்டு நிறுவனத்தால் தீர்வாக வழங்கப்பட்ட கோருரிமைத் தொகை கடன் பெறுபவரின்(களின்) மொத்த நிலுவைத் தொகைக்கும் குறைவாக இருந்தால், மீதமுள்ள நிலுவைத் தொகையைக் கடன் பெறுபவர்(கள்) உடனடியாகச் செலுத்த வேண்டும். இதன் மூலம் வி.டபில்யூ.எஃப்.பி.எல் கடன் பெறுபவர்(கள்) சார்பாகச் செயல்பட்டு, கடன் பெறுபவரின்(களின்) சொந்த அபாயங்கள் மற்றும் செலவில், வி.டபில்யூ.எஃப்.பி.எல் தனது வட்டிகளைப் பாதுகாக்கப் பொருத்தமானது எனக் கருதும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனக் கடன் பெறுபவரால்(களால்) திரும்பப்பெறமுடியாத அளவிற்கு அனுமதி அளிக்கப்படுகிறது: (i) எதாவது காப்பீட்டின் கீழ் அல்லது தொடர்பாக எழும் எதாவது சர்ச்சையைச் சரிக்கட்ட, தீர்வடைய, சமரசம் செய்ய அல்லது மத்தியஸ்தம் செய்ய மற்றும் அத்தகைய சரிக்கட்டல், தீர்வு, சமரசம் மற்றும் அத்தகைய மத்தியஸ்தம் மூலம் பெறப்படுபவை கடன் பெறுபவர்(கள்) மீது செல்லுபடி ஆகும் மற்றும் பிணைப்பில் இருக்கும், மற்றும் (ii) எதாவது அத்தகைய காப்பீடு அல்லது அதன் கீழ்

செய்யப்பட்ட கோருரிமையின் கீழ் செலுத்தப்பட வேண்டிய அனைத்து தொகையையும் பெற மற்றும் அதற்காகச் செல்லுபடியாகும் ரசீதை வழங்க மற்றும் விதிமுறைகளுக்கேற்ப அத்தகையத் தொகையைப் பயன்படுத்த அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்- ஆல் பொருத்தமானது எனக் கருதப்படும் முறையில்.

4.12 ஒரு வேளை வி.டபில்யூ.எஃப்.பி.எல் காப்பீட்டுக் கோரிக்கைகள் அல்லது நடவடிக்கைகள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் எனத் தேர்வு செய்தால் மற்றும்/ அல்லது கோரிக்கைகளில்/தீர்வில் ஓர் பெரிய

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

தொகைக் கிடைக்கலாம் அல்லது கிடைக்க வேண்டும் அல்லது அத்தகைய சரிக்கட்டலுக்குப் பிறகு மீதமுள்ள கடன் பெறுபவரின்(களின்) நிலுவைத் தொகை மீது கடன் பெறுபவரின்(களின்) பொறுப்பைக் கேள்வி கேட்க உரிமை உள்ளது என்ற அடிப்படையில் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு எதிராகக் கோரிக்கையை எழுப்பக் கடன் பெறுபவருக்கு(களுக்கு) எந்த உரிமையும் இல்லை.

4.13 அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை வி.டபில்யூ.எஃப்.பி.எல் ஆய்வு செய்ய, எப்பொழுதெல்லாம் அடகு வைக்கப்பட்ட சொத்தை கொண்டுவரும் படி வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் அழைக்கப்படுகிறாரோ(களோ) அப்பொழுதெல்லாம், கடன் பெறுபவர்(கள்)வி.டபில்யூ.எஃப்.பி.எல், அதன் பணியாளர், பிரதிநிதி அல்லது அதன் முகவர்கள் முன்பு அடகு வைக்கப்பட்ட சொத்தை சமர்பிக்க வேண்டும். கடன் பெறுபவர்(கள்) மேலும், வி.டபில்யூ.எஃப்.பி.எல் மற்றும் அதன் அனுமதிக்கப்பட்ட பிரதிநிதிகள், பணியாளர்கள் மற்றும் முகவர்கள் எல்லா நேரங்களிலும் அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை ஆய்வு செய்யலாம் மற்றும் அந்த நோக்கத்திற்காக எந்த அறிவிப்புமின்றி, அடகு வைக்கப்பட்ட சொத்துக்கைல் இருக்கும் அல்லது வைக்கப்பட்டுள்ள வளாகத்திற்கு, கிடங்கிற்கு அல்லது வாகன கொட்டிலுக்குள் நுழையும் உரிமை உள்ளது என்று ஒப்புக்கொள்கிறார்(கள்).

4.14 கடன் பெறுபவர்(கள்), அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை அவராகவோ அல்லது அவரது பணியாளர்கள்/முகவர்கள் மூலமாகவோ எந்த வித சட்டவிரோத நடவடிக்கைக்கும் பயன்படுத்தக் கூடாது மற்றும் அத்தகைய காப்பீட்டுத் திட்டத்தை செல்லுபடியற்றதாக்கக் கூடிய எதையும் அல்லது எந்த செயலையும் செய்ய அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

4.15 வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் தேவைப்பட்டால் மற்றும் அறிவுறுத்தப்பட்டால், கடன் பெறுபவர்(கள்)வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு சாதகமாகத் தயாரிப்பு(கள்) மீதிருக்கும் பொறுப்பின் உண்மையைக் குறிக்கும் தகடு/ஸ்டிக்கரை அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் மீது இணைக்க வேண்டும், கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகளில் எதாவது பகுதி செலுத்தப்படாமல் இருக்கும் வரை அத்தகைய தகடு/ஸ்டிக்கர் தயாரிப்பு(கள்) மீது தொடர்ச்சியாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

## 5 <u>கடன் பெறுபவரின்(களின்) குறிப்பீடு, உத்தரவாதம் மற்றும் உடன்படிக்கைகள்:</u>

5.1 இதன் மூலம் கடன் பெறுபவர்(கள்) குறித்துக்காட்டி, உத்தரவாதம் அளிக்கின்றார்(கள்), அதாவது: (அ)விண்ணப்பப் படிவத்தில் கொடுக்கப்பட்டுள்ள/நிறப்பப்பட்டுள்ள அனைத்து விவரங்கள் மற்றும் விண்ணப்பத்துடன் சமர்பிக்கப்பட்ட ஆவணங்கள் எல்லா விதத்திலும் உண்மையில் சரியானவை, முழுமையானவை மற்றும் இன்றுவரைக்குமானவை என்று மற்றும் கடன் வழங்கல் முடிவை பாதிக்கக்கூடிய எந்த பொருள் விவரத்தையும் மறைக்கவில்லை என்று; (ஆ) இந்த ஒப்பந்தம் மற்றும் அதைத் தொடர்ந்து செயல்படுத்த வேண்டிய ஆவணங்களை செயல்படுத்தும் கடன் பெறுபவரின்(களின்) அதிகாரிகள் முறையாக அலுவலகத்தில் உள்ளனரா என்று மற்றும் இதை செயல்படுத்த அவர்கள் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டுள்ளனர் என்று; (இ) இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்த, ஒப்படைக்க மற்றும் செய்யக் கடன் பெறுபவருக்கு(களுக்கு)திறன் மற்றும் அதிகாரம் உள்ளது மற்றும் இந்த ஒப்பந்தத்தின் அங்கீகரிப்பு, செயல்பாடு, ஒப்படைப்பு மற்றும் செயலாக்கத்திற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் (பெருநிறுவன ரீதியான, சட்டரீதியான அல்லது வேறுவழியில்) எடுக்கப்பட்டுள்ளது; (ஈ) கடன்(கள்) பெறுவதற்கான தேவையான அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டுவிட்டது மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை முழுமையாகச் செலுத்தும் வரை மற்றும் கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகள் முழுமையாகத் திரும்பச்செலுத்தப்படும் வரை, அனைத்து நேரங்களிலும் அத்தகைய அனுமதிகளைச் செல்லுபடி ஆகக்கூடியதாகவும் உயிர்ப்புள்ளதாகவும் வைக்கப்படும்; (உ) முடிப்பதனால், நொடித்துப் போவதால், கலைப்பு, நிர்வாகம், மறுசீரமைப்பு அல்லது கடன் பெறுபவர்(கள்) அல்லது இதன் எதாவது அல்லது அனைத்து சொத்துக்கள் மற்றும் பொறுப்பின் பெறுநர், நிர்வாகியை நியமித்தலுக்காக, இவை பெருநிறுவன நடவடிக்கை அல்லது எதாவது நடவடிக்கை எடுக்கப்படவில்லை அல்லது சட்டரீதியான நடவடிக்கைகள் துவங்கப்படவில்லை மற்றும் கடன் பெறுபவருக்கு(களுக்கு) எதிராக மிரட்டவில்லை; (ஊ) இந்த ஒப்பந்தத்தில் உள்ள தேதியின் படி, பிணை, கடன் பெறுபவர்(கள்), அவர்களது வியாபாரம் அல்லது நடவடிக்கைகள், அல்லது அல்லது இந்த

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

ஒப்பந்தத்தின் கீழ் இதன் கடமைகளைச் செய்வதற்கான திறன், ஒவ்வொரு உத்தரவாதக் குறிப்பு மற்றும் அவ்வப்போது கடன் பெறுபவரால்(களால்) செயல்படுத்தப்பட்ட பிணை ஆவணங்கள் மீது கணிசமான எதிர்மறை பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய கடன் பெறுபவருக்கு(களுக்கு) எதிராக அல்லது பாதிக்கக்கூடிய வழக்கு,நடவடிக்கைகள், நிலுவையில் உள்ள சர்ச்சைகள் அல்லது மிரட்டல்கள் எதுவும் இல்லை; மற்றும் (எ)கடன் பெறுபவர்(கள்) அவர்களது இயக்குநர்/கூட்டாளி/உறுப்பினர் பணம் செலுத்தத் தவறியவர்/வேண்டுமென்றே பணம் செலுத்தத் தவறியவர் என்று

அறிவிக்கப்படவில்லை கடன் பெறுபவர்(கள்), பணத்தைச் செலுத்தத் தவறியவர்/ வேண்டுமென்றே பணத்தைச் செலுத்தத் தவறியவர் என்று கண்டறியப்பட்ட, ஒரு நிறுவனத்தின் இயக்குநர்/கூட்டாளி/உறுப்பினரைச் சேர்க்கக்கூடாது. ஒரு வேளை ஓர் நிறுவனத்தின் இயக்குநர்/கூட்டாளி/உறுப்பினரான ஓர் நபர் பணத்தைச் செலுத்தத் தவறியவர்/ வேண்டுமென்றே பணத்தைச் செலுத்தத் தவறியவர் என்று கண்டறியப்பட்டால், கடன் பெறுபவர்(கள்), அத்தகைய நபரை நீக்குவதற்கான துரிதமான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

5.2 இதன் மூலம் கடன் பெறுபவர்(கள்) மேலும் குறித்துக்காட்டி, உத்தரவாதம் அளித்து மற்றும் உடன்படிக்கை செய்வதாவது:

i) தயாரிப்பின்(களின்) தரம், நிலை, தகுதி மற்றும் செயல்திறன் மற்றும் உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரிடமிருந்து தயாரிப்பின்(களின்) ஒப்படைப்பைப் பெறுவது/உறுதி செய்வது கடன் பெறுபவரின் முழுமையான மற்றும் பிரத்தியேகமான பொறுப்பாகும் மற்றும் தயாரிப்பை(களை) ஒப்படைப்பில் தாமதம் (அல்லது ஒப்படையாமை) அல்லது சுணக்கக் கட்டணச் செலவு அல்லது தயாரிப்பின்(களின்) தரம், நிலை அல்லது தகுதி மற்றும் செயல்திறனில் குறைபாடு அல்லது மாறுபாடு அல்லது அதைச் சார்ந்து உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல் பொறுப்பாகாது. உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளர் அல்லது அத்தகைய உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரின் ஏதாவது முகவரால் தயாரிப்பு(கள்) சார்ந்து செய்யப்பட்ட குறிப்பீடுகள் அல்லது உத்தரவாதங்களுக்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல் பொறுப்பாகாது அல்லது பிணைப்பில் இருக்காது. கடன் பெறுபவர், தயாரிப்பை(களை) பழுது பார்க்க உற்பத்தியாளர்/வியாபாரிகள்/விற்பனையாளர்களால் அங்கீகரிக்கப்பட்ட இயந்திரப் பழுது பார்ப்பவர்/ சேவை மையத்தைத் தவிர மற்ற எந்த நபரையும் ஈடுபடுத்தக் கூடாது. கடன் பெறுபவர்(கள்), இதில் உள்ள தேதியிலிருந்து அல்லது தயாரிப்பு(கள்)ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து (எது தாமதமாக நிகழ்கிறதோ) மூன்று (3) நாட்களுக்குள் விலைப்பட்டியலின் நகலை வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் வழங்க வேண்டும் மற்றும் அத்தகையத் தயாரிப்பு(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு சாதகமாக அடகு வைக்கப்பட்டுள்ளது/ பிரத்தியேகமாகப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற உண்மையைக் குறிக்கும் விதத்தில் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு சாதகமான ஒப்புதலுடன், அத்தகையத் தயாரிப்பை(களை) மோட்டார் வாகனச் சட்டம், 1988-இன் கீழ் உகந்த பதிவு செய்யும் அதிகாரியிடம் பதிவு செய்து, தயாரிப்பை(களை)பதிவு செய்த நாளிலிருந்து மூன்று (3) நாட்களுக்குள் மற்றும் எந்த நிலையிலும் தயாரிப்பு(கள்)ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து அறுபது(60) நாட்களுக்குள் பதிவு சான்றிதழின்

சான்றளிக்கப்பட்ட நகலை வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் சமர்ப்பிக்க வேண்டும். தயாரிப்பின்(களின்) பதிவுச் சான்றிதழ், "ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடட்" பெயரில், பின்வரும் வார்த்தைகளுடன் வலியுறுத்தப்படும் என்று கடன் பெறுபவர்(கள்) பொறுப்பேற்கிறார் "மேலே விவரிக்கப்பட்டுள்ள தயாரிப்பு(கள்), கடன் ஒப்பந்தத்தின் கீழ், ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடட், சில்வர் யுதோபியா, 3-ஆம் தளம், ஏ விங், கார்டினல் கிரேசியஸ் சாலை, சகலா, கிழக்கு அந்தேரி, மும்பை 400 099-இடம் அடகு வைக்கப்பட்டுள்ளது".

ii ) கடன் பெறுபவர் (கள்), வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் முன்கூட்டிய எழுத்துப்பூர்வமான அனுமதியின்றி தயாரிப்பின் (களின்) பயன்பாட்டைச் சொந்தப் பயன்பாட்டிலிருந்து வணிகப் பயன்பாட்டிற்கோ அல்லது அதற்கு

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

நேர்மாறாக பயன்படுத்தக் கூடாது. கடன் பெறுபவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து தயாரிப்பை(களை) மாநிலம் அல்லது அத்தகையத் தயாரிப்பு(கள்)பதிவு செய்யப்பட்ட பகுதியில் / மாநிலம் அல்லது பகுதி முழுவதும் பயன்படுத்துவதற்குத் தேவையான அனைத்து அனுமதிகள் / உரிமங்களைப் பெற வேண்டும். இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்தும் நேரத்தில் தயாரிப்பு(கள்) குறித்த முழு விவரங்கள் (பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று தேவைக்கேற்ப எஞ்சின் எண்/சேஸ் எண்/வரிசை எண்/பதிவு எண் மற்றும் பல) இல்லையென்றால், கடன் பெறுபவர்(கள்) தயாரிப்பு(கள்) குறித்த அத்தகைய அனைத்து விவரங்களையும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் குறிப்பிடப்பட்ட முறையில் தயாரிப்பு(கள்) ஒப்படைக்கப்பட்ட அல்லது தகுந்த அதிகாரி/நபரிடமிருந்து அத்தகைய விவரங்கள் பெறப்பட்ட 3 (மூன்று)நாட்களுக்குள் வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் வழங்க வேண்டும்.

iii) எதாவது தயாரிப்பிற்கு (களுக்கு) எதிராக இருக்கும் கடனை முன் கூட்டியே முடிக்கும் எதாவது வசதியைப் பெற்றால், பிறகு கடன் பெறுபவர் (கள்) கடன் வழங்கப்பட்ட 3 நாட்களுக்குள்ளாக முன்னர் குறிப்பிடப்பட்ட பொறுப்பைப் பதிவுச் சான்றிதழ் மற்றும் பதிவு செய்யும் அதிகாரியின் பதிவிலிருந்து நீக்கி, அத்தகைய பதிவு செய்யும் அதிகாரியிடம் தயாரிப்பை (களை) மறு பதிவு செய்ய வேண்டும். மேலும், பதிவுச் சான்றிதழ், உட்கூறு 5.2 (i)-இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பிசைவைக் கொண்டிருக்க வேண்டும் மற்றும் அதன் மற்ற விதிமுறைகள் தேவையான மாறுதல்களுடன் உபயோகிக்கப்படும்.

iv) கடன் பெறுபவர்(கள்), கடன் பெறுபவரின்(களின்)பணி முறை, வேலை மற்றும் செயல்பாடுகளுக்குப் பொருந்தும், அத்துடன் தயாரிப்பு(கள்) மற்றும் அதன் பயன்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து சட்டங்கள், விதிகள், மற்றும் ஒழுங்குமுறைகளுடன் (சட்டரீதியான அல்லது வேறு வழியில்)இணங்கலாம் மற்றும் தயாரிப்பின்(களின்)சேமிப்பு, பயன்பாடு மற்றும்

செயல்பாட்டிற்குத் தேவையான அனைத்து காப்பீடு, உரிமங்கள், பதிவுகள், அனுமதிகள், அங்கீகாரங்கள் மற்றும் இசைவுகளைப் பெற்று அனைத்து நேரத்திலும் பயனுற வைத்திருக்க வேண்டும். ஒரு வேளை, தயாரிப்பை(களை) இறக்குமதி செய்ய வேண்டுமென்றால், கடன் பெறுபவர்(கள்), தேவையான அனைத்து இறக்குமதி உரிமங்கள் மற்றும் திறந்த நிலை போது உரிமத்தின் கீழ் தயாரிப்பின்(களின்) இறுதி விலை கூறல், தகுதி, நோக்கம் மற்றும் இறக்குமதியின் செல்லுபடி காலம் குறித்த தேவையான அனைத்து தகவல்களையும் பெற வேண்டும் மற்றும் தயாரிப்பின்(களின்)இறக்குமதியை பாதிக்கக்கூடிய இறக்குமதித் திட்டம். தகுதி வரம்பு மற்றும் நோக்கத்தில் செய்யப்படும் அனைத்து மாற்றங்கள் குறித்தும் அவ்வப்போது உடனடியாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு தெரிவிக்க வேண்டும்.

5.3 கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு பின் வரும் உரிமைகள் உள்ளது என்று ஒப்புக்கொள்கிறார்(கள்): (i) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கடன் விதிமுறைகளின் படி கணக்குகள் நல்ல நிலையில் பராமரிக்கப்பட்டு வந்தால், அவை பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய கட்டணங்களில் மற்றும் அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீது குறிப்பிட்ட வசதிகள், உறுப்பினருரிமை மற்றும் சேவைகளை வழங்கலாம்; (ii) கட்டணங்களைத் தளர்த்த அல்லது குறைக்க மற்றும் கடன் பெறுபவருக்கு(களுக்கு) முன் கூட்டியே அறிவிப்பை வழங்காமல் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு எந்த பொறுப்பும் இல்லாமல் அத்தகையப் பயனை எந்த நேரத்திலும் திரும்பப் பெற. இந்த ஒப்பந்தத்தை மீறியதால் கடன் முடிவுக்கு வந்தால் அதன் விளைவாக அத்தகைய வசதிகள், உறுப்பினருரிமை மற்றும் சேவைகள் தானாக நிறுத்தப்படலாம்.

5.4 ஒரு வேளை ஒன்றுக்கும் மேற்பட்ட கடன் பெறுபவர்(கள்) கூட்டாகக் கடனுக்கு விண்ணப்பித்தால், தயாரிப்பு(கள்) கூட்டாகக் கடன் பெறுபவர்(கள்) அனைவரின் பெயரிலும் இருந்தாலும் இல்லாவிட்டாலும், கடன் பெறுபவரின்(களின்) நிலுவையைத் திரும்பச்செலுத்த மற்றும் தீர்ப்பதற்கான கடன் பெறுபவரின்(களின்) பொறுப்பு, கூட்டாக மற்றும் பல்வேறுபட்டு மற்றும் இணை விரிவானதாக இருக்கும். கடன் பெறுபவர்(கள்) ஓர் சொந்த நிறுவனத்தில் தொழில் செய்யும் ஓர் தனிப்பட்ட நபராக இருந்தால், மேலே குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் பொறுப்புகளுக்குக் கடன் பெறுபவர்(கள்) தான் முழு பொறுப்பு மற்றும் கடன் சம்பந்தப்பட்ட அனைத்து தொகையையும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் திரும்பிச் செலுத்துவது/செலுத்துவது தனிப்பட்ட முறையில் கடன்



SPECIMEN COPY

பெறுபவரின் பொறுப்பாகும்.

5.5 இங்கே அமைந்துள்ள அல்லது அவர்களால் செய்யப்பட்ட ஒவ்வொரு குறிப்பீடுகள், அறிவிப்புகள், உத்தரவாதங்கள் மற்றும் உறுதிப்பாடுகள் எல்லா விதத்திலும் இந்த

5.6

ஒப்பந்தத்தில் உள்ள தேதியின் படி உண்மையானவை, சரியானவை, செல்லுபடியாகக் கூடியவை மற்றும் உயிர்ப்புடையவை மற்றும் ஒப்பந்த காலத்தில் இதைத் தொடரும் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் செயல்படுத்தல் மற்றும் ஒப்படைப்பு மற்றும் கடன் பெறுபவரின்(களின்) நிலுவையை முழுமையாகத் திரும்பச் செலுத்துதல்/செலுத்துதல்/தீர்த்தலிலிருந்து பிழைக்கும்.

6 **<u>நேர்மறை/எதிர்மறை உடன்படிக்கைகள்:</u>**

6.1 கீழே உள்ள படி வி.டபில்யூ.எஃப்.பி.எல் உடன் கடன் பெறுபவரின்(களின்) ஒப்பந்தம்:

6.1.1 மொத்த கடன் தொகையையும் நோக்கத்திற்காக மட்டும் பயன்படுத்த வேண்டுமே தவிர வேறு எதற்காகவும் அல்ல;

6.1.2 அனைத்து கடன்கள், தவணைகள், மதிப்பீட்டாளர்கள்/தணிக்கையாளர்கள்/வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் முகவர்கள்/பிரதிநிதிகளுக்குக் கொடுக்க வேண்டிய ஊதியம், காப்பீடு/ஆய்வு/மதிப்பீடு/இந்த விதிமுறைகளின் கடன் பெறுபவரின்(களின்) இணக்கம் குறித்த சரிபார்ப்பால் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு ஏற்படும் செலவுகள், வி.டபில்யூ.எஃப்.பி.எல் செலுத்திய நாளிலிருந்து செலவு ஈடுகட்டப்படும் வரை வரிகள் அதன் மேல் உள்ள வரிகளுடன் பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகிதத்தில் உட்படக் கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகள் முறையாகச் சரியான நேரத்தில் செலுத்தப்படும்/திரும்பச் செலுத்தப்படும் மற்றும் தீர்க்கப்படும் வரை, அது கடன் பெறுபவரின்(களின்) சொத்துக்கள் மீதுள்ளப் பொறுப்பாகும்.

6.1.3 தற்போதைய கடனுக்காகக் கடன் பெறுபவர்(கள்):

அ) கடன் விண்ணப்பப் படிவத்தில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று தயாரிப்பை(களை)வாங்குவதை நிறைவு செய்து, வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் வரி விலைப் பட்டியல் மற்றும் மற்ற கொள்முதல் ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும்;

ஆ) தயாரிப்பு(கள்) வாங்குவதைத் தாமதிக்கக்கூடிய எதாவது நிகழ்வு / சூழ்நிலைகள் குறித்து எழுத்துப்பூர்வமாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு அறிவிக்க வேண்டும்;

இ) இந்த ஒப்பந்தம்/ பரிவர்த்தனை ஆவணங்கள் அல்லது எதாவது மற்ற கருவிகள் மீது பொருந்தும் மொத்த முத்திரை வரியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

6.1.4 வாய் மொழியாகவும் எழுத்துப்பூர்வமாகவும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு அறிவிக்க வேண்டியவை:

i) எதாவது நிகழ்வு, சூழ்நிலை அல்லது கடவுளின் செயலால், எதாவது தயாரிப்பு(கள்) திருடு போனால் அல்லது இழந்தால் அல்லது சேதமடைந்தால்;

ii) இந்த ஒப்பந்தத்தின் கீழ் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமைகள் மீது எதிர்மறை விளைவு;

iii) முடித்தல், கலைத்தல், நொடித்தல், திவாலாதல், நிர்வகித்தல் அல்லது மறுசீரமைத்தல் காரணமாக அல்லது கடன் பெறுபவர் (கள்) அல்லது அதன் சொத்துக்களின்/மீது பெறுநர், நிர்வாகி அல்லது இது போன்ற அதிகாரியை நியமித்தல் காரணமாக எதாவது நீதிமன்றத்தில் கடன் பெறுபவரால் (களால்) அல்லது எதிராக எதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டால் அல்லது சட்டரீதியான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டால்;

iv) கடன் பெறுபவர் (கள்), அதன் சொத்துக்கள், அல்லது எதாவது தயாரிப்புக்கு (களுக்கு) எதிராகத் துவங்கப்பட்டு அல்லது அல்லது அச்சுறுத்தக்கூடிய அல்லது கடன் பெறுபவரின் (களின்) நிலுவைகளைத் தீர்க்கும் அதன் திறனைப் பாதிக்கக்கூடிய எதாவது வழக்கு, மத்தியஸ்தம், நிர்வாகம் அல்லது மற்ற நடவடிக்கைகள்;

v) கடன் பெறுபவர் (கள்) (அல்லது அதன் கூட்டாளி/அறங்காவலர்கள்/இயக்குநர்களில் எவராவது)



SPECIMEN COPY

மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவர் (கள்) அல்லது மற்ற கடன் பெறுபவரின் (களின்) இறப்பு

vi) எதாவது மாற்றங்கள், (i) கடன் பெறுபவர் (கள்) அல்லது அதன் வியாபாரத்தின் அரசியலமைப்பில், (ii) கடன் பெறுபவரின் (களின்) அங்கீகரிக்கப்பட்டக் கையொப்பதாரரில், (iii) கடன் பெறுபவரின் (களின்) வேலை, வியாபாரம், அல்லது தொழிலில், (iv) இடம்/முகவரியில் (அ) கடன் பெறுபவரின் (களின்) அல்லது அவர்களது அலுவலகங்கள் அல்லது குடியிருப்புக்கள் அல்லது வணிக இடம் அல்லது (ஆ) தயாரிப்பு (கள்) வைக்கப்பட்டுள்ள இடம்;

vii) ஒரு வேளை, கடன் பெறுபவர் (கள்), வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் புதிய முகவரியைத் தெரிவிக்கத் தவறினால், வி.டபில்யூ.எஃப்.பி.எல், தனது ஆவணத்தில் உள்ள முகவரியை இறுதியானது என்று கருதி அதன்படி ஜி.எஸ்.டி கட்டணமிடும்.

viii) இந்த ஆவணம் அல்லது எதாவது மற்ற பரிவர்த்தனை ஆவணங்கள் எதாவது விதத்தில் பொய்யானது அல்லது தவறானது என்று எதாவது அறிவிப்புகள், குறிப்பீடுகள், உத்தரவாதம், உடன்படிக்கை அல்லது நிபந்தனை அமையும் எதாவது நிகழ்வு நிகழ்தல்/நிலவுதல்;

6.1.5 உடனடியாக வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் ஒப்படைக்க வேண்டியவை: (அ) கடன் பெறுபவரால்(களால்) அது கடன்பட்டிருப்பவர்கள் (அல்லது அவர்களின் எதாவது பொதுப் பிரிவு)அனைவருக்கும் வழங்கப்பட்ட அனைத்து ஆவணங்களின் நகல்களை அவை வழங்கப்பட்ட அதேநேரத்தில்; (ஆ) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் அவ்வப்போது கடன் பெறுபவரின் (களின்) நிலுவைகள், கடன் பெறுபவரின் (களின்) வியாபாரம் மற்றும் செயல்பாடுகள், சொத்துக்கள் மற்றும் பலவற்றுடன் தொடர்புடையதாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு தேவைப்படும் அத்தகைய விளக்கப்பட்டியல் / தகவல்கள் / கணக்குகள் / பதிவுகள் / அறிக்கைகள் / ஆவணங்கள், நிதிசார் அல்லது வேறெதாவது;

6.1.6 தயாரிப்பு(கள்) மற்றும் கடன் பெறுபவரின்(களின்)வியாபாரம் குறித்துச் சரியான கணக்கு புத்தகத்தைப் பராமரிக்க வேண்டும் மற்றும் தயாரிப்பு(கள்) அல்லது கடன் பெறுபவர்(கள்) அல்லது வேறு எதாவதுடன் தொடர்புடையதாக வி.டபில்யூ.எஃப்.பி.எல் கேட்கும் உண்மையான ஆவணங்களைக் கொடுக்க;

6.1.7 அதன் தற்போதைய இருப்பு/அரசமைப்பைப் (பெருநிறுவனம் அல்லது வேறு எதாவது) பராமரிக்க மற்றும் பொருந்தும் அனைத்து சட்டங்களுக்கு (இயற்றுமுறை, வரிவிதிப்பு, சுற்றுச்சூழல் உட்பட) இணங்க அதன் வியாபாரத்தைத் தொடருதல்;

6.1.8 கடன் பெறுபவரின்(களின்) சுய அபாயத்தில் மற்றும் செலவுகளில் இந்த ஒப்பந்தத்தில் அல்லது பரிவர்தனை ஆவணங்களில் அல்லது தொகுக்கப்பட்ட தயாரிப்புகளுடன் (இதன் பின் வரையறுக்கப்படும்), (அ) கடன் பெறுபவர்(கள்) நிலுவைகளை நேரத்திற்குச் செலுத்துதல், (ஆ) பதிவுச் சான்றிதழ்/கள், ஆர்.சி. புத்தகம், விற்பனை விலைப்பட்டியல், காப்பீட்டுத் திட்டங்கள், சாலைப் போக்குவரத்து அலுவலகத்தால் (ஆர்.டி.ஓ) வழங்கப்பட்ட சாலை வரி ரசீதுகள், இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச் ஆணைகள், புதிய காசோலைகள், வழங்கலுக்கு பிந்தைய ஆவணங்கள் (சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால்) உட்பட எதாவது ஆவணம்/பதிவைக் கடன் பெறுபவர்(கள்), உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளர், சம்பந்தப்பட்ட எதாவது அதிகாரி அல்லது சம்பந்தப்பட்ட எதாவது மூன்றாம் தரப்பினரிடமிருந்து பெறுதல் (இ) கடன் பெறுபவரால்(களால்) வழங்கப்பட்ட எதாவது அல்லது அனைத்து பிணைகளையும் அமல்படுத்துதல் தொடர்புடையதாக உள்ள விதிகளைச் செயல்படுத்த வி.டபில்யூ.எஃப்.பி.எல் மூன்றாம் தரப்பு முகமைகளை நியமிக்கலாம் என்று கடன் பெறுபவரால்(களால்) ஒப்புக்கொள்ளப்படுகிறது. கடன் பெறுபவர்(கள்) அத்தகைய முகமைகளுடன் முழுமையாக ஒத்துழைக்க ஒப்புக்கொள்கிறார் மற்றும் கடன் பெறுபவரின்(களின்) குடியிருப்புகள் அல்லது அலுவலகங்கள் அல்லது பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட எதாவது மற்ற இடத்திற்கு வருகை

தர அல்லது தொலைப்பேசி அழைப்பைச் செய்ய அல்லது வேறு வழியில் கடன் பெறுபவரை(களை) தொடர்பு கொள்ள அத்தகைய முகமைகளுக்கு உரிமை உள்ளது என்று ஒப்புதல் அளிக்கிறார். அத்தகைய முகமைகளின் செலவுகள் மற்றும் கட்டணங்கள் மற்றும் மேலும் அவற்றால் ஏற்பட்ட செலவினங்கள் கடன் பெறுபவரால்(களால்) மட்டும் ஏற்றுக்கொள்ளப்பட்டுச் செலுத்தப்படும்.

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

6.1.9 கடனுக்காகச் செலுத்தப்பட்ட தொகைக்கான மின்னணு ரசீது அல்லது மின்னணு தகவல் தொடர்பைக் கடன் பெறுபவரிடம்(களிடம்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் அல்லது அதன் முகவர்கள் வழங்கலாம் என்று கடன் பெறுபவர்(கள்) ஒப்புக்கொள்கிறார்(கள்).

6.2 **<u>எதிர்மறை உடன்படிக்கைகள்</u>**

ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டிய தொகை மற்றும் நிலுவைத் தொகை அனைத்தும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் திருப்திக்காக முழுமையாகச் செலுத்தி முடிக்கும் வரை, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் அனுமதியின்றி கடன் பெறுபவர்(கள்) பின் வருவனவற்றைச் செய்ய மாட்டார்(கள்) என்று இதன் மூலம் கடன் பெறுபவர்(கள்) ஒப்புக்கொள்கிறார்(கள்):

6.2.1 இணைப்பு, பிரிப்பு, ஒருங்கிணைப்பு, மறுசீரமைப்பு, ஏற்பாட்டுத் திட்டம் அல்லது அது கடன் பட்டவர்களிடம் அல்லது பங்குதாரர்களிடம் சமரசம் செய்வது அல்லது எதாவது இணைவாக்கம் அல்லது மறுகட்டமைப்பு திட்டத்தை அமலாக்கல்;

6.2.2 ஊதிய பங்கை அறிவித்தல் அல்லது செலுத்துதல் அல்லது பங்குதாரர்களுக்குப் பகிர்தல் அல்லது அனுமதித்தல் (அ) ஊதிய பங்கு அறிவிக்கப்பட அல்லது செலுத்த அல்லது திருப்திகரமான வழங்கல்களைச் செய்த நாள் வரை கடன் சம்பந்தப்பட்ட நிலுவைகள் அனைத்தையும் செலுத்தும் வரை, அல்லது (ஆ) பணம் செலுத்தத் தவறினால் மற்றும் அது தொடர்ந்தால் அல்லது ஊதியப்பங்கின் அத்தகைய அறிவிப்பு அல்லது செலுத்தல் அல்லது பகிர்தல் அல்லது பகிர அனுமதிப்பதன் விளைவாக நிகழ்தல்.

6.2.3 அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை விற்றல், இடமாற்றல், குத்தகைக்கு விடுதல் அல்லது அகற்றுதல் அல்லது ஒப்பந்தமிடுதல் அல்லது அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது அதன் எதாவது பகுதியை மாற்றியமைத்தல்;

6.2.4 அதன் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் முன் கூட்டிய எழுத்துப் பூர்வமான ஒப்புதலின்றி மாற்றக்கூடாது, அத்தகைய நிலையில் பொருத்தமானது எனக் கருதப்பட்டால் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் ஒப்புதல் வழங்கப்படலாம்;

6.2.5 யாருக்கும் பிணையமாக நில்லாதது அல்லது கடன், மிகைப்பற்று அல்லது எதாவது சொத்தின் கொள்முதல் விலையைத் திரும்பச் செலுத்துவதற்கு உத்திரவாதமளித்தல்.

7 **<u>பணம் செலுத்தத் தவறும் நிகழ்வு</u>**

7.1 பின்வரும் நிகழ்வுகளில் ஒன்று அல்லது அதற்கு மேல் அல்லது அது போன்ற நிகழ்வுகள் நிகழ்ந்தால், ஒவ்வொன்றும் "**பணம் செலுத்தத் தவறும் நிகழ்வு**"என்று கருதப்படும்:-

7.1.1 அசல் அல்லது வட்டி அல்லது தவணைகள் அல்லது அதன் எதாவது பகுதியைத் தவணை தேதியில் (குறிப்பிடப்பட்டுள்ள முதிர்வில், விரைவுபடுத்துதல் மூலம் அல்லது வேறு வழியில்) அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தவேண்டிய மற்ற எதாவது தொகையைச் செலுத்த/திரும்பச் செலுத்தத் தவறுதல். :-

7.1.2 கடன் பெறுபவர்(கள்), உத்தரவாத அளித்தவர் அல்லது எதாவது மற்ற நபர் இந்த ஒப்பந்தம் அல்லது பரிவர்த்தனை ஆவணங்களின் கீழ் எதாவது உடன்படிக்கை, நிபந்தனை, கடமைகள் அல்லது பொறுப்பை நிறைவேற்றத் தவறினால் மற்றும் அத்தகைய நிகழ்வு, கடன் பெறுபவர்(கள்) அல்லது வேறு எதாவது நபருக்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் எழுத்துப்பூர்வமான அறிவிப்பு வழங்கப்பட்ட (வி.டபில்யூ.எஃப்.பி.எல் பணம் செலுத்தத் தவறும் இத்தகைய நிகழ்வு தீர்வு காண முடியாதது அல்லது பிணை உடனடி ஆபத்தில் உள்ளது என்றால், இந்த நிலையில், எந்த அறிவிப்பும் தேவைப்படாது) 7 (ஏழு) நாட்களுக்கு பிறகும் தொடர்ந்தால்.

7.1.3 கடன் பெறுபவர்(கள்) பின் வருவனவற்றில் தோல்வியடைதல் (i) அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை அவ்வப்போது முழுமையாகக் காப்பீடு செய்தல் மற்றும் சரியான நேரத்தில் அத்தகைய காப்பீட்டுத் தவணையைச் செலுத்துதல்; மற்றும் (ii) சாலை வரியைச் செலுத்த வேண்டிய நேரத்தில் செலுத்துதல்.

7.1.4 பின்வருவனவற்றை வழங்கத் தவறுதல் (i) ஒப்பந்தத்தின் உட்கூறு 4.10 மற்றும் உட்கூறு 5.2(i)-இன் படி வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு சாதகமாக அடைமானத்தின் ஒப்புதலுடன் தயாரிப்பின்(களின்)காப்பீட்டுத் திட்டம்;

SPECIMEN COPY

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்

(ii) ஒப்பந்தத்தின் உட்கூறு 5.2(i)-இல் குறிப்பிடப்பட்டுள்ளதின் படி குறிப்பிடப்பட்ட நேரத்திற்குள் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு விலைப் பட்டியல் மற்றும் பதிவுச் சான்றிதழ்(ஆர்.சி).

7.1.5 வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எழுத்துப் பூர்வமான ஒப்புதலின்றி, கடன் பெறுபவர்(கள்), தயாரிப்பை(களை) விற்றல், இடமாற்றல், அதன் பாகங்களை வசமாக்குதல், உள்வாடகை, கட்டணங்கள், வில்லங்கப்படுத்தல், அதன் மீது பற்றுரிமை உருவாக்குதல், அபாயத்திற்கு ஆட்படுத்துதல் அல்லது மாற்றியமைத்தல்.

7.1.6 இந்த ஒப்பந்தம் அல்லது எதாவது மற்ற பரிவர்த்தனை ஆவணத்தின் கீழ் குறிப்பீடு, உத்தரவாதம், அறிவிப்பு, உட்கூறுகள் அல்லது உறுதிப்பாடுகளை மீறுவது மற்றும் கடன் பெறுபவர்(கள்) எதாவது மோசடி செய்தால்/ இந்த ஒப்பந்தம் அல்லது பரிவர்த்தனை ஆவணங்களின் கீழ் தேவைப்படும் எதாவது தகவலை சமர்பிக்கத் தவறுதல்/மறைத்தல்.

7.1.7 கடன் பெறுபவர்(கள்) அல்லது உத்தரவாதிகள் வேண்டுமென்று அல்லது தானாகத் திவால் அல்லது நொடிப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கைக்கு ஆளாகலாம் அல்லது வேண்டுமென்று அல்லது தானாகக் கலையலாம், திவால் அல்லது நொடிப்பு நிலையை அடையலாம் என்று நியாயமான அச்சம் இருந்தால் அல்லது கடன் பெறுபவர்(கள்)/உத்தரவாதிகள் அவரது/அவர்களது/அதன் மறுசீரமைப்பு, கலைப்பு அல்லது நொடிப்பு அல்லது திவாலுக்கான நடவடிக்கை எடுத்தால் அல்லது எடுக்க நேரிட்டால் அல்லது அடகு வைக்கப்பட்ட சொத்துக்களின் எதாவது பகுதி அல்லது அனைத்தையும் அல்லது கடன் பெறுபவர்களின் மற்ற எதாவது சொத்துக்கள் மீது பெறுபவர் அல்லது கலைப்பவர் நியமிக்கப்பட்டால் அல்லது நியமிக்க அனுமதிக்கப்பட்டால் அல்லது அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் அல்லது கடன் பெறுபவரின்(களின்) மற்ற சொத்துக்கள் அல்லது அதன் எதாவது பகுதி மீது பற்று அல்லது கவனிக்கா நிலை விதிக்கப்பட்டிருந்தால் அல்லது சான்றிதழ் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் அல்லது கடன் பெறுபவரிடம்(களிடம்) இருந்து எதாவது நிலுவையை மீட்கத் தொடங்கினால் அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தீர்ப்புகள் அல்லது கட்டளைகள் கடன் பெறுபவருக்கு(களுக்கு) எதிராக வழங்கப்பட்டிருந்தால்.

7.1.8 கடன் பெறுபவர்(கள்) அல்லது அவர்களில் யாராவது ஒருவரின் இறப்பு/முறிப்பு அல்லது கடன் பெறுபவர்(கள்) அவர்களது எதாவது தொழிலை நிறுத்தினால் அல்லது நிறுத்துவதாக அச்சுறுத்தினால் அல்லது அவ்வாறு செய்யப்போவதாக அறிவிப்பு விடுத்தால் அல்லது கடன் பெறுபவரின்(களின்) வியாபாரம் அல்லது செயல்பாட்டிற்குத் தேவையான அல்லது அத்தியாவசியமான கடன் பெறுபவரின்(களின்) சொத்துக்களில் எதாவது அல்லது அனைத்தும் சேதமடைதல் அல்லது அழிக்கப்படுதல் அல்லது இந்த ஒப்பந்தத்தின் தேதியிலிருந்து கடன் பெறுபவரின்(களின்) தொழில், செயல்பாடு, நிர்வாகம் அல்லது உரிமையின் பொது இயல்பு அல்லது நோக்கத்தில், பாதகமான விளைவை ஏற்படுத்தும் எதாவது மாற்றங்கள் ஏற்பட்டால். சந்தை அறிக்கை, கடன் பெறுபவரின்(களின்) மோசமான மோசமான கடன் பெறும் தகுதியைச் சுட்டிக்காட்டுகிறது.

7.1.9 அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், எதாவது அதிகாரி அல்லது வேறு எதாவது நபரால் பறிமுதல், இணைத்தல், காவலில் எடுக்கப்பட்டால்(முயன்றால்)அல்லது எதாவது சட்டப்பூர்வமான அல்லது செயல்பாட்டு நடவடிக்கைகளுக்கு உட்பட்டுச் செய்யப்பட்டால் அல்லது அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள், விபத்து காரணமாக அபாயத்திற்கு உட்பட்டால், திருடப்பட்டால், சேதமடைந்தால், எதாவது காரணத்திற்காக அழிக்கப்பட்டால்,எதாவது காரணத்தினால் கண்காணிக்க முடியாமல் போனால் அல்லது இழப்பு ஏற்பட்டால்.

7.1.10 வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் கூடுதல் பிணைகள் தேவைப்படுகிறது என்று கருதும் அளவிற்கு அடகு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் மதிப்பு குறைந்தால் மற்றும் அத்தகைய கூடுதல் பிணை, எழுத்துப் பூர்வமாகக் கேர்கப்பட்ட பிறகும் வழங்கப்படவில்லை.

7.1.11 கடனுக்கான பிணை, இடரில் உள்ளது அல்லது பயன் முடிவுறுகிறது அல்லது சட்டவிரோதமானது, செல்லுபடியற்றது, அமல் படுத்த முடியாதது அல்லது பலன் தரத் தவறுதல் அல்லது நிறுத்துதல்.

7.1.12 கடன் பெறுபவர்(கள்) அல்லது எதாவது நபருக்கு (வி.டபில்யூ.எஃப்.பி.எல் உட்பட) இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது மற்ற எதாவது பரிவர்தனை ஆவணத்தின் கீழ் அவர்களது கடமைகளைச் செயல்படுத்துவது



SPECIMEN COPY

சட்டவிரோதமென்றால் அல்லது சட்டவிரோதமானால்.

7.1.13 கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகளில் எதாவது முதிர்ச்சி அடையும் போது அல்லது பணம் செலுத்தப்பட வேண்டிய போது அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் கேட்கப்படும் போது, கடன் பெறுபவரால்(களால்) செலுத்த முடியவில்லை என்றால் அல்லது எழுத்துப்பூர்வமாகத் தனது இயலாமையை ஒப்புக்கொண்டால்.

7.1.14 கடன் பெறுபவரின்(களின்) கடன்பட்ட நிலை தொடர்புடைய ஒப்பந்தம் அல்லது ஆவணத்தின் கீழ் அல்லது நிதி ஆதரவுக்காகக் கடன் பெறுபவர்கள் ஒப்பந்தம் செய்துகொண்ட நிதி நிறுவனங்கள் அல்லது வங்கிகள் அவர்களது ஆதரவு அல்லது அதன் எதாவது பகுதியைத் திரும்பப் பெற்றுக்கொள்வதனால் ஏற்படும் கடன் செலுத்தத் தவறும் நிகழ்வு (அல்லது கடன் செலுத்தத் தவறும் நிகழ்வாக அமையக்கூடிய, அறிவிப்பு கொடுக்கப்படுதல், நேரம் கழித்தல், கணிச நிலையின் உறுதிப்பாடு அல்லது வெறு எதாவது பொருந்தும் நிபந்தனைகளை நிறைவேற்றுதல் போன்ற நிகழ்வுகள்).

7.1.15 வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் சுய கருத்துப்படி, கடன் பெறுபவரின்(களின்) கடனை செலுத்தல்/திரும்பச் செலுத்தல் திறனில் பாதகமான தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நிகழ்வுகள், நிலைமைகள் அல்லது சூழ்நிலைகள் (சட்டத்தில் எதாவது மாற்றம் உட்பட) ஏற்பட்டால் அல்லது இருந்தால்.

7.1.16 கடன் பெறுபவர், கடன் வழங்கப்பட்ட 7 நாட்களுக்குள் வியாபாரிகள் அல்லது உற்பத்தியாளரிடமிருந்து தயாரிப்பை(களை) பெறவில்லை.

7.2 எதாவது பணம் செலுத்தத் தவறுவதாக அறிந்தால் மற்றும் பணம் செலுத்தத் தவறும் நிகழ்வாக எதாவது நிகழ்வு அமைந்தால் மற்றும் அதை நிவர்த்தி செய்ய எதாவது நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால் கடன் பெறுபவர் உடனடியாக வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் எழுத்துப் பூர்வமாக அறிவிக்க வேண்டும். பணம் செலுத்தத் தவறிய நிகழ்வா அல்லது இல்லையா என்று வி.டபில்யூ.எஃப்.பி.எல் எடுக்கும் முடிவே இறுதியானது மற்றும் கடன் பெறுபவர்(கள்) அதன் மீது பிணைப்பில் இருப்பர்.

## 8 <u>வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமைகள் மற்றும் தீர்வுகள்</u>

8.1 மேற்படி, பணம் செலுத்தத் தவறும் நிகழ்வு எதாவது நிகழ்ந்தால், இங்கு உள்ளதற்கு மாறாக எதாவது என்றாலும், வி.டபில்யூ.எஃப்.பி.எல் அதன் அலுவலர்கள், முகவர்கள் அல்லது பெயர்க் குறிப்பிடப்பட்டவர்கள் மூலம் தனித்து மற்றும் முழுவதும் சுயேச்சையாக, பின் வருவனவற்றில் எதாவது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதைச் செய்யும் உரிமை உள்ளது:

அ) கடன் கிடைக்கச் செய்ய அல்லது கிடைக்கச் செய்வதைத் தொடர்வதற்கான வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கடமை முடிவடைந்து விட்டது என அறிவித்தல்; மற்றும்/அல்லது

ஆ) கடன் மற்றும் திரண்ட அனைத்து வட்டி மற்றும் இந்த ஒப்பந்தம் மற்றும் கடனின் கீழ் அனைத்து செலவுகள், கட்டணங்கள், செலவினங்கள் மற்றும் நிலுவையில் இருக்கும் மற்ற தொகையை உடனடியாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டும் என்று அறிவிக்கலாம், உடனே அது உடனடி கெடுவாக மற்றும் கடன் பெறுபவரால்(களால்) செலுத்தப்பட வேண்டியதாக மாறும் மற்றும் கடன் பெறுபவர்(கள்) எந்த வித கூடுதல் அறிவிப்பு அல்லது மற்ற எந்த விதமான சட்ட ரீதியான நடவடிக்கையுமின்றி, அறிவிப்பின் விதிகளுக்கு இணங்கி கடன் மற்றும்/ அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய அனைத்து தொகையையும் செலுத்த வேண்டும்.

இ) உத்தரவாதம் எதாவது இருந்தால் அதை செயலாக்கவும்; மற்றும்/அல்லது

ஈ) நேர்மையான வழக்கு மூலம் அல்லது சட்டரீதியான நடவடிக்கை மூலம் அல்லது இரண்டும் அல்லது வேறு வழி (பெறுநரை நியமித்தல் உட்பட) உட்பட, சட்டத்தால் அனுமதிக்கப்பட்ட எதாவது உரிமை, அதிகாரம் அல்லது தீர்வை, இந்த ஒப்பந்தத்தில் உள்ள எதாவது உடன்படிக்கை, நிபந்தனை அல்லது விதிமுறையின் குறிப்பிட்ட செயல்பாட்டிற்காக அல்லது இந்த ஒப்பந்தத்தின் எதாவது விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை மீறியதற்கு எதிரான உத்தரவு அல்லது இந்த ஒப்பந்தத்தில் வழங்கப்பட்டுள்ள எதாவது அதிகாரம் அல்லது உரிமையைப் பயன்படுத்துவதற்கு உதவியாக, பயன்படுத்துதல்;



SPECIMEN COPY

மற்றும்/அல்லது

உ) கடனை அல்லது அதன் எதாவது பகுதியைத் திரும்பச்செலுத்தத் தவறுதல் உட்பட, பணம் செலுத்தத் தவறுதல் நிகழ்வு, பதினைந்து (15) நாட்களுக்குத் தொடர்ந்தால், இந்த ஒப்பந்தத்தின் மற்றும்/அல்லது அமலாக்கக்கூடிய மற்ற பரிவர்த்தனை ஆவணங்களின் விதிமுறைகளின் படி/இணங்க உருவாக்கப்பட்ட பிணையை அறிவிக்க மற்றும் கடன் பெறுபவருக்கு(களுக்கு) ஏழு நாட்கள் எழுத்துப் பூர்வமான அறிவிப்பை வழங்கி, அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் எங்கிருந்தாலும் நீதிமன்றம் அல்லது நீதிமன்ற

நடவடிக்கைகளின் (மொத்த கடன் அல்லது கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகள் திரும்பப் பெறப்பட்டதா என்று கருதாமல், இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது மற்ற பரிவர்த்தனை ஆவணங்களில் உள்ளதற்கு மாறான எதாவது என்றாலும் ) எந்த குறுக்கீடும் இல்லாமல் மீண்டும் உரிமையாக்கிக்கொள்ளும் உரிமை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது மற்றும் மேற்படி நோக்கத்திற்காக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு பின்வரும் உரிமை உள்ளது:-

i) கூறப்படும் வளாகம், வாகன கொட்டில் அல்லது கிடங்கினால் வி.டபில்யூ.எஃப்.பி.எல் மற்றும்/அல்லது அதன் பிரதிநிதிகளுக்கு எந்த பொறுப்பும் சேராமல், அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் வைக்கப்பட்டுள்ள அல்லது இருக்கும் வளாகம், வாகன கொட்டில் அல்லது கிடங்கினுள் நுழைந்து, அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை உரிமையாக்கிக்கொள்ள மற்றும் அதை இடமாற்ற அல்லது நகர்த்துவதற்கு மற்றும் அதைக் கடன் பெறுபவரின்(களின்) அபாயம், செலவு மற்றும் விளைவுகளில் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் பிரதிநிதியிடம் வைத்துக்கொள்ள. எனினும், அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் ஆபத்தில் உள்ளது மற்றும் மேலும் தாமதம் செய்தால் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் வட்டிகளை ஆபத்திற்குள்ளாக்கிவிடும் என்று வி.டபில்யூ.எஃப்.பி.எல் நம்பினால், அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை மறுவசப்படுத்துவதற்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல், கடன் பெறுபவருக்கு(களுக்கு) எந்த அறிவிப்பும் வழங்கக் கடமைப்பட மாட்டார்கள்;

ii) மேற்படி, அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை வி.டபில்யூ.எஃப்.பி.எல் வசப்படுத்திக்கொள்வதற்கு இணக்கமாக, வி.டபில்யூ.எஃப்.பி.எல், அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை அகற்றும் தனது எண்ணத்தைக் கடன் பெறுபவருக்கு(களுக்கு) தெரிவிக்கும் விதத்தில் ஏழு (7) நாட்களுக்கு முன்னதாக கடன் பெறுபவருக்கு(களுக்கு) அறிவிப்பை வழங்கி, கடன் பெறுபவர்(கள்), கடன் பெறுபவரின்(களின்) மொத்த நிலுவையையும் திரும்பச் செலுத்தி, அடகு வைக்கப்பட்ட சொத்துக்களைத் திரும்ப எடுத்துக்கொள்ள, கடன் பெறுபவருக்கு(களுக்கு) இறுதி வாய்ப்பை வழங்கலாம். கடன் பெறுபவர்(கள்), இறுதி அறிவிப்புடன் இணங்கத் தவறினால், அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் பொருந்தக்கூடியது என்று கருதுவதின் மீது, அனைத்து விதத்திலும் கடன் பெறுபவரின்(களின்) அபாயம் மற்றும் செலவில், பொது ஏலம் அல்லது தனிப்பட்ட ஒப்பந்தம் அல்லது வேறு வழியில் விற்பதன் மூலம், அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை அகற்றக் கடன் பெறுபவர் போல் வி.டபில்யூ.எஃப்.பி.எல் தேவையான

அனைத்து நடவடிக்கைகளையும் முழுமையாக மற்றும் திறம்பட எடுக்கலாம் மற்றும்/அல்லது அத்தகைய விதிமுறைகள் மீது, அடகு வைக்கப்பட்ட சொத்துக்களைப் பிடிப்பில் வைக்கலாம் அல்லது கடன் பெறுபவருக்கு(களுக்கு) எத்தகைய உரிமையும் இல்லாமல் மற்றும் அத்தகை நடவடிக்கை அல்லது நடவடிக்கை எடுக்காமையைக் கடன் பெறுபவருக்கு(களுக்கு) அறிவிக்க வேண்டும் என்ற எந்த கடமையும் இல்லாமல், அத்தகைய அடகு வைக்கப்பட்ட சொத்துக்களைப் பயன்படுத்தலாம், இயக்கலாம், மற்றவர்களுக்குக் குத்தகைக்கு விடலாம் அல்லது எதுவும் செய்யாமல் வைத்திருக்கலாம், வாடகைக்குக் கொடுக்கலாம். அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் வி.டபில்யூ.எஃப்.பி.எல் வசம் இருக்கும் போது எதாவது காரணத்தினால் அல்லது முன்னர் கூறப்பட்ட வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எதாவது உரிமைகள் அல்லது தீர்வுகளைப் பயன்படுத்துவதால் அல்லது பயன்படுத்தாததால் அடகு வைக்கப்பட்ட சொத்துக்களின் இழப்பு, தேய்மானம் அல்லது சேதத்திற்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல்



SPECIMEN COPY

பொறுப்பாகாது, எதாவது மதிப்பிழப்பு அல்லது குறைவு குறித்துப் பொறுப்பாகாமல் அல்லது கடமைப்படாமல் மற்றும் இதன் மூலம் வழங்கப்பட்டுள்ள எதாவது அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும் என்று கடமைப்படாமல் அல்லது அத்தகைய அதிகாரத்தைப் பயன்படுத்துவதனால் ஏற்படும் எதாவது இழப்பிற்குப் பொறுப்பேற்காமல் மற்றும் பயனுள்ள ரசீதை வழங்க மற்றும் கொள்முதலுக்கான தொகையை விடுவித்தல் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல், சரியானது என்று கருதும் விற்பனையை நிறைவு செய்வதற்கான அத்தகைய அனைத்து நடவடிக்கைகளையும் செய்ய வேண்டும் என்று கடமைப் படாமல் விற்பனை ஒப்பந்தத்தை ரத்து செய்ய அல்லது மாற்ற வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு அதிகாரம் உள்ளது. வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் செய்யப்பட்ட எதாவது விற்பனை முறைப்படுத்தல் அல்லது மற்ற ஏற்பாடுகளுக்குக் கடன் பெறுபவர் எந்த ஆட்சேபனையும் தெரிவிக்கக் கூடாது அல்லது எதாவது தரகர் அல்லது ஏலம் விடுபவர் அல்லது மற்ற நபர் அல்லது விற்பனை நோக்கத்திற்காக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் நியமிக்கப்பட்ட அதிகாரியால் அல்லது அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை இருப்புமாற்றம் செய்வதினால் ஏற்படும் எதாவது இழப்பிற்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல் பொறுப்பாகாது.

8.2 ஒரு வேளை, இந்த ஒப்பந்தத்தின் கீழ் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய நிலுவை முழுவதையும் செலுத்திய பிறகு வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கையில் உபரித்தொகை இருந்தால், சட்டப்பூர்வமாக அந்த உபரித்தொகையை வைத்துக்கொண்டு, அந்த நேரத்தில்

வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கைகளில் இருக்கும் கடன் பெறுபவருக்கு(களுக்கு) சொந்தமான மற்ற தொகைகளுடன் சேர்த்து, கடன் பெறுபவரிடம்(களிடம்) இருந்து வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு நிலுவை வைத்துள்ள தொகை எதாவது அல்லது அனைத்தையும் தீர்க்கும் அளவிற்கு எந்த அடிப்படையிலும் அல்லது அடிப்படையின் கீழும் பயன்படுத்தலாம், அத்தகைய நிலுவை, தனிப்பட்டதாக அல்லது கூட்டாக எதாவது மற்ற நபருடன் அல்லது நபர்களுடன், நிறுவனங்களுடன், கடன்கள் மூலம் நிறுவனம், தள்ளுபடி செய்யப்பட்ட பில்கள், பணத்தாள்கள், கடன்கள் மற்றும் அற்ற கடமைகள் எதுவானாலும், தற்போதையது நிலுவை மற்றும் செலுத்தவேண்டியது இல்லை என்றாலும் அல்லது கடன் பெறுபவருக்கு(களுக்கு) அல்லது சரியீடு சட்டத்திற்கு எதிராக அல்லது இணைபோக்குக் கடன் மூலம் வி.டபில்யூ.எஃப்.பி.எல் கொண்டுள்ள வட்டியுடன், மற்ற கோரிக்கைகள் சட்டப்பூர்வமானது அல்லது நியாயமானது இல்லை என்றாலும். இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்த்தனை ஆவணங்களுடன் இணக்கமாக, அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை விற்பது அல்லது வேறு வழியில் பெறப்படும் தொகைகள், கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய நிலுவைத் தொகையை முழுமையாகத் திரும்பச் செலுத்தப் போதுமானதாக இல்லை என்றால், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்தப் படாத நிலுவையில் உள்ள மீதி தொகையை, வி.டபில்யூ.எஃப்.பி.எல் சுயமாக முடிவு செய்யும் முறையில் கடன் பெறுபவரால்(களால்) செலுத்தப்பட வேண்டும் மற்றும் அத்தகையப் பணம் செலுத்தல் கடன் பெறுபவரால்(களால்) அதற்கிணங்கச் செய்யப்பட வேண்டும்.

8.3 கடன் பெறுபவரின்(களின்) தனிப்பட்ட அபாயத்தில் மற்றும் செலவில், கடன் பெறுபவரின்(களின்) நிலுவையை வசூலிக்க அல்லது கடன் பெறுபவரால்(களால்) வழங்கப்பட்ட எதாவது மற்றும் அனைத்து பிணையை அமல்படுத்த அல்லது உட்கூறு 6.1.8-இல் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது கடன் பெறுபவரால்(களால்) தேர்வு செய்யப்பட்ட தொகுக்கப்பட்ட தயாரிப்புகள் தொடர்புடைய நோக்கத்திற்காக ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட முகவர்கள்/நபரை(களை) ஈடுபடுத்தும் உரிமை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் அத்தகைய நபருக்கு(களுக்கு) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் பொருத்தமானது என்று கருதப்படும் கடன் பெறுபவர்(கள்), பிணை மற்றும்/அல்லது அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பான அத்தகைய தகவல், உண்மைகள் மற்றும் புள்ளிவிவரங்களை வழங்கலாம். வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் பொருத்தமானது என்று கருதப்படும், அதனுடன் தொடர்புடைய அல்லது அதற்குத் தொடர்பான அனைத்து செயல்கள் மற்றும் விஷயங்களைச் செய்ய மற்றும் செயல்படுத்த உரிமை மற்றும் அதிகாரத்தை அத்தகைய நபருக்கு(களுக்கு) வி.டபில்யூ.எஃப்.பி.எல் வழங்கலாம்.

SPECIMEN COPY

8.4 கடன் பெறுபவர்(கள்), இதன் விதிமுறைகள் அல்லது கடன் பெறுபவரின்(களின்) திரும்பச் செலுத்துதல் கடமைகள் தொடர்பாக, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் வசூலிப்பு முகவர்கள்/பிரதிநிதிகளை அவர்களது குடியிருப்புகள் அல்லது அலுவலகங்கள் அல்லது பரஸ்பரம் ஒப்புக்கொள்ளப்பட்ட எதாவது மற்ற இடத்திற்கு வருகை தர அல்லது தொலைப்பேசி அழைப்பைச் செய்ய அனுமதிக்கிறார்.

8.5 ஒரு (அல்லது அதற்கு மேற்பட்ட) பணம் செலுத்தத் தவறும் நிகழ்வு ஏற்பட்டால், மேலே உள்ள உட்கூறில் குறிப்பிடப்பட்டுள்ள வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் பல்வேறு உரிமைகள் மற்றும் தீர்வுகளுடன் கூடுதலாக, கடன் பெறுபவரின்(களின்) பணிக்கு அமர்த்துபவரை அழைத்து பணிக்கு அமர்த்துபவரால் கடன் பெறுபவருக்கு(களுக்கு) வழங்கும் ஊதியத்தில்/கூலியிலிருந்து கழித்து, அதை, கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு வழங்க வேண்டிய நிலுவையை முழுமையாகத் தீர்க்கும் வரை வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் வழங்கும் படி கூறலாம். கழித்தலானது, வி.டபில்யூ.எஃப்.பி.எல், கடன் பெறுபவரின் பணிக்கு அமர்த்துபவரிடம் கூறும் (மற்றும் அறிவுறுத்தும்) அத்தகையத் தொகை மற்றும் அத்தகைய அளவில் இருக்கலாம். கடன் பெறுபவர்(கள்), அத்தகையக் கழித்தலுக்கு எந்த வித ஆட்சேபனைகளையும் கொண்டிருக்க, அல்லது எழுப்ப/உருவாக்கக் கூடாது. கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கடன் பெறுபவரை(களை) பணியில் அமர்த்துபவரைக் கண்காணிக்கும் எந்த சட்டமும் அல்லது ஒப்பந்தமும், மேற்படி வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமையான, அத்தகைய கழித்தல் மற்றும் கடன் பெறுபவரை(களை) பணியில் அமர்த்துபவரால் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டுவதைத் தடுக்காது அல்லது கட்டுப்படுத்தாது, எனினும் கழிக்கப்பட்ட தொகை, கடன் பெறுபவரால்(களால்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய நிலுவைகளை முழுமையாகத் திரும்பச் செலுத்த முடியவில்லை என்றால், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்த வேண்டிய மீதமுள்ள நிலுவைகளை வி.டபில்யூ.எஃப்.பி.எல் சுயமாக முடிவு செய்யும் முறையில் கடன் பெறுபவரால் செலுத்தப்பட வேண்டும் மற்றும் கடன் பெறுபவர்கள் அதற்கிணங்க தொகையைச் செலுத்த வேண்டும்.

8.6 மேலே குறிப்பிடப்பட்டுள்ள வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் பல்வேறு உரிமைகளுடன் கூடுதலாக, பின்வருபவர்களை நியமிக்கும் உரிமையும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது: (i)தொழில்நுட்ப, நிர்வாக அல்லது எதாவது மற்ற தொழில் ரீதியான அறிவுரையில் ஈடுபட்டிருந்த எதாவது நபரை, கடன் பெறுபவரின்(களின்) வேலை மற்றும்/அல்லது அதன் வளாகம், தொழிற்சாலைகள், தொழிற்கூடங்கள் மற்றும் அலகுகள் உட்பட சொத்துக்களை

மேற்பார்வை இட்டு மற்றும் ஆய்வு செய்து, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு அறிக்கை சமர்ப்பிக்க;

(ii) எதாவது குறிப்பிட்ட பணிகளை மேற்கொள்ள அல்லது கடன் பெறுபவர் ஏற்றுக்கொண்ட நிதி அல்லது செலவு கணக்கு வைப்பு முறை அல்லது நடைமுறைகளை ஆய்வு செய்ய அல்லது ஒருங்கிணைந்த அல்லது அகத் தணிக்கையாளர்களாக அல்லது கடன் பெறுபவரின் (களின்) சிறப்புத் தணிக்கை நடத்துவதற்காக, எதாவது பட்டய கணக்காளர்கள்/விலைக் கணக்காயர்களை.

8.7 கடன் நிறுத்தி வைக்கப்பட்டாலும் அல்லது முடித்து வைக்கப்பட்டாலும், இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்களின் படி வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் அனைத்து உரிமைகள் மற்றும் தீர்வுகள், கடன் அல்லது கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகளை முழுமையாக வி.டபில்யூ.எஃப்.பி.எல் பெறும் வரை மற்றும் கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகள் முழுமையாகத் தீர்க்கப்படும் வரை தொடரும்.

8.8 கூடுதலாக, மேலே குறிப்பிடப்பட்டுள்ளதைச் சாராமல், பணம் செலுத்தத் தவறுவதால், எதாவது அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும்/அல்லது கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டிய தொகையைத் திரும்ப வசூலித்தல் உட்பட ஆனால் அவை மட்டும் அல்லாமல், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமையைப் பயன்படுத்துவதின் விளைவாக ஏற்படும் அனைத்து சட்டப் பூர்வமான மற்றும் மற்ற செலவினங்களுக்குக் கடன் பெறுபவர்(கள்) பொறுப்பாகலாம்.

8.9 ஒரு வேளை வி.டபில்யூ.எஃப்.பி.எல் தயாரிப்பை(களை) உடைமையாக்கி கொண்டால் அல்லது பணம் செலுத்தத் தவறும் நிகழ்வு ஏற்பட்டவுடன்/ஏற்பட்ட பிறகு கடனைத் திரும்பப் பெற்றால் மற்றும் கடன் பெறுபவர்கள், அவர்கள் செலுத்த வேண்டிய நிலுவைகளில் ஒரு பகுதியை ஏற்க மற்றும் கடன் பெறுபவரை(களை)

எதிர்காலத்தில் தவணைகளைத் திரும்பச் செலுத்துவதைத் தொடர அனுமதிக்க மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் (அல்லது அதன் பிரதிநிதி) இடமிருந்து தயாரிப்பை(களை) மீண்டும் பெற்றுக்கொள்ள, வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் கோரிக்கை விடுக்கலாம், வி.டபில்யூ.எஃப்.பி.எல் சுயமாக, பொருத்தமானது மற்றும் சரியானது என்று கருதும் அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் மீது அத்தகையக் கோரிக்கைகளை ஏற்றுக்கொள்ளலாம். கடன் பெறுபவரின்(களின்) அத்தகையக் கோரிக்கையை/களை அனுமதிக்கக் கூடாது என்று வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் எடுக்கப்படும் முடிவு இறுதியானது மற்றும் கடன் பெறுபவர்கள் அதன் மீது பிணைப்பில் இருப்பர்.

8.10 மேலே குறிப்பிடப்பட்டுள்ள தீர்வு, பிரத்தியேகமானதல்ல, ஆனால் அது சட்டப்படி வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு கிடைக்கும் மற்ற தீர்வுடன் கூடுதலாக இருக்கலாம். வி.டபில்யூ.எஃப்.பி.எல், இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவர்களின் உரிமை மற்றும் தீர்வுகளை அமல்

படுத்தும் நோக்கத்திற்காக வங்கியாளர்/கள் அல்லது நிதி நிறுவனம்/கள் அல்லது அது பொருத்தமானது என்று கருதும் மற்ற எதாவது நபர்களை அவர்களின் வழக்கறிஞராக/களாக நியமிக்கலாம்.

8.11 மேலே குறிப்பிடப்பட்டுள்ளவை என்றாலும், ஒரு வேளை கடன் பெறுபவர்(கள்) பணம் செலுத்தத் தவறுவதால் தயாரிப்புகளை மறுவுடைமையாக்கிக் கொண்ட பிறகு, கடன் பெறுபவர்(கள்) அந்த தேதியின் படி நிலுவையில் உள்ள தொகையை நிறைவு செய்தால்/செலுத்தினால் மற்றும் மேலும் பணம் செலுத்தவேண்டிய தேதியில் முறையாகத் தவணைகளைச் செலுத்துவதாகப் பொறுப்பேற்றுக் கொண்டால், பிறகு மறுவுடைமையாக்கப்பட்டத் தயாரிப்புகளை வி.டபில்யூ.எஃப்.பி.எல் திருப்பிக் கொடுக்கலாம் மற்றும் பணம் செலுத்தத் தவறுவதை வேண்டுமென்று/ வழக்கமாகக் கொண்டுள்ள கடன் பெறுபவருக்கு(களுக்கு) தவிர, கடன் தொடரலாம்

8.12 கடன் பெறுபவர்(கள்) இங்குள்ள பிற்சேர்க்கை உட்பட இந்த ஒப்பந்தம் அல்லது எதாவது பரிவர்தனை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து கட்டணங்களையும் செலுத்த ஒப்புக்கொள்கிறார்(கள்). கடன் பெறுபவர்(கள்), காசோலை காசாகாதக் கட்டணங்கள், வருகைக் கட்டணங்கள், மறுவுடைமையாக்கல் கட்டணங்கள், சட்டக் கட்டணங்கள், வாகன நிறுத்தக் கட்டணங்கள், அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை அகற்றுவதற்காகப் பணியமர்த்தப்பட்ட நிறுவனங்களுக்கானக் கட்டணங்கள், கிடங்கு/சேமிப்புக் கிடங்குக் கட்டணங்கள், ஏலக் கட்டணங்கள், அடகு வைக்கப்பட்ட சொத்துக்களைச் சந்தைப்படுத்த அல்லது பாதுகாக்க (காப்பீடு, வரிகள் மற்றும் பல உட்பட) ஆகும் செலவினங்கள் மற்றும் அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக ஏற்படும் எதாவது செலவினங்கள் மற்றும் கடன் பெறுபவர்(கள்) பணம் செலுத்தத் தவறுவதால் காரணமாக அல்லது அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை மறுவுடைமையாக்கும் போது அல்லது அதற்குப் பின்னர் ஏற்படும் இதரக் கட்டணங்கள் உட்பட வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமைகளை அமல் படுத்துவதுடன் தொடர்புடைய அனைத்து செலவுகள்/செலவினங்கள்/கட்டணங்களைச் செலுத்தவும் ஒப்புக்கொள்கிறார்.

8.13 கடன் பெறுபவருக்கு(களுக்கு) எதிரான வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கேட்பு அறிவிப்பு கடன் பெறுபவர்(கள்) பணம் செலுத்தத் தவறியுள்ளார் மற்றும் அவ்வாறு பெறப்பட்ட தொகை நிலுவையில் உள்ளது மற்றும் கடன் பெறுபவரால்(களால்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்தப்பட வேண்டியது என்பதற்கு இறுதியான மற்றும் முடிவான ஆதாரமாகும் மற்றும் மற்ற கடன் பெற்றவர்(கள்), பணம் செலுத்தத் தவறவில்லை அல்லது நிலுவையில் உள்ளது மற்றும் செலுத்தப்பட வேண்டியது என்று இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள தொகை செலுத்தப் பட வேண்டியதில்லை மற்ற கடன் பெறுபவர்(கள்) என்ற அடிப்படையில் அல்லது மற்ற எதாவது அடிப்படையில், அறிவிப்பை மறுத்துக் கூற உரிமை இல்லை.

9 **<u>கூடுதல் தயாரிப்புகள்</u>**

9.1 கடன் மற்றும்/அல்லது காப்பீட்டுத் தவணைக் கட்டணத்தை வசூலிப்பதற்கான வசதி, நீட்டிக்கப்பட்ட உத்தரவாதம் மற்றும் கூடுதல் தயாரிப்புக்கான (களுக்கான) பராமரிப்புத் தொகுப்பு [கூட்டாக "**தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்பு(கள்)**"] கிடைப்பது குறித்து வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் கடன்



SPECIMEN COPY

பெறுபவருக்கு(களுக்கு) தெரிவிக்கப்படும். கடன் மற்றும் தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்பு(கள்) தனித்தனியாகக் கிடைக்கும் என்று மற்றும் கடனுடன் சேர்த்து எதாவது தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்புகளை வாங்க வேண்டும் என்று கடமை இல்லை என்று அறிந்துள்ளதாகக் கடன் பெறுபவர்(கள்) உறுதிப்படுத்துகிறார். தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்பின்(களின்) தனிப்பட்ட மதிப்பீடு மற்றும் தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்பின்(களின்) விலை குறைப்பு மற்றும் பலன்களைப் பரிசீலித்த பிறகு, கடன் பெறுபவர் தானாக முன்வந்து பிற்சேர்க்கை II-இல் இருந்து IV-வரைக் குறிப்பிட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் மீது பின்வரும் தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்பை(களை) பெறத் தேர்வு செய்துள்ளார்.

***[வழிமுறைகள்: கடன் பெறுபவர் (கள்) தேர்வு செய்த தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு எதிராக டிக் ( ) செய்யவும் மற்றும் நிராகரித்த தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்புகளுக்கு எதிராகக் கிராஸ் ( ) செய்யவும். கடன் பெறுபவர்/கள் தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்புகளில் எதையும் வாங்க வேண்டாம் என்று தேர்வு செய்தால், இந்த உட்கூறு மற்றும் பிற்சேர்க்கை II, III, மற்றும் IV கடன் பெறுபவர்கள் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு பொருந்தாது]***☑☒

i) **காப்பீட்டுத் தவணைத் தொகையைப் புதுப்பித்தல்**: கடன் பெறுபவர் (கள்), தயாரிப்புக்காக (களுக்காக) பல்வேறு காப்பீட்டு நிறுவனங்களால் வழங்கப்படும் காப்பீட்டுத் திட்டங்களின் தனிப்பட்ட மதிப்பீட்டைச் செய்துள்ளார். அத்தகைய தனிப்பட்ட மதிப்பீட்டின் மீது, கடன் பெறுபவர்(கள்) இந்த ஒப்பந்தத்தின் பிற்சேர்க்கை –II-இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் மீது தயாரிப்பின்(களின்) காப்பீட்டுத் திட்டத்தை புதுபிக்கக் காப்பீட்டுத் தவணைத் தொகையைச் செலுத்துவதற்காக இந்த திட்டத்தைப் பெறத் தேர்வு செய்துள்ளார். கடன் பெறுபவர்(கள்), காப்பீட்டு நிறுவனத்திற்கு மாதத் தவணையில் செலுத்தவேண்டிய காப்பீட்டைப் புதிப்பித்தல் தவணைத் தொகையை இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்த வேண்டிய கடன் இ.எம்.ஐ உடன் வசூலிக்க வி.டபில்யூ.எஃப்.பி.எல் உதவும்;☐

ii) **நீட்டிக்கப்பட்ட உத்தரவாதம்**: சேவையை வழங்குபவரிடம் கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய நீட்டிக்கப்பட்ட உத்தரவாதக் கட்டணங்களை மாதத் தவணையாக பிற்சேர்க்கை III-இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் மீதான இ.எம்.ஐ உடன் வசூலிக்க வி.டபில்யூ.எஃப்.பி.எல் உதவலாம் மற்றும் இந்த நோக்கத்திற்காகக் கடன் பெறுபவர்(கள்) பிற்சேர்க்கை III-இல் இணைக்கப்பட்டுள்ள வடிவில் ஓர் கடிதத்தை வழங்க வேண்டும்;☐

iii) **பராமரிப்புத் தொகுப்பு**: சேவை மையம்/ பராமரிப்பு சேவையை வழங்குபவரிடம் கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய பராமரிப்புத் தொகுப்புக் கட்டணங்களை மாதத் தவணையாக பிற்சேர்க்கை IV-இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின் மீதான இ.எம்.ஐ உடன் வசூலிக்க வி.டபில்யூ.எஃப்.பி.எல் உதவலாம் மற்றும் இந்த நோக்கத்திற்காகக் கடன் பெறுபவர் (கள்) பிற்சேர்க்கை IV-இல் இணைக்கப்பட்டுள்ள வடிவில் ஓர் கடிதத்தை வழங்க வேண்டும்.☐

9.2 கடன் பெறுபவர்(கள்) ஒரு வேளை எதாவது தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்புகளைத் தேர்வு செய்தால், கடனின் இயல்பு அல்லது கால அளவை மாற்ற முடியாது என்று(கடனைத் திரும்பச் செலுத்துதல் அல்லது மறுதவணையிடப்படுதல் உட்பட) கடன் பெறுபவர்/கள் ஏற்றுக்கொள்கிறார்கள் மற்றும் ஒப்புக்கொள்கிறார்கள்.

9.3 கடன் பெறுபவர்கள் பணத்தைச் செலுத்தலாம் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல், அவ்வாறு வசூலிக்கப்பட்ட பணத்தை, பிற்சேர்க்கை II, III மற்றும் / அல்லது IV-இல் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் மீது, காப்பீடு வழங்குபவர் மற்றும்/அல்லது சேவை மையத்திற்கு அனுப்பலாம்.

9.4 வி.டபில்யூ.எஃப்.பி.எல் வழங்கப்படும் தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்புகள் ஒற்றைச் சாளர அனுமதி முறை என்ற இயல்பில் மட்டுமே கடன் பெறுபவருக்கு(களுக்கு) வழங்கப்படும் மற்றும் இது வி.டபில்யூ.எஃப்.பி.எல் தரப்பில்,



SPECIMEN COPY

சேவை அல்லது காப்பீட்டு நிறுவனம் மற்றும்/ அல்லது சேவை மையத்தின் தரத்திற்கான உத்தரவாதமாகக் கருதப்படக்கூடாது.

9.5 வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் பொறுப்பு, கடன் பெறுபவர்களால் வழங்கப்படும் பணத்தைக் காப்பீடு வழங்குபவர்கள் மற்றும்/அல்லது சேவை மையத்திற்கு, ஒப்புக்கொள்ளப்பட்ட மற்றும் பிற்சேர்க்கை II, III மற்றும்/ அல்லது IV-இல் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குள் அனுப்பும் அளவு வரம்பிற்குட்பட்டது; மற்றும் காப்பீடு வழங்குபவர் மற்றும்/அல்லது சேவை மையத்தால் வழங்கப்படும் சேவையின் தரத்தில் எதாவது குறைபாடு அல்லது பற்றாக்குறைக்காக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு எதிராக நிவாரணம் கோரக் கடன் பெறுபவர்களுக்கு உரிமை இல்லை.

9.6 ஒரு வேளை எதாவது தவணைகள்/இ.எம்.ஐ செலுத்தத் தவறினால், வி.டபில்யூ.எஃப்.பி.எல் சுயேச்சையாக, தொகுப்பாக்கப்பட்ட தயாரிப்புகளின் கீழ் அத்தகைய சேவைகளை நிறுத்தலாம் மற்றும் செலுத்த வேண்டிய அத்தகைய தொகையை மீட்பதற்குத் தேவையான சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுக்கும் உரிமை உள்ளது. நிலுவைகள், கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டிய தொகையின் ஓர் பகுதியாகலாம்.

9.7 எதாவது வசதிகள், உறுப்பினருரிமை, சேவைகளின் செயல்பாட்டில் குறைபாடு அல்லது மீறல் இருந்தால் அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல் அல்லது மற்ற எதாவது மூன்றாம் தரப்பினர் அதைச் செயல்படுத்தவில்லை என்றால், வி.டபில்யூ.எஃப்.பி.எல், எந்த விதத்திலும் பொறுப்பாகாது.

## 10 <u>இழப்பீட்டுறுதி:</u>

10.1 **பொதுவானது:** கடன் பெறுபவர்(கள்), வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எந்த உரிமையையும் சாராமல், வி.டபில்யூ.எஃப்.பி.எல், அதன் இயக்குநர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், அறிவுரைஞர்கள், முகமைகள், நியமிக்கப்பட்டவர்கள் அல்லது பிரதிநிதிகளை அனைத்து செலவுகள் (வழக்கறிஞர் கட்டணம் உட்பட), செலவினங்கள், அபராதங்கள், இழப்புகள், இழப்பீடு, சேதம், சேதங்கள், வழக்குகள், செயல்கள், நடவடிக்கைகள், கோரிக்கைகள், பொறுப்புகள், பின்வருவனவற்றால் எழும் எதாவது இயல்புடைய விளைவுகளிலிருந்து இழப்பீடளித்து, ஊறு விளையாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்:

அ) பணம் செலுத்தத் தவறுதல், தாமதித்தல் அல்லது செய்தல் மற்றும் செய்யாமல் இருத்தல் அல்லது இந்த ஒப்பந்தம் அல்லது பரிவர்தனை ஆவணங்களை மீறுதல் அல்லது எதாவது குறிப்பீடு, உத்தரவாதம், உடன்படிக்கை பொய்யானது, தவறானது, உண்மையற்றது அல்லது இனி பொருந்தாததாக மாறினால்;

ஆ) அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் தொடர்புடைய அதன் உரிமைகளை அமல் படுத்துதல்.

10.2 **<u>ஜி.எஸ்.டி இழப்பீட்டுறுதி:</u>**

10.2.1 ஜி.எஸ்.டி சட்டத்தால் கண்காணிக்கப்படும் வரி விகிதத்தில் மாற்றத்தின் காரணமாக வி.டபில்யூ.எஃப்.பி.எல் மீது எழும் பொறுப்புகளைச் சார்ந்து கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஐ பாதுகாக்க, இழப்பீடளிக்க மற்றும் ஊறு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளக் கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார். எனினும், ஒரு வேளை எதாவது நேரத்தில் ஜி.எஸ்.டி விகிதம் குறைக்கப்பட்டால், கட்டணத்தைக் குறைத்தல்/அதன் ஒரு பகுதியைத் திரும்பக் கொடுத்தல் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் விருப்பத்திற்குரியதாகும்.

10.2.2 மேலும், பணம் செலுத்தத் தவறுதல் அல்லது வேறு காரணத்திற்காகக் கடன் பெறுபவரிடம்(களிடம்) இருந்து நிலுவைகளை மீட்கும் காலத்தில் 'தயாரிப்புக்காக' அல்லது 'பிணைக்காக' வி.டபில்யூ.எஃப்.பி.எல் எதாவது வரி(கள்) (அதாவது ஐ.ஜி.எஸ்.டி அல்லது எஸ்.ஜி.எஸ்.டி & சி.ஜி.எஸ்.டி) செலுத்தி இருந்தால் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஐ பாதுகாக்க, இழப்பீடளிக்க மற்றும் ஊறு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளக் கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

10.2.3 மேலும், இந்த ஒப்பந்தத்திற்கு ஏற்ப செய்யப்பட்ட ரத்தாக்கல் கட்டணங்கள் என்று ஆனால் இதன் வரையறைக்குள் மட்டும் இல்லாமல் கட்டணமிடப்பட்ட எதாவது தொகை மீது வி.டபில்யூ.எஃப்.பி.எல் எதாவது



SPECIMEN COPY

வரி(கள்) (அதாவது ஐ.ஜி.எஸ்.டி அல்லது எஸ்.ஜி.எஸ்.டி & சி.ஜி.எஸ்.டி) செலுத்த வேண்டி இருந்தால் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஐ பாதுகாக்க, இழப்பீடளிக்க மற்றும் ஊறு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளக் கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார். எனினும், எதாவது சட்டத்தில் உள்ள எதுவாயினும், இந்த ஒப்பந்தத்தினுள் நுழையும் போது கட்டணமிடப்பட்ட வரி(கள்) (அதாவது ஐ.ஜி.எஸ்.டி அல்லது எஸ்.ஜி.எஸ்.டி & சி.ஜி.எஸ்.டி) தொடர்புடைய திருப்பித் தராமல் இருக்கும் உரிமை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது.

10.2.4 இந்த ஒப்பந்தம் அல்லது பரிவர்தனை ஆவணங்களின் நிறுத்தம் இங்குள்ள இழப்பீட்டுறுதிகளை பாதிக்காது.

**11 <u>தேர்ந்தெடுக்கப்பட்ட பகர அதிகாரம்</u>**

11.1 கடன் பெறுபவர்(கள்), பின்வரும் நோக்கங்களுக்காக எதாவது அல்லது அனைத்திற்காக அதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பகர அதிகாரமாக இருக்க வி.டபில்யூ.எஃப்.பி.எல் மற்றும் அதன் அலுவலர்கள், பணியாளர்கள், முகவர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளை இதன் மூலம் ஒப்புக்கொண்டு நியமிக்கிறார்(கள்):

i) அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் எங்கு இருக்கிறதோ அங்குச் சென்று அதை ஆய்வு மற்றும் மதிப்பீடு செய்ய.

ii) இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச் ஆணைகள் அல்லது காசோலைகள் வரையப்பட்ட வங்கி/கள் அல்லது அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் காப்பீடு செய்யப்பட்டுள்ளக் காப்பீட்டு நிறுவனங்கள் முன்பு தோன்ற, ஒத்திருக்க அல்லது சமாளிக்க. தொடர்புடைய படிவங்கள், விண்ணப்பங்கள், இ.சி.எஸ்/என்.ஏ.சி.எச் ஆணைகள், காப்பீட்டுத் திட்டங்கள், காப்பீடு செலுத்தியதற்கான ரசீதுகள் அல்லது எதாவது மற்ற ஆவணங்கள் அல்லது

தகவலைப் பெறுவதற்காக அல்லது எதாவது பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்காக அத்தகை வங்கி/கள் அல்லது காப்பீட்டு நிறுவனங்கள் கடன் பெறுபவர்(கள்) சார்பாக.

iii (அ) மேலே உட்கூறு 1.5-இன் படி விலை மற்றும் மற்ற தொகையை வசூலித்தல், (ஆ)விற்பனை விலைப்பட்டியலைச் சேகரித்தல் அல்லது (இ) தயாரிப்பை(களை) உடைமையாக்கிக் கொள்ளுதல்/மறுவுடைமையாக்கிக் கொள்ளுதல் உட்பட இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களுக்காக உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளர் முன்பு தோன்ற, ஒத்திருக்க அல்லது சமாளிக்க. தயாரிப்பை(களை) உடைமை/மறுவுடைமையாக்கிக் கொள்ளுதல் மற்றும்/அல்லது அதை உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளர் உதவியுடன் விற்றல்/இடமாற்றுதல்/அகற்றுதல்.

iv எவரது உடைமையாக இருந்தாலும் அடகு வைக்கப்பட்ட சொத்துக்கள் மற்றும்/அல்லது அது தொடர்பான ஆவணங்கள் எதாவது அல்லது அனைத்தையும் உடைமையாக்கிக் கொள்ள மற்றும் அவை ஆபத்தானது மற்றும் அழியும் இயல்புடையது என்றால் அவற்றை உடனடியாக அகற்ற.

v கடன் பெறுபவரின்(களின்) சார்பாக மற்றும் அனைத்து விதத்திலும் கடன் பெறுபவரின் அபாயத்தில் எதாவது அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை விற்க, அகற்ற மற்றும் அதன் விற்பனையில் கிடைத்த தொகையை முழுமையாக அல்லது எதாவது பகுதியைப் பெற மற்றும் அதன் ஒப்படைப்பிற்குத் தேவையான அல்லது உகந்த அனைத்து ஒப்பந்தங்கள், அறிவிப்புகள் மற்றும் கருவிகளைக் கையொப்பமிட மற்றும் செயல்படுத்த.

vi வட்டாரப் போக்குவரத்து அலுவலர், வரி அலுவலர், காவல் அதிகாரிகள் அல்லது மற்ற எதாவது அதிகாரிகள் அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல் அவசியமானது சென்று கருதும் எதாவது அங்கீகரிக்கப்பட்ட நபர் முன்பாகத் தோன்ற (அ) அடகு வைக்கப்பட்ட சொத்துகள்/தயாரிப்பின்(களின்) இடமாறலைப் பலன் விளைவாக்க, (ஆ)எதாவது தகவல் அல்லது ஆவணங்களைச் சேகரிக்க (பதிவுச் சான்றிதழ்கள், சாலை வரி



SPECIMEN COPY

செலுத்தப்பட்டதற்கான ரசீதுகள்).

vii எதாவது கோரிக்கை, வழக்கு, மனு அல்லது மற்ற சட்ட ரீதியான நடைமுறைகள் உட்பட, எதாவது அடகு வைக்கப்பட்ட சொத்துக்களை மீட்கத் தேவைப்படும் அத்தகைய அனைத்து நடவடிக்கைகளை எடுக்க மற்றும் கூறப்பட்டுள்ள நோக்கத்திற்காகத் தேவையான அனைத்து வழக்காடு அனுமதி மற்றும் ஆவணங்களைக் கையெழுத்திட மற்றும் செயல்படுத்த மற்றும் அத்தகைய வழக்கு அல்லது நடவடிக்கையின் சமரசம் அல்லது தீர்வு.

viii இந்த வழங்கல்கள் மற்றும்/அல்லது கடனின் கீழ் அல்லது தொடர்பாக மற்றும் கடன் பெறுபவர்(கள்) சார்பாகக் கடன் பெறுபவர்(கள்) செய்யக் கடமைப்பட்டிருக்கிறார் என்று அனைத்து பத்திரங்கள், இசைவு, சான்றாவணங்கள், படிவங்கள், விண்ணப்பங்கள், மனுக்கள், ரசீதுகள், ஆவணங்கள், ஒப்பந்தங்கள் மற்றும் எழுத்துருக்களில் கையொப்பமிட மற்றும் வட்டாரப் போக்குவரத்து அலுவலர், விற்பனை வரி அலுவலர், காவல் அதிகாரிகள், உறுதிப்படுத்தும் சார் பதிவாளர் அல்லது மற்ற எதாவது உகந்த அதிகாரி முன்பு தோன்றி, அதன் செயல்படுத்தலை ஒப்புக்கொண்டு அதைப் பதிவு செய்து கொள்ள.

ix) அனைத்து செயல்களையும் நிறைவேற்றுவதற்கோ அல்லது செய்வதற்கோ அல்லது பொதுவாக நிறைவேற்றுவதற்கோ மற்றும் செய்யவோ அல்லது நிறைவேற்றவோ அல்லது செய்யவோ அல்லது வெளியே எழும் அல்லது சம்பந்தப்பட்ட அனைத்து விஷயங்களிலும் விஷயங்கள் மற்றும் செயல்படுத்தப்பட்ட அனைத்து ஆவணங்களின் உட்கூறு சட்டங்கள் மற்றும் அனைத்து விஷயங்கள் குறித்த ஆவணங்கள் ஆகியவற்றை கடன் பெறுபவர் (கள்) தானாகவே செய்ய அல்லது செயல்படுத்த முடியும்.

x) மற்றும் மேற்படி பல்வேறு விஷயங்களைச் சிறப்பாக மற்றும் மிக விளைவுற செய்ய அவ்வப்போது அல்லது பொதுவாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் பொருத்தமானது என்று கருதும் அத்தகைய மற்ற நபர்கள், குழுக்கள், நிறுவனங்கள், அமைப்புகள் அல்லது முகமைகளை மேற்படி அத்தகைய செயல் அனைத்தும் அல்லது எதாவது செயல்படுத்த மற்றும் செய்ய அதன் மாற்றீடு அல்லது மாற்றீடுகளாக நியமிக்க மற்றும் அத்தகைய மாற்றீடு அல்லது மாற்றீடுகள், அவரை அல்லது அவர்களை அகற்றி, அவரது அல்லது அவர்களது இடத்தில் மற்றவரை அல்லது மற்றவர்களை நியமிக்கலாம்.

11.2 கடன் பெறுபவருக்கு(களுக்கு) எந்த வித முன்னறிவிப்பும் இன்றி மேலுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தக் கடன் பெறுபவர்(கள்) ஒப்புக்கொள்கிறார் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் அல்லது எதாவது மாற்றாள் அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் நியமிக்கப்பட்ட மாற்றாள் சட்டப்பூர்வமாக மேற்படி அதிகாரங்களைப் பயன்படுத்தலாம் என்று உறுதி செய்ய ஒப்புக்கொள்கிறார்.

11.3 மேலும் கடன் பெறுபவர்(கள்), ஆவணப் பத்திரமெழுதுதல், பத்திரங்களில் கையொப்பமிடுதல் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் மற்றும் அதன் அலுவலர்கள் இங்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து அதிகாரங்களையும் பயன்படுத்தத் தேவையான அத்தகைய எல்லாவற்றையும் செய்வது உட்பட இங்கு மேலே அமைக்கப்பட்டுள்ள அதிகாரங்களில் எதையாவது பயன்படுத்தும் நோக்கத்திற்கா வி.டபில்யூ.எஃப்.பி.எல் மற்றும் அதன் அலுவலர்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு அனைத்து உதவியையும் வழங்குவதாக ஒப்புக்கொள்கிறார்.

11.4 மேற்படி அதிகாரங்கள் மதிப்புறு கருதலுக்காக வழங்கப்பட்டுள்ளது மற்றும் அத்தகையது, கூறப்பட்டுள்ள கடன் மற்றும்/அல்லது இந்த வழங்கல்களின் கீழ் அல்லது பொறுத்து அல்லது தொடர்ந்து செலுத்த வேண்டிய தொகை நிலுவையில் உள்ள வரை மாற்றவியலாத இயல்பை உடையது என்று கடன் பெறுபவர்(கள்) ஒப்புக்கொள்கின்றனர் மற்றும் இதன் மூலம் , வி.டபில்யூ.எஃப்.பி.எல், அதன் அதிகாரிகள், பணியாளர்கள், முகவர்கள், அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் அல்லது மாற்றாள்/கள் சட்டப்பூர்வமாகச் செய்யும் அல்லது இங்குள்ள அதிகாரங்களைப் பயன்படுத்துவதால் செய்யப்படும் அனைத்தையும் மற்றும் எதுவானாலும், கடன் பெறுபவர்(கள்) உறுதி செய்கின்றனர்.

| | | |
|---|---|---|
| கடன் பெறுபவர்(கள்) | இணைக் கடன் பெறுபவர் | இணைக் கடன் பெறுபவர் |



SPECIMEN COPY

**12** **<u>சரியீடு</u>**

12.1 வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எந்த உரிமையையும் சாராமல், வி.டபில்யூ.எஃப்.பி.எல் உடன் கடன் பெறுபவரின்(களின்) எதாவது கணக்கில் கடன் பெறுபவரின்(களின்) கடனாக நிற்கும் கடன் பெறுபவரின்(களின்) அனைத்து தொகைக்கு எதிராக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு தலையாயப் பற்றுரிமை மற்றும் உரிமை உள்ளது மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் உடனான கடன் பெறுபவரின்(களின்) கணக்கிலிருந்து கழித்துக் கொள்ள அல்லது எதாவது தொகையை நிறைவாக்க, அசல் அல்லது வட்டி அல்லது இந்த ஒப்பந்தம் அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல் உடன் செய்யப்பட்ட மற்ற எதாவது ஒப்பந்தத்தின் கீழ் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டியவை அல்லது நிலுவைக்காக, வி.டபில்யூ.எஃப்.பி.எல் உடன் கடன் பெறுபவரின்(களின்) எதாவது கணக்கின் மீது கடன் பெறுபவருக்கு(களுக்கு) உரிமையான கடன் இருப்பைப் பயன்படுத்துதல்.

12.2 இங்கு உள்ள எதுவும், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமையான அல்லது சட்டத்தால் அல்லது வேறு வழியில் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமையாக்கப்பட, கடன் பெறுபவரின்(களின்) வழங்கல் அல்லது எதிர்கால பிணை, உத்தரவாதம், கடமைகள் தொடர்புடையதான, வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எதாவது பொதுவான அல்லது பிரத்தியேகப் பற்றுரிமை அல்லது சரியீட்டிற்கான உரிமை அல்லது எதாவது உரிமைகள் அல்லது தீர்வுகளைச் சாராது அல்லது பாதகமான பாதிப்பை ஏற்படுத்தாது.

12.3 வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் அனுபவிக்கப்படும் மற்ற எதாவது உரிமை அல்லது பற்றுரிமைக்கு கூடுதலாக மற்றும் சாராமல், மேலும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் உள்ள கடன் பெறுபவரின்(களின்) எதாவது அல்லது அனைத்து கணக்குகளை (நிலை வைப்பு உட்பட) மற்றும் அனைத்து கடன்கள் மற்றும் பொறுப்புகளை எந்த நேரத்திலும், கடன் பெறுபவருக்கு(களுக்கு)

முன்னறிவிப்பின்றி இணைக்க அல்லது ஒருங்கிணைக்க மற்றும் கடனாக நிற்கும் எதாவது தொகையை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு எதிராகக் கடன் பெறுபவரின்(களின்) எதாவது பொறுப்புகளை நிறைவு செய்வதற்காக, அத்தகைய பொறுப்புகள் நேரடியானது அல்லது வருநிகழ்வானது, முதன்மையானது அல்லது இணைவுருவானது மற்றும் கூட்டானது அல்லது தனித்தனியானதாக இருந்தாலும், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய கணக்குகளுக்கு சரியீடாக்கலாம் அல்லது மாற்றலாம் என்று கடன் பெறுபவர்(கள்)ஒப்புக்கொள்கின்றனர்.

**13** **<u>உரிமை மாற்றம்</u>**

வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எழுத்துப் பூர்வமான ஒப்புதலின்றி, கடன் பெறுபவர்(கள்), இந்த ஒப்பந்தத்தின் கீழ் அதன் அனைத்து அல்லது எதாவது உரிமைகள், பலன்கள் அல்லது கடமைகளை உரிமை மாற்றம் செய்யக் கூடாது. வி.டபில்யூ.எஃப்.பி.எல், எந்த நேரத்திலும் இந்த ஒப்பந்தம் அல்லது மற்ற பரிவர்தனை ஆவணங்களின் கீழ் அதன் அனைத்து அல்லது எதாவது உரிமைகள், பலன்கள் அல்லது கடமைகளை உரிமை மாற்றம் செய்யலாம். எதாவது அத்தகைய உரிமை மாற்றம் இருந்தாலும் கூட, கடன் பெறுபவர்(கள்), வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் அறிவிக்கப்பட்டால் ஒழிய, இந்த ஒப்பந்தத்தின் கீழ் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு அனைத்து பணம் செலுத்தல்களையும் தொடர வேண்டும் மற்றும் அத்தகைய அனைத்து செலுத்தல்களும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு செலுத்தப்பட்டவுடன், அத்தகைய செலுத்தல் தொடர்பான கடன் பெறுபவரின்(களின்) அனைத்து பொறுப்புகளுக்குமான முழு நிறைவேற்றமாக அமையும்.

**14** **<u>பிணையமாக்குதல்</u>**

14.1 கடன் பெறுபவருக்கு(களுக்கு) மேலும் எந்த அறிவிப்பும் கொடுக்காமல் மற்றும் கடன் பெறுபவரிடமிருந்து எந்த ஒப்புதலும் பெறாமல், கடன் பெறுபவரின்(களின்) முழு அல்லது எதாவது நிலுவைகள், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் தேர்வான எதாவது மூன்றாம் தரப்பினரிடம், வி.டபில்யூ.எஃப்.பி.எல் முடிவு செய்யும் அத்தகைய முறையில்



SPECIMEN COPY

(வி.டபில்யூ.எஃப்.பி.எல், உகந்தது என்று கருதினால், வாங்குபவர், நியமிக்கப்பட்டவர் அல்லது இடமாற்றப்பட்டவர் சார்பாகக் கடன் பெறுபவருக்கு(களுக்கு) எதிராக நடவடிக்கை எடுக்க வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமையைத் தக்க வைத்துக்கொள்ள வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உரிமை உள்ளது) மற்றும் அத்தகைய விதிமுறைகளில், முழுமையாக அல்லது பகுதியாக, விற்க, உரிமை

மாற்றம் செய்ய வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு முழு உரிமை மற்றும் முழு அதிகாரம் உள்ளது என்று கடன் பெறுபவர்(கள்) வெளிப்படையாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்கின்றனர். எதாவது அத்தகைய நடவடிக்கை மற்றும் எதாவது அத்தகைய விற்பனை அல்லது உரிமை மாற்றம், அத்தகைய மூன்றாம் தரப்பினரைப் பிரத்தியேகமாகக் கடன் கொடுத்தவர் அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல் உடன் கூட்டாகக் கடன் கொடுத்தவர் அல்லது மற்ற எதாவது நபராக ஏற்றுக்கொள்ளும் படி பிணைக்கிறது. அத்தகைய விற்பனை, உரிமை மாற்றம் அல்லது உரிமைகளைச் செயல்படுத்துதல் மற்றும் நிலுவைகளை மீட்டல் போன்ற, இது சார்பான எந்த செலவும், கடன் பெறுபவருக்கு(களுக்கு) உரியது. வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எழுத்துப் பூர்வமான ஒப்புதலின்றி, கடன் பெறுபவர்(கள்), இந்த ஒப்பந்தம் அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவரின்(களின்) எந்த ஒரு உரிமைகள், பலன்கள் அல்லது கடமைகளை உரிமை மாற்றம் செய்யக் கூடாது.

14.2 உட்கூறு 14.1-இன் மேற்படி விதிகளைச் சாராமல், வி.டபில்யூ.எஃப்.பி.எல், கடன் பெறுபவருக்கு(களுக்கு) முன்னறிவிப்பு வழங்காமல், கடன் அல்லது கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகள் முழுவதின் அல்லது பகுதியின் கடன் அபாயத்தை, பங்கேற்பு முறை மூலம் மற்ற எதாவது நபருடன் பகிரலாம். அத்தகைய பங்கேற்பைச் சாராமல், இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்களின் கீழ் வி.டபில்யூ.எஃப்.பி.எல் அனுபவிக்கும் அல்லது மீது நிலைநாட்டப்படும் அல்லது கொண்டுள்ள அனைத்து உரிமைகள், உரிமைப் பட்டியல், வட்டிகள், சிறப்பு அந்தஸ்து மற்றும் மற்ற பலன்கள் மற்றும் சிறப்புரிமைகள், செல்லுபடியானது, பயன் விளைவுடையது மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீது செயல்படுத்தக்கூடியது மற்றும் கடன் பெறுபவர்(கள்) இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்களின் கீழ் வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் அதன் அனைத்து கடமைகளை முழுவதுமாக நிறைவேற்றுவதைத் தொடர வேண்டும்.

14.3 அத்தகைய விற்பனை, உரிமை மாற்றம் அல்லது உரிமைகளைச் செயல்படுத்துதல் மற்றும் நிலுவைகளை மீட்டல் போன்ற, இது சார்பான எந்த செலவும், கடன் பெறுபவருக்கு(களுக்கு) உரியது.

**15** **<u>தவணை தவறுதல்</u>**

கடன் பெறுபவர்(கள்) இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடனை சரியாகத் திரும்பச் செலுத்தி வந்தால் ஆனால் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடமிருந்து பெற்ற வேறு எதாவது நிதி வசதியில் நிலுவை வைத்திருந்தால், பிறகு அத்தகைய நிகழ்வின் போது

வி.டபில்யூ.எஃப்.பி.எல் இந்த ஒப்பன்தத்தின் கீழ் கடன் பெறுபவரால்(களால்) உருவாக்கப்பட்ட பிணையை விடுவிக்க வேண்டிய கடமை இல்லை என்று கடன் பெறுபவர்(கள்) ஒப்புக்கொள்கிறார் மற்றும் இதன் மூலம் நிலுவையில் உள்ள அத்தகைய நிதிக்காகப் பிணையை நீட்டிக்கக் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு அதிகாரம் அளிக்கிறார். அதே போல், கடன் பெறுபவர்(கள்) இந்த ஒப்பந்தத்தின் கீழ் நிலுவை வைத்திருந்தால், வி.டபில்யூ.எஃப்.பி.எல் கடன் பெறுபவரால்(களால்) உருவாக்கப்பட்ட பிணையைக் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடமிருந்து பெற்ற மற்ற எந்த நிதி வசதிக்காகவும் விடுவிக்க வேண்டிய கடமை இல்லை என்று கடன் பெறுபவர்(கள்) ஒப்புக்கொள்கிறார் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் கீழ் உள்ள நிலுவைக்காகப் பிணையை நீட்டிக்கக் கடன் பெறுபவர்(கள்) பொறுப்பேற்கின்றார்.

**16** **<u>இடையீட்டுப் பொறுப்பு</u>**

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

16.1 இந்த ஒப்பந்தம் அல்லது எதாவது மற்ற ஒப்பந்தம் சார்பான இந்த ஒப்பந்தம் அல்லது கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவரால்(களால்) செய்யப்பட்ட பரிவர்த்தனையின் கீழ் மற்றும்/அல்லது மற்ற கடன்பட்ட நிலை சார்பாகக் கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவரால்(களால்) செலுத்தப்பட்ட தொகையை வி.டபில்யூ.எஃப்.பி.எல், முழுமையாகத் தனது சுய தேர்வில் பயன்படுத்தலாம் மற்றும் அத்தகைய உபயோகம் இறுதியானது மற்றும் கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவர்(கள்) மீது பிணைப்புடையது, அவ்வாறு மற்ற ஒப்பந்தங்கள் அல்லது கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவரால்(களால்) செய்யப்பட்ட பரிவர்தனை அல்லது மற்ற கடன் பட்ட நிலை சார்பாக உபயோகப்படுத்தப்பட்ட அத்தகைய தொகையை இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தவேண்டிய பொறுப்பில் கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவர்(கள்) தொடர்வர் என்று கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவர்(கள்) ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்துகின்றனர்.

16.2 கூடுதலாக, கடன் நிலுவைத் திரும்பச் செலுத்தப்பட்டாலும் கூட, இந்த ஒப்பந்தம் அல்லது கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவர்(கள்) மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடையே கையெழுத்திடப்பட்ட எதாவது மற்ற ஒப்பந்தத்தின் கீழ் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு சாதகமாக உருவாக்கப்பட்ட அனைத்து அல்லது எதாவது பிணை அல்லது எதாவது மற்ற பிணை ஆவணங்கள் அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல் உடனான வைப்பு அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் வசம் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருப்பவற்றை

உடைமையாக்கிக் கொள்ள/விற்க/உரிமை மாற்றம் செய்ய அல்லது அகற்ற மற்றும் அதை இந்த ஒப்பந்தம் அல்லது கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவரால்(களால்) செய்யப்பட்ட பரிவர்தனை அல்லது கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவரின்(களின்) கடன்பட்ட நிலையின் மீது வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் நிலுவையில் உள்ள தொகையை நிறைவு செய்வதற்காக உபயோகித்துக்கொள்ளக் கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது கூட்டுக் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு வெளிப்படையாக மற்றும் திரும்பப்பெற முடியாத படி அதிகாரம் அளிக்கிறார்கள். இந்த ஒப்பந்தம் மற்றும் இந்த ஒப்பந்தம் தொடர்பாகச் செயல்படுத்தப்பட்ட எதாவது பிணைய ஆவணத்தில் உள்ள விதிகள் இந்த சட்டப்பகுதியின் கீழ் தேவையான மாறுதல்களுடன் பிணையை நிறைவேற்றும் மற்றும் கைப்பற்றும் முறைக்குப் பொருந்தும்.

16.3 சரியீடு மற்றும் இடையீட்டுப் பொறுப்பு உரிமையைக் கடன் பெறுபவர்(கள்) அல்லது கூட்டுக் கடன் பெறுபவரில்(களில்) ஒருவரின் தொகையை மற்றொருவருக்கு எதிராகச் சரிக்கட்டப் பயன்படுத்தலாம் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

## 17 <u>கீழடக்கக் கடன்</u>

கடன் பெறுபவர்(கள்), அவர்களது குழு நிறுவனங்கள்/இணை உறுப்பினர்கள்/ இயக்குநர்கள், கூட்டாளிகள் மற்றும்/அல்லது அவர்களது நண்பர்கள் மற்றும் உறவினர்கள் அல்லது அவர்களில் யாராவது கடன், முன் பணம் மற்றும் மற்ற தொகையை முன் பணமாகப் பெற்றிருந்தால், இதன் மூலம் வழங்கப்படும் கடனுடன் ஒப்பிடும் போது கீழடக்கக் கடனாகக் கருதப்படும் என்று இதன்மூலம் ஒப்புக்கொண்டு, அறிவித்து, உறுதிப்படுத்தி, பொறுப்பேற்கிறார். கடன் மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தம் தொடர்புடைய மற்றும் அதன் கீழ் உள்ள வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் மொத்த நிலுவைகளையும் முழுமையாகத் திரும்பச் செலுத்தும் வரை, கடன் பெறுபவர்(கள்) அத்தகைய கடன்கள் மற்றும் முன் பணத்தை முழுமையாக அல்லது பகுதியாகத் திரும்பச் செலுத்தமாட்டார்கள் என்று அல்லது அதன் எந்த வட்டியையும் செலுத்த மாட்டார்கள் என்று கடன் பெறுபவர்(கள்) இதன் மூலம் அறிவித்துப் பொறுப்பேற்கிறார்கள்.

## 18 <u>தகவல்களை வெளிப்படுத்துதல்</u>

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்

SPECIMEN COPY

18.1 வி.டபில்யூ.எஃப்.பி.எல், உகந்தது மற்றும் அவசியமானது என்று கருதினால், பின்வருவன அனைத்தையும் அல்லது அவற்றில் எதையாவது கடன் தகவல் நிறுவனம் (இந்தியா) (சி.ஐ.பி.ஐ.எல்) அல்லது இது சார்பாக ஆர்.பி.ஐ-இன் மற்ற எதாவது முகமை அல்லது எதாவது சட்ட அதிகாரி அல்லது நிறுவனங்கள், குழு நிறுவனங்கள், வங்கிகள், நிதி நிறுவனங்கள், கடன் நிறுவனங்கள், முகமைகள், தரவு வங்கிகள் அல்லது சாத்தியமான நியமிக்கப்பட்டவை அல்லது மற்ற எதாவது மூன்றாம் தரப்பிற்கு (கூட்டாக "**கடன் நிறுவனம்**") வெளிப்படுத்த உரிமை உள்ளது:(i) கடன் பெறுபவர்(கள்) தொடர்புடைய தகவல்கள் மற்றும் தரவுகள்; (ii) கடன், அதன் விதிமுறைகள், பரிவர்தனை ஆவணங்கள் மற்றும் /அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு சாதகமாகக் கடன் பெறுபவரால்(களால்) வழங்கப்பட்ட மற்ற எதாவது பிணைகள், அவர்களது திரும்பச் செலுத்தல்/கடன் வரலாறு அல்லது அதனுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்ட/கருதப்படக்கூடிய எதாவது கடமைகளுடன் தொடர்புடைய தகவல்கள்/தரவுகள்/ஆவணங்கள்; (iii) கடன் பெறுபவர்(கள்) மேற்படி கடமைகளை நிறைவேற்றத் தவறினால் அதைக் குறித்து. இதன் மூலம் கடன் பெறுபவர்(கள்) அவரது/அவர்களது ஆதார் விவரங்களை சமர்ப்பிக்க மற்றும் அவராகவே/அவர்களாகவே எதாவது பயோமெட்ரிக்/உடல் சார் பரிசோதனைக்கு சமர்ப்பித்தல் உட்பட அவை அங்கீகரிக்கப்பட வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு முழு ஒத்துழைப்பு அளிக்க ஒப்புக்கொண்டு, அவரது/அவர்களது ஒப்புதலை வழங்குகின்றார்கள். இதன் மூலம் கடன் பெறுபவர்(கள்) பின்வருவனவற்றிற்குத் தனது/தங்களது ஒப்புதலை அளிக்கிறார்கள் (அ) அத்தகைய ஆதார் சம்பந்தமான விவரங்கள்/ஆவணங்கள்/தகவல்களை வி.டபில்யூ.எஃப்.பி.எல் சேமித்து வைத்துக்கொள்ள, மற்றும் (ஆ) அவற்றை அல்லது அவற்றில் எதையாவது கடன் நிறுவனம் உட்பட எதாவது மூன்றாம் தரப்பினருக்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல் பகிர.

18.2 வி.டபில்யூ.எஃப்.பி.எல் (அ) மேற்படி வெளிப்படுத்துதல் அல்லது தகவல்களை அவர்களால் பொருத்தமானது என்று கருதும் எதாவது முறையில் பயன்படுத்தலாம் அல்லது செயல்முறைக்குள்ளாக்கலாம், (ஆ) அவர்களால் வி.டபில்யூ.எஃப்.பி.எல்/நிதி நிறுவனங்கள் மற்றும் மற்ற கடன் வழங்குபவர்கள் அல்லது இது சார்பாக ஆர்.பி.ஐ-ஆல் குறிப்பிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட பயன்பாட்டாளர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட செயலாக்கப்பட்ட தகவல்கள், தரவு, ஆவணங்கள் அல்லது தயாரிப்புகளைக் கருத்தில் கொள்வதற்காக வழங்கலாம், அல்லது (இ) அதைக் கடன் பெறுபவர்(கள்) அல்லது அவர்களது குடும்ப உறுப்பினர்களின் மேலும் கடனுக்கான விண்ணப்பங்களை மதிப்பீடு செய்ய அடிப்படையாகக் கொள்ளுதல் அல்லது அதை மோசடியைத் தடுப்பதற்காகப் பயன்படுத்துதல்.

18.3 கடன் பெறுபவரால் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு அவ்வப்போது வழங்கப்படும் அனைத்து தகவல்கள், தரவு அல்லது தயாரிப்புகள், உண்மையானதாகவும் மற்றும் சரியானதாகவும் இருக்க வேண்டும்.

18.4 ஒரு வேளை, கடன் பெறுபவர்(கள்), கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகளைச் செலுத்த அல்லது தீர்க்கத் தவறினால், வி.டபில்யூ.எஃப்.பி.எல் மற்றும்/அல்லது கடன் நிறுவனம் அத்தகைய பணம் செலுத்தத் தவறுதல் குறித்த தகவல்களைக் கடன் பெறுபவர்(கள்) மற்றும்/அல்லது அதன் இயக்குநர்கள்/கூட்டாளிகள்/கூட்டு விண்ணப்பதாரர்களின் பெயருடன் பணம் செலுத்தத் தவறியவர்கள் என்று அத்தகைய முறையில் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல் மற்றும்/அல்லது ஆர்.பி.ஐ-ஆல் அதன் முழுமையான சுயத் தேர்வில் பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய ஊடகம் மூலம் வெளிப்படுத்தவும் அல்லது வெளியிடவும் தகுதியற்ற உரிமை உள்ளது.

18.5 இப்பொழுது அல்லது எதிர்காலத்தில் தகவல்/ஆவணங்களைப் பகிர்வதற்கு மற்றும்/அல்லது வெளிப்படுத்துவதற்கு மற்றும் அதன் காரணமாக அவர்களில் ஒருவர் மற்றும்/அல்லது மற்றவருக்கு ஏற்படும் ஏற்படும் எந்த விளைவுகளுக்கும் கடன் பெறுபவர்(கள்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஐ பொறுப்பாகக் கூற முடியாது. இந்த ஒப்பந்தம் நிறுத்தப்பட்ட பிறகு மற்றும் கடன் பெறுபவரின்(களின்) நிலுவைகள் திரும்பச் செலுத்தப்பட்ட பிறகு மற்றும் நிறைவு செய்த பிறகும் இந்த உட்கூறில் உள்ள விதிகள் செல்லுபடி ஆகும்.

**19** **<u>சட்டம்/மத்தியஸ்தம்/சட்ட எல்லை</u>**

19.1 கடன், இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்கள் (இந்த ஒப்பந்தத்தில் அல்லது அத்தகைய எதாவது

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

பரிவர்தனை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் ஒழிய) இந்தியச் சட்டங்களால் கண்காணிக்கப்பட்டு அதற்கு இணக்கமாக அமைக்கப்படும்.

19.2 இந்த வழங்கல்கள் அல்லது எதாவது விதத்தில் அது சம்பந்தமாக அல்லது அதன் அமைப்பு, பொருள் அல்லது விளைவு அல்லது இதன் கீழ் உள்ள தரப்பினரின் உரிமை மற்றும் பொறுப்பால் எழும் அனைத்து முரண்பாடுகள், வேறுபாடுகள் மற்றும்/அல்லது கோரிக்கைகள், மத்தியஸ்தம் மற்றும் ஒத்துழைப்பு சட்டம், 1996 அல்லது எதாவது சட்டத் திருத்தங்கள் அல்லது அதன் மறு சட்டமிடலின் விதிகளுக்கு இணங்க மத்தியஸ்தம் மூலம் தீர்வு காணப்பட வேண்டும் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் நியமிக்கப்படும் தனிப்பட்ட நடுவரிடம் குறிப்பிடலாம். ஒரு வேளை நடுவராகச் செயல்பட நியமிக்கப்பட்ட நபர் இறந்து, மறுத்து, புறக்கணித்து, இயலாமல் அல்லது திறமையற்று போனால், வி.டபில்யூ.எஃப்.பி.எல், அவரது

இடத்தில் மற்றொரு நபரை நடுவராக நியமிக்கலாம். இசைவுத் தீர்வு நடவடிக்கைகள், மும்பை அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் தேர்ந்தெடுக்கப்படும்/முடிவு செய்யப்படும் அத்தகைய மற்ற இடங்களில் மேற்கொள்ளப்படலாம். நடுவரால் வழங்கப்படுவ தான் இறுதியானது மற்றும் அது சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர் மீதும் பிணைப்பில் இருக்கும். செயல்முறை ஆணைகளின் மொழி ஆங்கிலமாக இருக்கலாம்.

19.3 மேலுள்ள உட்கூறு 19.2-ஐ சாராமல், இந்த ஒப்பந்தம், பரிவர்தனை ஆவணங்கள் மற்றும் அடகு வைக்கப்பட்ட சொத்துக்களில்/ தொடர்பாக எழும் அனைத்து சட்ட ரீதியான நடவடிக்கை/கள் மற்றும்/அல்லது செயல்முறை ஆணைகள், மும்பையில் உள்ள தகுந்த நீதிமன்றம் அல்லது தீர்ப்பாயத்தின் முன் கொண்டு வரப்பட்டு, கடன் பெறுபவர்(கள்) அந்த நீதிமன்றத்தின் பிரத்தியேக சட்ட எல்லைக்குக் கீழ்ப்படிய வேண்டும். வி.டபில்யூ.எஃப்.பி.எல், அதன் முழு விருப்பத்தில், இந்த ஒப்பந்தம் மூலம் எழும் எதாவது சட்ட ரீதியான நடவடிக்கை அல்லது செயல்முறை ஆணைகளை மற்ற எதாவது நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பொருத்தமான மற்ற மன்றத்தில் தொடங்கலாம் மற்றும் இதன் மூலம் கடன் பெறுபவர்(கள்) அந்த சட்ட எல்லைக்கு இணங்குகின்றனர்.

**20 <u>அறிவிப்புகள்</u>**

20.1 இந்த ஒப்பந்தம் அல்லது பரிவர்தனை ஆவணங்களின் கீழ் வழங்கப்படும் அனைத்து அறிவிப்புகள் அல்லது மற்ற தகவல் தொடர்புகள், கடன் பெறுபவரால்(களால்) வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு, பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிகளில் எழுத்துப்பூர்வமாக வழங்கப்படும். வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு வழங்கப்படும் அத்தகைய அறிவிப்பு, உண்மையில் அவை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் பெறப்பட்டு ஒப்புதல் அளிக்கப்பட்ட பிறகே பயன் விளைவுடையதாகக் கருதப்படும். இந்த ஒப்பந்தம் அல்லது பரிவர்தனை ஆவணங்களின் கீழ் வழங்கப்படும் அனைத்து அறிவிப்புகள் அல்லது மற்ற தகவல் தொடர்புகள், வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் கடன் பெறுபவருக்கு(களுக்கு), கையில் ஒப்படைப்பது, கொரியர், தொலைநகல், குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் கடன் பெறுபவரால்(களால்) பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள கைப்பேசி எண் அல்லது முகவரிகளில் வழங்கப்படலாம். அத்தகைய அறிவிப்பு அல்லது மற்ற தகவல் தொடர்புகள் செயல் விளைவுடையதாகக் கருதப்படும்:

(i)கடிதம் மூலம் அனுப்பப்பட்டால், நேரில் ஒப்படைக்கப்பட்டால் அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால், கடிதத்தைத் திரும்பப் பெறுதல் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கட்டுப்பாட்டிற்கு வெளியே இருக்கும் போது;

(ii) வி.டபில்யூ.எஃப்.பி.எல் அனுப்பிய அறிக்கையின் பெறுதலின் மீது, தொலை நகல், குறுஞ்செய்தி அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்பப்பட்டால்.

20.2 ஒரு வேளைக் கடன் பெறுபவர்(கள்), அவரது தொடர்பு முகவரியில் அல்லது விவரங்களில் எதாவது மாற்றங்கள் குறித்து எழுத்துப் பூர்வமாக வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் அறிவிக்கத் தவறினால், பிறகு இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறிவிப்பு/கடிதத் தொடர்பு சேவை வழங்கக் கடன் பெறுபவரால்(களால்) இறுதியாக வழங்கப்பட்ட முகவரி சரியானது மற்றும் போதுமானது என்று கருதப்பட்டு கடன்

கடன் பெறுபவர்(கள்) இணைக் கடன் பெறுபவர் இணைக் கடன் பெறுபவர்



SPECIMEN COPY

பெறுபவருக்கு(களுக்கு) சேவை வழங்கப்படும், அத்தகைய அறிவிப்பு "பணியாற்றாமல்" திருப்பி அனுப்பப்பட்டாலும் திருப்பி அனுப்பப்படாவிட்டாலும்.

**21 இதர**

21.1 தயாரிப்புகளுக்கான எதாவது உற்பத்தியாளர்/வியாபாரி/வழங்குபவர் யாரால் அல்லது யார் மூலமாக இந்த பரிவர்தனை அறிமுகப்படுத்தப்பட்டது, பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது அல்லது நடத்தப்பட்டதோ அவர்கள் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் ஓர் முகவர் என்று கருதப்படக் கூடாது மற்றும் அத்தகைய உற்பத்தியாளர்/வியாபாரி/வழங்குபவரால் கடன் பெறுபவருக்கு(களுக்கு) செய்யப்பட்ட விளக்கம் அல்லது கூற்றிற்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல் பொறுப்பாகாது என்று வெளிப்படையாகத் தெளிவுபடுத்தப்பட்டு அறிவிக்கப்படுகிறது.

21.2 அதன் வழக்கமான நடைமுறைக்கு ஏற்ப மற்றும் சட்டமுறையான தேவைகளுடன் இணக்கமாக பராமரிக்கப்படும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் கணக்கு புத்தகம்/ஆவணத்தில் செய்யப்பட்டுள்ள பதிவுகள் மற்றும்/ அல்லது வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் நியமிக்கப்பட்ட அதிகாரியால் கையெழுத்திடப்பட்ட அறிக்கை, இறுதியானது மற்றும் கடன் பெறுபவர்(கள்) மீது பிணைப்பில் இருக்கக் கூடியது. அத்தகைய பதிவுகள் மற்றும்/அல்லது அறிக்கை, கடன் சம்பந்தமாகப் பதிவு செய்யப்பட்ட கடன் பெறுபவரின்(களின்) கடமைகளின் இருப்பு மற்றும் அளவின் முதல்நோக்கு அறுதிச் சான்றாகும்.

21.3 இந்த ஒப்பந்தம் மற்றும் இங்கு இணைக்கப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்பட்டுள்ள மற்ற எதாவது ஆவணங்கள், இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது இதன் வருநிகழ்வான அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளை ஒருங்கிணைக்கும் மற்றும் இந்த கூறப்படு பொருள் தொடர்பான அனைத்து வாய்வழி பேச்சுவார்த்தைகள் மற்றும் முன்னர் எழுதப்பட்டவற்றிற்கு மாற்றாகும், இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளுடன் முரணாகாத மற்றும் இந்த ஒப்பந்தத்திற்கு முன்னதாக கூடுதலாக மற்றும் நிறைவுப்பொருளாக வழங்கப்பட்ட ஒப்புதல் கடிதத்தைத்

தவிர. இந்த ஒப்பந்தம் மற்றும் இங்கு இணைக்கப்பட்டுள்ள அல்லது இங்குக் குறிப்பிடப்பட்டுள்ள எதாவது ஒப்பந்தம் அல்லது ஆவணங்களின் விதிமுறைகள், நிபந்தனைகளில் மற்றும் விதிகள் எதாவது முரண்பாடு ஏற்பட்டால், பிறகு அத்தகைய நிகழ்வின் போது, இந்த ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகள் நிபந்தனைகள் மற்றும் விதிகள் மேம்படுத்தப்படும்.

21.4 வி.டபில்யூ.எஃப்.பி.எல்/ அதன் துணை நிறுவனம்/குழு நிறுவனங்கள் மேற்கொள்ளும் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக, கடன் பெறுபவரால்(களால்) வழங்கப்பட்ட இந்த ஒப்பந்தம் மற்றும் பரிவர்தனை ஆவணங்களில் உள்ள தகவல்கள் மற்றும் விவர சேகரிப்புகளின் போது, நுகர்வோர் அறிக்கைகள் உட்பட, புற ஆதாரங்கள் மூலம் பெறப்படும் தகவல்களைப் பயன்படுத்தும் உரிமை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது. வி.டபில்யூ.எஃப்.பி.எல், இந்த தகவலை, கடன் பெறுபவருக்கான(களுக்கான) சந்தைப்படுத்தல் வாய்ப்புகளை உருவாக்க வி.டபில்யூ.எஃப்.பி.எல் உடன் பணிபுரியும் நிறுவனங்களால் பயன்படுத்தப்படக் கூடிய அஞ்சல் பட்டியல்களை உருவாக்கப் பயன்படுத்தலாம். அவ்வப்போது, கடன் மீது வழங்கப்படும் திட்டங்கள், அம்சங்கள் மற்றும் பலன்களைத் திருத்தியமைக்கிற உரிமை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது மற்றும் உகந்தது எனக் கருதப்படும் எதாவது முறையில் அத்தகைய திருத்தங்கள்/மாற்றங்கள் கடன் பெறுபவருக்கு(களுக்கு) அறிவிக்கப்படலாம். திருத்தங்கள்/ மாற்றங்களால் செய்யப்படுவதற்கு முன்பு, கடன் திரும்பச் செலுத்தப்பட்டால்/ரத்து செய்யப்பட்டால் ஒழியக் கடன் பெறுபவர்(கள்) அத்தகைய திருத்தங்கள்/ மாற்றங்களால் கடமைப்பட ஒப்புக்கொள்கிறார்.

21.5 இந்த ஒப்பந்தம் அல்லது எதாவது மற்ற பரிவர்தனை ஆவணத்தில் உள்ள விதிமுறையை, எதாவது ஆட்சி எல்லையில் தடை செய்யப்பட்டுள்ளது அல்லது செயல்படுத்த முடியாது என்றால், அத்தகைய ஆட்சி எல்லையில் தடை அல்லது செயல்படுத்த முடியாமல் இருக்கும் வரை விளை பயனற்றதாகும், ஆனால், இந்த ஒப்பந்தம் அல்லது அத்தகைய மற்ற பரிவர்தனை ஆவணத்தில் மீதமுள்ள விதிமுறைகளை விளை பயனற்றதாக்காது அல்லது வேறு எந்த ஆட்சி எல்லையிலும் அத்தகைய விதிமுறையைப் பாதிக்காது.



SPECIMEN COPY

21.6 பணம் செலுத்தத் தவறுதல் மீது அல்லது இந்த ஒப்பந்தம் அல்லது மற்ற பரிவர்த்தனை ஆவணங்களின் கீழ் வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் சேரும் எதாவது உரிமை, அதிகாரம் அல்லது தீர்வை பயன்படுத்தத் தவறினால் அல்லது பயன்படுத்தாமல் தவிர்த்தால், அது அத்தகைய உரிமை, அதிகாரம் அல்லது தீர்வை முடக்காது அல்லது அதன் தள்ளுபடியாக அல்லது அத்தகைய பணம் செலுத்தத் தவறுதலுக்கு இணக்கமானது என்று கருதக்கூடாது அல்லது

எதாவது பணம் செலுத்தத் தவறுதலுக்கு வி.டபில்யூ.எஃப்.பி.எல் நடவடிக்கை அல்லது நடவடிக்கை எடுக்காமை அல்லது எதாவது பணம் செலுத்தத் தவறுதலில் எதாவது இணக்கம், எதாவது மற்ற பணம் செலுத்தத் தவறுதலைப் பொறுத்து வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் எந்த உரிமை, அதிகாரம் அல்லது தீர்வும் பாதிப்படையாது அல்லது முடங்காது. இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்களின் கீழ் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் உரிமைகள் தேவைக்கேற்ப அவ்வப்போதுப் பயன்படுத்தப்படலாம், அவை திரளானது மற்றும் பொதுச் சட்டத்தின் கீழ் இருக்கும் அவர்களது உரிமைகளிலிருந்து பிரத்தியேகமானது அல்ல மற்றும் குறிப்பாக வி.டபில்யூ.எஃப்.பி.எல்-இன் சுய விருப்பப்படி எழுத்துப் பூர்வமாக மட்டும் தள்ளுபடி செய்யப்படலாம்.

21.7 வி.டபில்யூ.எஃப்.பி.எல் அல்லது அதன் இயக்குநர்கள், அலுவலர்கள், பணியாளர்கள், அறிவுரைஞர்கள், மதிப்பீட்டாளர்கள், தணிக்கையாளர்கள், நல் நோக்குடன் அல்லது இந்த ஒப்பந்தம் அல்லது எதாவது பரிவர்த்தனை ஆவணங்களுடன் தொடர்புடையதாகச் செய்ய வேண்டும் என்று நோக்கத்துடன் செய்யப்பட்ட எதாவது செயலுக்கான முகமைகள், வழக்கு, நடவடிக்கை, குற்றச்சாட்டு அல்லது மற்ற சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கு எதிராக இருக்கும்.

21.8 கடன் பெறுபவர்(கள்), ஒப்பந்தத்தில் உள்ள அனைத்து விவரங்களும் கடன் பெறுபவரின்(களின்) முன்னிலையில் தான் நிரப்பப்பட்டது என்றும் மற்றும் அவர் கடனின் அனைத்து விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்துப் புரிந்துகொண்டார் என்று ஒப்புக்கொள்கிறார். மேலும் கடன் பெறுபவர்(கள்), முன்னர் கூறப்பட்ட இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற ஆவணங்களின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் கடன் பெறுபவருக்கு(களுக்கு) விளங்கும் மொழியில் கடன் பெறுபவருக்கு(களுக்கு) விளக்கப்பட்டுவிட்டது என்று மற்றும் கடன் பெறுபவர்(கள்) விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் முழு அர்த்தத்தையும் புரிந்து கொண்டனர் என்றும் மற்றும் இந்த ஒப்பந்தத்தின் உள்ளடக்கங்களை சரிபார்த்துப் புரிந்துகொண்ட பிறகு அவரது கையொப்பத்தை இணைத்துள்ளதாக ஒப்புக்கொள்கிறார்.

21.9 அவர்கள் ஒவ்வொருவரிடமும் இந்த ஒப்பந்தம் மற்றும் பரிவர்தனை ஆவணங்களின் நகல் ஒப்படைக்கப்பட்டதாகக் கடன் பெறுபவர்(கள்) உறுதிப்படுத்துகிறார்.

21.10 இந்த ஒப்பந்தத்தின் கீழ் இருக்கும் இரண்டு தரப்பினரின் அனைத்துத் தீர்வுகளும் இங்கு வழங்கப்பட்டாலும் அல்லது எதாவது சட்டம், உரிமையியல் சட்டம், வழக்கம் அல்லது வணிக பயன்பாடுகளால் வழங்கப்பட்டாலும், அவைத் திரளானது மற்றும் மாற்று இல்லாதது மற்றும் அடுத்தடுத்து அல்லது ஒருங்கிணைந்து செயலாக்கப்படலாம்.

21.11 சூழ்நிலை, ஓர் எதிர்மறையான கட்டமைப்பை வேண்டும் வரை, ஒருமை, பன்மையையும் உள்ளடக்கலாம் மற்றும் ஒருமையைப் பன்மையாக்கலாம் மற்றும் ஆண்பால், பெண்பால் அல்லது பாலற்றவை ஆண்பால், பெண்பால் மற்றும் பாலற்றவற்றை உள்ளடக்கலாம்.

**அதற்கென்றே உள்ள சாட்சி, இங்கு மேலே முதலில் எழுதப்பட்ட நாள் மற்றும் வருடத்தில் தரப்பினர்கள் இங்கே அவர்களின் அந்தந்த கைகளை அமைத்துக் கைச்சாட்டியுள்ளனர்,**

**கையொப்பமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, ஒப்படைக்கப்படுகிறது**

"கடன் பெறுபவர்/கள்" எனப்படுபவரால்

| | | |
|---|---|---|
| கடன் பெறுபவர்(கள்) | இணைக் கடன் பெறுபவர் | இணைக் கடன் பெறுபவர் |



SPECIMEN COPY

இணைக் கடன் பெறுபவர் பெயர் 1

*** தனியுரிமை நிறுவன முத்திரையுடனான உரிமையாளரின் கையொப்பம்*

***கூட்டான்மை நிறுவனமாக இருக்கும் பட்சத்தில் ஒவ்வொரு கூட்டாளியின் கையொப்பம்*

*** கர்டா மற்றும் எச்.யு.எஃப்- இன் ஒவ்வொரு வயது வந்த உறுப்பினரின் கையொப்பம்*

*** நிறுவனம்/ சமூகம்/ அறக்கட்டளையின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரின் கையொப்பம் (முத்திரைகளுடன் தனிப்பட்டவரல்லாத நபரின் கையொப்பம்)*

________________________________________

**ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடெட்**

**அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரர்**

**சாட்சி:**

SPECIMEN COPY

## ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடட் சில்லறை கடன் ஒப்பந்தத்தின் சரிதிட்டமான நிபந்தனைகள்

**இங்கு அமைக்கப்பட்டுள்ள சரிதிட்டமான நிபந்தனைகள் கடன் பெறுபவர்கள்/இணை கடன் பெறுபவரால்/களால் படிக்கப்பட்டு, புரிந்துகொள்ளப்பட்டு, விவரிக்கப்பட்டு, விளக்கப்பட்டு விட்டது, மற்றும் அவர்கள் இதனுடன் இணங்க ஒப்புக்கொண்டு பொறுப்பேற்கின்றனர் மற்றும் இது இந்த கடன் ஒப்பந்தத்தின் கீழ் கடன் கொடுப்பவரால் வழங்கப்படும் கடன் வசதிக்குப் பொருந்தும்.**

**இந்த சரிதிட்டமான நிபந்தனைகள் இந்த கடன் ஒப்பந்தத்தின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகவே கருதப்படும் மற்றும் இது கடன் ஒப்பந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கடன் பெறுபவர்கள்/இணை கடன் பெறுபவரால்/களால் கடன் வழங்குபவருடன் செயல்படுத்தப்பட்டுள்ள கடன் ஒப்பந்தத்துடன் இணைந்து படிக்கப்படும்.**

### I. வரையறைகள் மற்றும் கட்டமைப்பு

1) இந்த ஒப்பந்தத்தில், அதன் பொருள் அல்லது சூழலில் எதாவது முரண்பாடு இருந்தால் ஒழிய, கீழே குறிப்பிடப்பட்டுள்ளவை, பொருந்துமானால், பின்வரும் அர்த்தங்களைக் கொண்டிருக்கலாம்:

(a) "**விண்ணப்பப் படிவம்**" என்றால், சூழல் அனுமதிக்கும் அல்லது தேவைப்படும் விதத்தில், புதிய/பயன்படுத்தப்பட்ட வாகனத்தை வாங்கும் வசதியைப் பெறுவதற்காக மற்றும் விண்ணப்பிக்கக் கடன் பெறுபவரால்/களால் ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடடிடம் ("**கடன் வழங்குபவர்**"), இந்த வசதியுடன் தொடர்புடையதாக அவ்வப்போது கடன் பெறுபவரால்(களால்) அல்லது வேறு எதாவது நபர்களால் வழங்கப்பட்ட அனைத்து தகவல்கள், விவரங்கள், விளக்கங்கள், கடிதங்கள் மற்றும் பொறுப்புகள் மற்றும் உறுதி ஆவணங்களுடன் ஒன்றாக சேர்த்துச் சமர்ப்பிக்கப்படும் கடன் விண்ணப்பப் படிவம்.

(b) "**இணை**" என்பது, எதாவது நபரின் அடிப்படையில், நேரடியாக அல்லது மறைமுகமாகக் கட்டுப்படுத்தும் அல்லது கட்டுப்படுத்தப்படும் அல்லது நபர் அல்லது குழு நிறுவனத்தின் பொது கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் மற்ற எதாவது நபர்
இந்த வரையறையின் நீக்கத்திற்காக, ஒரு நபரின் "கட்டுப்பாடு"
(கூட்டு அர்த்தத்துடன், "கட்டுப்படுத்தப்படுகிறது" மற்றும் "பொது கட்டுப்பாட்டின் கீழ்", உட்பட) என்பது (அ) 50%-க்கு அதிகமான வாக்களிக்கும் உரிமைகள் மீதான உரிமை அல்லது அல்லது அத்தகைய நபரின் மற்ற உரிமை ஆர்வங்கள்; அல்லது (ஆ) ஓர் நபரின் நிர்வாகம் அல்லது கொள்கைகளை இயக்குவதற்கான அதிகாரம், அத்தகைய நபரின் வாக்களிக்கும் அதிகாரத்தில் 50%-க்கு மேல் உடைமையாக்குவதன் மூலம் அல்லது இயக்குநர் குழுமம் அல்லது அத்தகைய கண்காணிப்புக் குழுவின் பாதிக்கும் அதிகமான உறுப்பினர்களை நியமிக்கும் அதிகாரம் மூலம் அல்லது ஒப்பந்தம் அல்லது மற்ற ஏற்பாடுகள் மூலம். பங்குதாரர்/அத்தகைய நபர், ஓர் உண்மை நபராக இருந்தால் பிறகு இணை என்ற சொல் நிறுவனங்கள் சட்டம், 1956-இல் வரையறுக்கப்பட்டுள்ளது போல அவரின் உறவினர்களையும் உள்ளடக்கும்.

(c) "**கடன் பெறுபவர்/கள்**" என்பது, கூட்டாக மற்றும் தனித்தனியாக, கடன் பெறுபவர்/(அ) அதன் வழித்தோன்றல்கள் மற்றும் அனுமதிக்கப்பட்ட உரிமைதாரர்களைச் சார்ந்து, கடன் வசதியைப் பெறுவதற்காகக் கடன் வழங்குபவரிடம் விண்ணப்பதாரர்கள் அல்லது இணை விண்ணப்பதாரர்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் அடிப்படையில் கடன் வழங்குபவரால் கடன் வசதி வழங்கப்பட்ட/ஒப்புதல் அளிக்கப்பட்ட விண்ணப்பதாரர்கள்/கடன் பெறுபவர்கள் மற்றும் இணை விண்ணப்பதாரர்கள்/ இணை கடன் பெறுபவரை/களைக் குறிக்கும்.

(d) "**கடன் பெறுபவரின்/களின் நிலுவைகள்**" என்பது, கடன் வசதியின் நிலுவையில் உள்ள அசல் தொகை, கடன் வசதியின் மீதான வட்டி, மற்ற அனைத்து வட்டி, அனைத்து கட்டணங்கள், செலவுகள், செலவினங்கள், முத்திரை வரி மற்றும் இந்த ஒப்பந்தம் மற்றும் பரிவர்த்தனை ஆவணங்களுக்கு இணங்க கடன் வழங்குபவருக்குக் கடன் பெற்றவரால்/களால் செலுத்த வேண்டிய மற்ற அனைத்து தொகை, அத்துடன் இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய அல்லது வழங்க ஒப்புதல் அளித்த மற்ற தொகைகள் அனைத்தையும் உள்ளடக்கியது.

(e) "**தொகுப்பாக்கப்பட்டத் தயாரிப்பு**" என்பது, முன்கூட்டிய காப்பீட்டுத் தவணைத் தொகை, பராமரிப்பு தொகுப்பு/வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தம், நீட்டிக்கப்பட்ட

SPECIMEN COPY

உத்தரவாதம் மற்றும் அல்லது மற்ற எதாவது கூட்டுறுப்பு தயாரிப்பை உள்ளடக்கியது, கடன் வழங்குபவரால் பல்வேறு வியாபார கூட்டாளிகளின் ஒத்துழைப்புடன் மாதாந்திர கடன் தவணைகளுடன் மேலே விவரிக்கப்பட கூட்டுறுப்பு தயாரிப்புகளின் பணம் செலுத்த/செலவிற்கான மாதாந்திர தவணையை ஒற்றைச் சாளர வசதியைக் கடன் பெறுபவருக்கு/களுக்கு வழங்க. அத்தகைய மாதாந்திர செலுத்தல்/செலவை பிற்சேர்க்கை II ,III, மற்றும் IV மற்றும் அல்லது புதிய தயாரிப்புகள் தொடங்கப்படும் போது சேர்க்கப்படும் மற்ற பிற்சேர்க்கையின் விதிமுறைகள், மற்றும் நிபந்தனைகளின் படி சம்பந்தப்பட்ட வியாபார கூட்டாளிகள்/சேவை வழங்குபவர்களிடம் வழங்கலாம்.

(f) "**வேலை நாள்**" என்பது, வழக்கமானபணி பரிவர்த்தனைகளுக்காகக் கடன் வழங்குபவரின் அலுவலகம் திறந்திருக்கும் நாள்.

(g) "**தவணை தேதி**" என்பது, இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ளதின் படி கடன் வசதியின் அசல் தொகை, வட்டி மற்றும்/அல்லது மற்ற எதாவது தொகைகள் உட்படக் கடன் பெறுபவரின்/களின் தவணைத் தொகையைச் செலுத்த வேண்டிய தேதி.

(h) "**வியாபாரி**" என்பது தயாரிப்பை உற்பத்தி செய்யும்/ஒன்று சேர்க்கும் நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட வியாபாரி.

(i) "இ.எம்.ஐ" என்பது கடன் வசதியின் அசல் தொகை மற்றும் வட்டியை உள்ளடக்கிய கடன் பெறுபவரால்/களால் கடன் வழங்குபவருக்குச் செலுத்த வேண்டிய சமப்படுத்தப்பட்ட மாதாந்திர தவணை ஆகும்.

(j) "வசதி" என்பது இந்த ஒப்பந்தத்தில் கடன் பெறுபவரால்/களால் குறிப்பிடப்பட்டுள்ளது படி, கடன் பெறுபவரால்/களால் விண்ணப்பிக்கப்பட்ட/பெறப்பட்ட அத்தகைய கடன்/நிதி உதவிக்கான தொகை ஆகும்.

(k) "**கடன்பட்ட நிலை**" என்பது, கடன் பெறப்பட்ட, ஒப்பந்தமிடப்பட்ட அல்லது திரட்டப்பட்ட தொகை (பண நீக்கிற்காக இருந்தாலும் இல்லாவிட்டாலும்) அல்லது கடன் பெறுபவர (கள்) அல்லது கடன் பெறுபவருடன (களுடன்) தொடர்புடைய நபரால் எதாவது விதத்தில் ஒப்பந்தமிடப்பட்ட பொறுப்புகள (உத்தரவாங்கள், இழப்பீடுகள், ஏற்றுக்கொள்ளுதல், கடன், தவணை முறையில் விலைக்கு வாங்குதல் மற்றும் குத்தகைக்கு விடுதல்) பொறுத்து எந்த நேரத்திலும் கடன் பெறுபவரின (களின்) கடன்பட்ட நிலை ஆகும்.

(l) "**பாதகமான விளைவு**" என்பது, (அ) கடன் பெறுபவரின்/களின் அல்லது எதாவது நபரின், இந்த ஒப்பந்தத்தின் கீழ் அதன் விதிமுறைகளுக்கு இணங்க அவர்களின் கடைமைகளைச் செய்யும் அல்லது இணங்கும் திறனுக்குப் பாதகமான; அல்லது (ஆ) கடன் பெறுபவர்/கள் அல்லது எதாவது பரிவர்தனை ஆவணத்துடன் தரப்பினராக இருக்கும் எதாவது நபரின் வியாபாரம், நிதி நிலைமையின் இயக்கத்திற்குப் பாதகமான; எதாவது நிகழ்வு அல்லது சூழ்நிலையின் விளைவு.

(m)"மாதம்" என்பது, இயல் ஆண்டின் படி ஓர் ஆண்டின் ஓர் மாதம் மற்றும் ஒவ்வொரு மாதமும் அத்தகைய மாதத்தின் முதல் நாளில் தொடங்கும். கடன் வழங்குபவர், அவரின் சுய தேர்வின் படி மாதம் தொடங்கும் தேதியை மாற்றலாம்

(n) "நபர்(கள்)" என்பது, ஓர் தனிப்பட்டவர், நிறுவனம், கூட்டாண்மை, கூட்டு நிறுவனம், நபர்களின் சங்கம், அறக்கட்டளை, இணைக்கப்படாத நிறுவனம், அரசு(மத்திய, மாநிலம் அல்லது வேறு எதாவது), இறையாண்மை நிலை அல்லது அதன் எதாவது முகமை, துறை, அதிகாரம் அல்லது அரசியல் உட்பிரிவு, சர்வதேச நிறுவனம், முகமை அல்லது அதிகாரத்தை (ஒவ்வொரு நிலையிலும் தனிப்பட்ட சட்ட ரீதியான குண நலன் இருந்தாலும் இல்லாவிட்டாலும்) உள்ளடக்கியது மற்றும் அவர்களின் வழித்தோன்றல்கள் மற்றும் உரிமை வழங்கப்பட்டவர்கள் உட்பட மற்றும் தனிப்பட்ட நபர் என்றால் அவரது சட்டப்பூர்வமான பிரதிநிதிகள், நிர்வாகிகள், செயல்படுத்துபவர்கள் மற்றும் வாரிசுகளை உள்ளடக்கலாம் மற்றும் அறக்கட்டளை என்றால் அறங்காவலர் அல்லது அறங்காவலர்களை தற்போதைக்கு உள்ளடக்கலாம்.

(o) "**தயாரிப்பு(கள்)**" என்பது, இந்த ஒப்பந்தம்/மற்ற பரிவர்தனை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள மற்றும் விவரிக்கப்பட்டுள்ளதின் படி கடன் அல்லது அதன் எதாவது பகுதியைப் பயன்படுத்தி கடன் பெறுபவரால்(களால்) வாங்கப்படும் வாகனம்(கள்), மற்றும்/அல்லது மற்ற எதாவது தயாரிப்புகளை உள்ளடக்கியது, அவை அசையக்கூடியது அல்லது அசையாதது, கடன் வழங்குபவரால் வழங்கப்பட்ட அல்லது வழங்கப்படும் வசதியைத் திரும்பச் செலுத்தக் கடன் பெறுபவரால்/களால் கடன் வழங்குபவருக்குச் சாதகமாகப் பிணையாக வழங்கப்பட்டது அல்லது வழங்கப்படும் என்றாலும். அதற்கிணங்க தயாரிப்பு பொருள் கொள்ளப்படலாம்; வாகனம் அல்லது மற்ற

SPECIMEN COPY

சொத்தை வாங்குவதற்குக் கடன் அல்லது அதன் ஒரு பகுதியுடன் கூடுதலாக மற்ற நிதியைக் கடன் பெறுபவர்(கள்) பயன்படுத்தினாலும் அந்த வாகனம் அல்லது மற்ற சொத்துக்கள் "தயாரிப்பு" எனப்படும் என்று தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

(p) "காலாண்டு" என்பது ஓர் ஆண்டின் தொடர்ச்சியான மூன்று மாதங்களாகும் மற்றும் ஒவ்வொரு மாதமும் அத்தகைய காலாண்டு தொடங்கும் அத்தகைய மாதத்தின் முதல் நாளில் தொடங்கலாம், கடன் வழங்குபவர், அவரின் சுய தேர்வின் படி காலாண்டு தொடங்கும் தேதியை மாற்றலாம்

(q) "**ஆர்.பி.ஐ**" என்பது, இந்திய ரிசர்வ் வங்கி.

(r) "**பரிவர்த்தனை ஆவணங்கள்**" என்பது எழுதப்பட்டவை அனைத்தும் மற்றும் கடன் பெறுபவர்/கள் அல்லது வசதியுடன் தொடர்புடைய மற்ற எதாவது நபரால் செயல்படுத்தப்பட்ட அல்லது கையெழுத்திடப்பட்ட மற்ற ஆவணங்கள் அல்லது செயல்படுத்த அல்லது கையெழுத்திடப் போகின்ற மற்ற ஆவணங்கள் மற்றும் அவ்வப்போது திருத்தங்கள் செய்யப்படும் அத்தகைய பரிவர்த்தனை ஆவணங்கள் ஒவ்வொன்றையும் உள்ளடக்கியது.

(s) "**விற்பனையாளர்**" என்பது, கடன் பெறுபவருக்குக் கடன் வழங்குபவரால் வழங்கப்பட்ட கடனைப் பயன்படுத்தி கடன் பெறுபவர் யாரிடமிருந்து தயாரிப்பை(களை) பெறுகிறாரோ அந்த நபரை(களை) குறிக்கும். விற்பனையாளர் குறித்த விவரங்கள் பிற்சேர்க்கை-I-இல் கூறப்பட்டுள்ளது.

(t) "**வாகனம்(கள்)**" என்பது, பிற்சேர்க்கை-I-இல் விவரிக்கப்பட்டுள்ள வாகனத்தை(களை) குறிக்கும் மற்றும் வாகனம்(கள்) மற்றும் அனைத்து உபரி பாகங்கள் சார்ந்த எதாவது உபகரணம் மற்றும் வாகனம்(கள்) மற்றும்/அல்லது உபகரணத்திற்கான சேர்த்தல் மற்றும் மாற்று, எப்பொழுது செய்யப்பட்டாலும், அவை உட்பட மற்றும் பிற்சேர்க்கை ஒன்றில் அதன் உடல் விவரிக்கப்பட்டுள்ள விதம் உட்பட மற்றும் எதாவது உடல் கட்டமைப்பு மற்றும் எஞ்சின் மேம்பாடுகள் மற்றும் பல உள்ளடங்கும்.

2) இந்த ஒப்பந்தத்தில், எதிர்மறை கருத்து தோன்றினால் ஒழிய,

A. பின்வரும் மேற்கோள்களில்:

i. ஓர் "**திருத்தம்**" என்பது பிற்சேர்க்கை, மாற்றம், புதிதாகச் சேர்த்தல், மாற்று அல்லது மீண்டும் சட்டமாக்கல் மற்றும் "திருத்தப்பட்டது" அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்பட வேண்டும்;

ii. "**சொத்துக்கள்**" என்பது, கடன் வழங்குபவரால் வழங்கப்பட்ட/வழங்கப்படப் போகின்ற தொகையைத் திரும்பச் செலுத்துவதற்காகக் கடன் பெறுபவரால்/களால் கடன் வழங்குபவருக்குச் சாதகமாகப் பிணையாக வழங்கப்படும் அல்லது வழங்கப்படவிருக்கும், அசையும் அல்லது அசையாதவை என்றாலும், இந்த ஒப்பந்தம்/மற்ற பரிவர்த்தனை ஆவணங்களில் குறிப்பிடப்பட்டு மற்றும் விவரிக்கப்பட்டுள்ளதின் படி, தற்போது உள்ளது மற்றும் எதிர்காலத்தில் வரவிருக்கும் அனைத்து சொத்துக்கள்/வாகனங்கள், அவை புலப்பட்டாலும், புலப்படவில்லை என்றாலும், அல்லது வேறு விதமானதானாலும் (அறிவுசார் சொத்து மற்றும் அறிவுசார் சொத்துரிமைகள் உட்பட), முதலீடுகள், பணப்புழக்கம், வருவாய், உரிமைகள், பலன்கள், வட்டிகள் மற்றும் ஒவ்வொரு விவரிப்பின் உரிமைகளை உள்ளடக்கியது.

iii. ஓர் "**அதிகாரமளித்தல்**" என்பது, ஓர் அதிகாரமளித்தல், ஒப்புதல், இசைவு, அனுமதி, தீர்மானம், உரிமம், விலக்களிப்பு, தாக்கல் மற்றும் பதிவு செய்தலை உள்ளடக்கியது;

iv. "**வில்லங்கம்**" என்பது, அடைமானம், பொறுப்பு, பற்றுரிமை, உறுதியளிப்பு, அடகு வைத்தல், பிணை வட்டி அல்லது எதாவது விவரிப்பின் எதாவது பற்றுரிமை.

v. "**சட்டம்**" என்பது எதாவது அரசமைப்புச் சட்டம் சாசனம், சட்டம், விதி, ஒழுங்குமுறைகள், அவசரச் சட்டம், தீர்ப்பு, ஆணை, கட்டளை, அதிகாரமளித்தல் அல்லது எதாவது வெளியிடப்பட்ட உத்தரவு, வழிகாட்டு முறைகள், தேவைகள் அல்லது சட்டத்தின் அதிகாரமுடைய அரசு கட்டுப்பாடு அல்லது இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடும்/சமர்ப்பிக்கும் தேதியில் அல்லது அதன் பின்னர் அமலில் இருக்கும், எதாவது நீதிமன்ற அதிகாரியால் தீர்மானிக்கப்பட்ட அல்லது விளக்கப்பட்ட எதாவது தற்போது கூறப்பட்டவை உட்பட.

B. ஒருமையைக் குறிப்பது பன்மையையும் உள்ளடக்கும் (மற்றும் அதற்கு நேர்மாறாக);

C. இந்த ஒப்பந்தத்தில் உள்ள தலைப்புகள் பார்வைக்குறிப்பு வசதிக்காக மட்டும் செருகப்பட்டவை மற்றும் இந்த

SPECIMEN COPY

ஒப்பந்தத்தைப் பொருள் கொள்ளும் போது மற்றும் விளக்கும் போது அவை புறக்கணிக்கப்பட வேண்டும்;

D. "உள்ளடக்கும்" அல்லது "உட்பட" எனக் குறிப்பிடப்படுவது எந்த வரையறையுமின்றி பொருள் கொள்ளப்படும்;

E. பாலினத்தை மேற்கோள் காட்டுவது பெண் மற்றும் ஆண் பாலை உள்ளடக்கும்;

F. எதாவது விஷயத்திற்காகக் கடன் வழங்குபவரிடமிருந்து தேவைப்படும் அனுமதி, ஒப்புதல்கள் அல்லது ஏற்புக்குக் கடன் வழங்குபவரின் "முன்கூட்டிய", "எழுத்துப் பூர்வமான" அனுமதி, ஒப்புதல்கள் அல்லது ஏற்பு தேவைப்படும்.

G. எதாவது நிகழ்வு, சூழ்நிலை, மாற்றம், உண்மை, தகவல், ஆவணம், அதிகாரமளித்தல், நடவடிக்கைகள், செயல், விடுகை, கோரிக்கைகள், மீறல், பணம் செலுத்தத் தவறுதல் அல்லது வேறு எதாவது உட்பட எதாவது விஷயத்தின் தகுமைக் குறித்து கடன் பெறுபவர்/கள் மற்றும் கடன் வழங்குபவருக்கிடையே எதாவது கருத்து வேறுபாடு அல்லது சர்ச்சை ஏற்பட்டால், தற்போது குறிப்பிட்டவற்றின் தகுமை குறித்து கடன் வழங்குபவரின் கருத்தே இறுதியானது மற்றும் அது கடன் பெறுபவர்/கள் மீது பிணைப்பில் இருக்கும்.

II. பணம் செலுத்துதல், முன்பணம் செலுத்துதல் மற்றும் மற்ற கட்டணங்கள்

(a) கடன் பெறுபவர்/கள், பிற்சேர்க்கை I-இல் (ஒப்பந்தத்தின் சாராம்சத்தின் நேரம்) குறிப்பிடப்பட்டுள்ள அத்தகைய தவணைகள் எண்ணிக்கையில் மற்றும் அத்தகைய தவணை(கள்) தொகையில் மற்றும் தவணை தேதியில்(களில்) வசதியைக் கடன் வழங்குபவருக்குத் திரும்பச் செலுத்தலாம்; இனிமேல் அத்தகைய தவணைகள் தனியாக "**தவணை/இ.எம்.ஐ**" என்றும் மற்றும் கூட்டாக "**தவணைகள்/இ.எம்.ஐ-கள்**" என்றும் குறிப்பிடப்படும். வசதியின் வட்டி விகிதத்தின் மீது மாற்றங்கள் ஏற்பட்டால் தவணையை/களை (ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணையின்/களின் தொகையை அதிகரித்தல் உட்பட) மாற்றும் உரிமை கடன் வழங்குபவருக்கு உள்ளது. "தவணைகள்" என்பது வசதியின் அசல் தொகை மற்றும் அதன் வட்டியை உள்ளடக்கியதாகும்.

(b) கடன் பெறுபவர்/கள் வசதி சார்ந்த தவணைகள் மற்றும் மற்ற தொகைகளைப் பின்வரும் எதாவது முறையில் திரும்பச்செலுத்தலாம்/செலுத்தலாம் பின்தேதியிடப்பட்ட காசோலைகள்("**பி.டி.சி முறை**")/ மின்னணு தீர்வு முறை (பற்று தீர்வு) ஆர்.பி.ஐ-ஆல் அறிவிக்கப்பட்டதின் படி ("**இ.சி.எஸ் முறை**")/ நேரடியாகத் தொகையை ரொக்கமாக அல்லது காசோலையாகச் செலுத்துதல்/வரைவோலை ("ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடடின்" பெயரில் வழங்கப்படும்) கடன் வழங்குபவருக்குப் பணம் செலுத்த வேண்டிய போது ("**நேரடி பணம் செலுத்தல் முறை**")/ வேறு எதாவது முறையில் மற்றும் பிற்சேர்க்கை I-இல் கடன் பெறுபவரால்/களால் தேர்ந்தெடுக்கப்பட்டதின் படி அல்லது கடன் பெறுபவரால் தேவைப்படும் முறையில். கடன் பெறுபவரால்(களால்) தேர்ந்தெடுக்கப்பட்ட பணம் செலுத்தும் முறை அல்லது எதாவது பணம் செலுத்தும் முறையின் கீழ் கடன் பெறுபவரால்/களால் வழங்கப்பட்ட ஆணைகளைக் கடன் வழங்குபவரின் முன்கூட்டிய ஒப்புதலின்றி கடன் பெறுபவரால்/களால் ரத்து செய்ய/திரும்பப்பெற முடியாது. கடன் பெறுபவர்/கள், கடன் வழங்குபவரின் முன்கூட்டிய ஒப்புதலின்றி அத்தகைய ஆணைகளை ரத்து செய்தால் அல்லது திரும்பப்பெற்றால், கடன் பெறுபவரின்(களின்) அத்தகைய செயல் குற்ற எண்ணத்துடன் செய்யப்பட்டதாகக் கருதப்படும் மற்றும் கடன் பெறுபவருக்கு/களுக்கு எதிராக உகந்த கற்ற நடவடிக்கைகள் அத்துடன் உரிமையியல் நடவடிக்கைகளைத் தொடங்கும் உரிமைக் கடன் வழங்குபவருக்கு உள்ளது.

(c) பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, வசதி வழங்குவதற்கு முன்னதாக (அல்லது கடன் வழங்குபவரால் குறிப்பிடப்படும் வேறு எதாவது நேரத்தில்) கடன் பெறுபவரால்/களால் கடன் வழங்குபவருக்கு (அல்லது அதனால் பெயர்க்குறிப்பிடப்பட்டவர்) செலுத்தப்பட்ட முன் தவணைகள், செலுத்தப்படும் இறுதி தவணையில் (சம எண்ணிக்கையில்) அல்லது கடன் வழங்குபவரால் முடிவு செய்யப்படும் முறையில் சரிக்கட்டப்படும். அத்தகைய முன் தவணைகளின் தொகை மீதான வட்டிக்கு, கடன் பெறுபவர்/கள் உரிமை பெற முடியாது.

(d) இந்த ஒப்பந்தம் அல்லது பரிமாற்று ஆவணங்களில் உள்ளவை தவிர மற்றும் கடன் பெறுபவர்(கள்) தேர்ந்தெடுத்த பணம் செலுத்தல் முறையைக் கருதாமல், கடன் வழங்கியவருக்குப் பணம் செலுத்த வேண்டிய தேதியில் கடன் பெறுபவரால்/களால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட தவணைச் செலுத்தப்படத்

SPECIMEN COPY

தவறினால் அல்லது கடன் வழங்கியவரால் எதாவது தவணையைப் பணம் செலுத்த வேண்டிய தேதியில் மெய்ப்பிக்க இயலவில்லை என்றால், இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வழங்குபவரின் மற்ற உரிமைகளைச் சாராமல் வசதியுடன் தொடர்புடையதாகக் கடன் வழங்குபவருக்குச் சாதகமாகக் கடன் பெறுபவரால்(களால்) வழங்கப்பட்ட பின் தேதியிடப்பட்ட காசோலைகள் வழங்க மற்றும்/அல்லது மீண்டும் வழங்கக் கடன் வழங்குபவருக்கு உரிமை உள்ளது. பிற்சேர்க்கை I-இல் கடன் பெறுபவரால்/களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணம் செலுத்தல்/பணம் திரும்பச் செலுத்தல் முறை எதுவாக இருந்தாலும்,கடன் வழங்குபவர், உகந்தது மற்றும் தேவையானது என்று கருதினால், பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று கடன் பெறுபவரின்/களின் செலுத்த வேண்டிய தொகைகளை உள்ளடக்கிய தவணைகள் மற்றும் மற்ற அனைத்து தொகைகளையும் செலுத்த மற்றும்/அல்லது வசூலிக்க அல்லது பின் தேதியிட்ட காசோலைகள், கடன் பெறுபவரால்/களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், ஆர்.பி.ஐ-இன் மின்னணு தீர்வு அமைப்பு (பற்று) மூலம் சுயமாக அல்லது கடன் வழங்குபவருக்குச் சாதகமாகக் கடன் பெறுபவரால்/களால் வழங்கப்படும் அத்தகைய பின் தேதியிடப்பட்ட காசோலைகளை வழங்க/மீண்டும் வழங்க அவருக்குப் பதிலாக இதற்கென்று அனுமதிக்கப்பட்ட நபர் மூலமாக அல்லது ஒரு வேளை எதாவது காரணத்தினால் தவணைகள் அல்லது செலுத்த வேண்டிய மற்ற எதாவது தொகைகளை மின்னணு தீர்வு அமைப்பு (பற்று) மூலம் பெறத் தவறினால், வேறு எதாவது முறையைப் பயன்படுத்தி கடன் பெறுபவரின்/களின் செலுத்த வேண்டிய தொகைகளை உள்ளடக்கிய தவணைகள் மற்றும் மற்ற அனைத்து தொகைகளையும் செலுத்த அல்லது மீண்டும் செலுத்தும்படி வேண்டுவதற்கு உரிமை உள்ளது, வழங்கப்பட்டுள்ள கடன் வழங்குபவரின் அத்தகைய உரிமை, இந்த ஒப்பந்தத்தின் கீழ் அதன் மற்ற உரிமைகளைச் சாராததாக இருக்கும்(பின் தேதியிடப்பட்ட காசோலையை மீண்டும் வழங்கும் உரிமை உட்பட).

(e) இதன்மூலம் கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்கு விநியோகிக்கப்பட்ட காசோலையில் இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் கீழ் கடன் பெறுபவருக்கு எந்த அறிவிப்புமின்றி கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்குச் செலுத்த வேண்டிய தொகைக்கு மிகாமல் தேவையான விவரங்களை நிரப்பக் கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்கு நிபந்தனையற்ற மற்றும் திரும்பப்பெற முடியாத அனுமதியை வழங்குகிறார். கடன் வழங்குபவர், அதன் சுய விருப்பத்தின் படி ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட அத்தகைய காசோலைகளைக் கடன் திரும்பச்செலுத்தலின் முறைப்படுத்துதலுக்குப் பயன்படுத்தக் கடன் வழங்குபவருக்கு உரிமை உள்ளது என்று இதன் மூலம் கடன் பெறுபவர் உறுதிப்படுத்தி ஒப்புக்கொள்கிறார். இந்த நோக்கத்திற்காக, இந்த ஒப்பந்தத்திற்கு இணங்க கடன் பெறுபவரால் வழங்கப்பட்ட காசோலைகள் தீர்ந்து போனால் கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்குப் புதிய காசோலைகளை வழங்குவார்.

(f) காசோலைகள் அல்லது பின் தேதியிட்ட காசோலைகள், கடன் பெறுபவரால்/களால் வழங்கப்பட்டிருந்தால் அவை மறுக்கப்படாமல் இருப்பதை மற்றும் பொருந்தும் தவணை தேதியில் அல்லது அதற்கு முன்னதாக தவணைகள் கடன் வழங்குபவரால் பெறப்படுவதை உறுதி செய்யக் கடன் பெறுபவர்/கள் அனைத்து நேரத்திலும் போதுமான நிதியை அவரது/ அவர்களது வங்கிக் கணக்கில் பராமரிக்க வேண்டும்.

(g) கடன் பெறுபவரால்/களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பணம் திரும்பச்செலுத்த/பணம் செலுத்தல் முறையைத் தவிர, கடன் வழங்குபவரின் கடன் சம்பந்தமான அனைத்து தவணைகள் மற்றும் மற்ற அனைத்து தொகைகளும் பொருந்தும் தவணை தேதியில் அல்லது அதற்கு முன்னதாக செலுத்தப்பட்டதை/திரும்பச்செலுத்தப்பட்டதைக் கடன் வழங்குபவரின் எந்த அறிவிப்புமின்றி கடன் பெறுபவர்/கள் உறுதிப்படுத்தும் பொறுப்பை அனைத்து நேரங்களிலும் தொடர வேண்டும் மற்றும் கடன் பெறுபவரால்/களால் கடன் வழங்குபவருக்குச் செலுத்தப்பட வேண்டிய அத்தகைய அனைத்து தொகைகளும் கடன் பெறுபவரால் குறிப்பிடப்படும் இடத்தில்/களில் எந்த கழிப்புமின்றி செலுத்தலாம், எனவே செலுத்த வேண்டிய தொகையைச் செலுத்த வேண்டிய தேதியில் அல்லது அதற்கு முன்னதாகக் கடன் பெறுபவரால் முழுமையாகப் பெற முடியும். எந்த முறையிலும் பணம் செலுத்தியதற்கான வரவு, செலுத்தப்பட்ட பணம் பெறப்பட்ட பிறகு அல்லது அது சார்ந்தத் தவணை தேதிக்கு(களுக்கு), எது பின்னர் வருமோ அதன் பிறகு வழங்கப்படும். அத்தகைய நேரத்தில் முழு தவணை அல்லது செலுத்த வேண்டிய மற்ற தொகைக்குக் குறைவான பணம்

SPECIMEN COPY

செலுத்தலை கடன் வழங்குபவர் ஏற்றுக்கொள்வது அத்தகைய நேரத்தில் அல்லது அதைத் தொடர்ந்து வரும் நேரத்தில் முழு தொகையைப் பெறும் உரிமையிலிருந்து கடன் வழங்குபவர் விலக்களித்ததாக அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் வரும் மற்ற எதாவது கடன் வழங்குபவரின் உரிமைகளிலிருந்து விலக்களித்ததாகக் ஆகாது.

(h) கடன் (அல்லது கடன் பெறுபவரின்/களின் தவணையில்) நிலுவை இருக்கும் வரை பின்தேதியிட்ட காசோலைகள்/இ.சி.எஸ் ஆணைகள் பொருத்து ரத்து செய்ய அல்லது பண அளிப்பு நிறுத்து ஆணை அறிவுறுத்தல்களை வழங்கக் கடன் பெறுபவருக்கு/களுக்கு உரிமை இல்லை மற்றும் கடன் பெறுபவரின்/களின் அத்தகைய செயல், கடன் வழங்குபவரை ஏமாற்றும் மற்றும் செலாவணி முறிச் சட்டம், 1881-இன் கீழ் வழக்கைத் தவிர்க்கும் எண்ணத்தில் செய்யப்பட்டதாகக் கருதப்படும் மற்றும் கடன் பெறுபவருக்கு/களுக்கு எதிராக குற்றவியல் மற்றும் உரிமையியல் நடவடிக்கைகளைத் தொடங்கும் உரிமை கடன் வழங்குபவருக்கு உண்டு.

(i) இந்த கடன் வழங்கலின் போது கடன் வழங்குபவரிடம் சமர்ப்பிக்கப்பட்ட பணம் திரும்பச்செலுத்தல் காசோலைகள், ஒப்பந்தங்களில் கையொப்பமிட்ட அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரை மாற்றுவதற்குக் கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவரிடமிருந்து முன்கூட்டியே எழுத்துப்பூர்வமான ஒப்புதலைப் பெற வேண்டும். அத்தகைய நிகழ்வின் போது, கடன் வழங்குபவரின் திருப்திக்காகக் கடன் பெறுபவர்/கள் தவணையைச் செலுத்துவதற்காகச் செயல்படுத்திய பின் தேதியிட்ட காசோலைகள் மற்றும்/அல்லது ஆணைகள், ஒப்பந்தங்கள் மற்றும்/அல்லது மற்ற ஆவணங்களை உடனடியாக மாற்றி, அதற்குப் பதிலாக புதிய பின் தேதியிட்ட காசோலைகள், ஆணைகள், ஒப்பந்தங்கள் மற்றும்/அல்லது மற்ற ஆவணங்களை வழங்க வேண்டும், எதாவது காரணத்திற்காகக் கடன் வழங்குபவர் அத்தகைய காசோலைகளை வழங்க/ பற்று அறிவுறுத்தல்களை வழங்குவதில் எதாவது சிரமம்/சௌகரியமின்மை/தடையை எதிர்கொண்டால் அல்லது கடன் வழங்குபவரால் அவரின் சுய தேர்வின் படி எதாவது நேரத்தில் தேவைப்பட்டால்.

(j) பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள "காசோலை இடமாற்று" கட்டணங்களைக் கடன் வழங்குபவருக்கு வழங்குவதற்கு உட்பட்டு கடன் வழங்குபவருக்கு வழங்கப்பட்ட பின் தேதியிட்ட காசோலைகளை, அதற்கு மாற்றான மற்றொரு வங்கியில் வரையப்பட்ட பின் தேதியிட்ட காசோலைகளுடன் இடமாற்றம்/பரிமாற்றம் செய்யக் கடன் வழங்குபவரின் முன் ஒப்புதலுடன் கடன் பெறுபவர்/கள் அனுமதிக்கப்படலாம்.

(k) தவணையைச் செலுத்துதல், பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் படி தொடங்கி, தொடரும் மற்றும் ஒப்படையாமை/ஒப்படைப்பதில் தாமதம், தயாரிப்பு(கள்) குறைபாடுடையது அல்லது வேலை செய்யாதது அல்லது பழுது பார்க்கப்படுகிறது என்றாலும் அல்லது இல்லை என்றாலும் மற்றும் தயாரிப்பு(கள்) தொடர்பாகத் தரப்பினர்களிடையே எந்த சர்ச்சை / வேறுபாடு ஏற்பட்டாலும் எதாவது தவணையை அல்லது மற்ற தொகையைச் செலுத்துவதை நிறுத்தி வைக்க அல்லது தாமதிக்கக் கடன் பெறுபவருக்கு/களுக்கு உரிமை இல்லை.

(l) எதாவது ஒப்படைப்பில் தாமதம் அல்லது ஒப்படையாமை அல்லது இழப்பு, திருட்டு, பறிமுதல், ஒப்படைப்பின் போது அல்லது அதற்கு முன் தயாரிப்பின்(களின்) விபத்திற்கு அல்லது தயாரிப்பின்(களின்) எதாவது குறைபாடு, சேதம் அல்லது தரத்திற்குக் கடன் வழங்குபவர் பொறுப்பாகமாட்டார் என்று கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

(m) குறைந்தபட்ச முன் செலுத்தல் தொகை, முன் செலுத்தல் தவணை, அல்லது தள்ளுபடி செய்யப்பட்ட வட்டி, மற்றும்/அல்லது எதாவது மற்ற கட்டணங்கள், அத்துடன் பொருந்தும் வட்டி வரி அல்லது அனைத்து நிலுவை வரி மற்றும் பணம் செலுத்த வேண்டிய தேதிக்கு முன்னதாக முழுமையாக அல்லது பகுதியாகச் செலுத்த வேண்டிய மற்ற கட்டணங்கள் மற்றும் தொகைகளுடன் வசதியின் நிலுவையில் உள்ள அசல் தொகையை முன் செலுத்த வேண்டிய மற்ற சட்டரீதியான விதிப்பு உட்படக் கடன் வழங்குபவரால் குறிப்பிடப்பட்ட அத்தகைய விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீது கடன் பெறுபவர் கடனை பகுதியாக அல்லது முழுமையாக முன் செலுத்தலாம். எதாவது பகுதி முன் செலுத்துதல் கடன் வழங்குபவரால் அனுமதிக்கப்பட்டு/அங்கீகரிக்கப்பட்டால், கடன் வழங்குபவர், பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ளதன் படி திரும்பிச் செலுத்தல் அட்டவணை/ தவணை(கள்) தொகையைத் திருத்தலாம் மற்றும் கடன் பெறுபவர்/கள் அதன் பிறகு திருத்தப்பட்ட பணம் செலுத்தல் அட்டவணையின் படிப் பணம் செலுத்த வேண்டும். அத்தகைய முன் செலுத்தல், காசோலைகள்/வரைவோலைகள்/கொடுப்பாணைகள்/ஆர்.டி.ஜி.எஸ்/என்.இ.ஃ.ப்.டி நிதி பரிமாற்றத்தின் பணம் கடன் வழங்குபவரால் பெறப்பட்ட பிறகு மட்டுமே செயல்பாட்டுக்கு வரும் மற்றும் திரும்பச்செலுத்தல் அட்டவணை அடுத்த மாதத்தின் இ.எம்.ஐ தேதிக்குப் பின்னர் மட்டுமே திருத்தப்படும்.

SPECIMEN COPY

பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள முன் செலுத்தல் கட்டணங்களைக் கடன் பெறுபவர் செலுத்தும் வரை கடனின் அத்தகைய முழு/பகுதி முன் செலுத்தல் அனுமதிக்கப்படாது.

(o) கடன் பெறுபவர்/கள் எதாவது தவணை/கள் அல்லது கடன் வழங்குபவருக்கான மற்ற எதாவது கடன் தொகையைத் தவணை தேதியில்(களில்) செலுத்தத் தவறினால், பொருந்தும் தவணை தேதியிலிருந்து அத்தகைய முழு தொகை செலுத்தப்படும் நாள் வரை அத்தகைய நிலுவைகள்/செலுத்தப்படாதத் தொகைகள் மீது பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் கூடுதல் வட்டியைச் (அத்துடன் பொருந்தும் வட்டி வரி அல்லது மற்ற சட்டரீதியான விதிப்பு) செலுத்தக் கடன் பெறுபவர்/கள் பொறுப்பாவார்கள். அத்தகைய கூடுதல் வட்டி, இந்த ஒப்பந்தத்தின் விதிமுறைகளின் படி கடன் வழங்குபவருக்கு, கடன் பெறுபவர்/கள் செலுத்த வேண்டிய மற்ற எதாவது கட்டணங்களுடன் கூடுதலானதாக இருக்கலாம்.

(p) வட்டி, பொறுப்புக் கட்டணம்/கட்டணங்கள், கூடுதல் வட்டி மற்றும் மற்ற அனைத்து கட்டணங்களும் நாள் தோறும் சேரும் மற்றும் கடன் வழங்குபவரின் சுய விருப்பத்தில் தேர்ந்தெடுக்கும் முறையில் கணக்கிடப்படலாம், அது மாதம் தோறும் 1/12 அல்லது ஒரு வருடத்திற்கு 360 நாட்கள் மற்றும் கடந்து சென்ற உண்மையான எண் அடிப்படையில் இருக்கலாம்.

(q) மாதாந்திர தவணை தொகை அடுத்த உயர் ரூபாய் மதிப்பிற்கு நிகராக்கப்படும்.

(r) இந்த ஒப்பந்தத்தின் கீழ் வசதி சார்ந்து செலுத்த வேண்டிய எதாவது தொகையின் தவணை தேதி, பணம் செலுத்த வேண்டிய இடத்தில் வேலை நாளாக இல்லை என்றால், உடனடியாக அடுத்த வேலை நாள் அத்தகைய பணம் செலுத்தலுக்கான தவணை தேதியாகும்..

(s) அரசாங்கம் அல்லது மற்ற அதிகார அமைப்பால் அவ்வப்போது விதிக்கப்படும் வட்டி வரி, ஜி.எஸ்.டி, மற்ற அனைத்து இறக்குமதி வரிகள் (முத்திரை வரி மற்றும் தொடர்புடைய பதிவு மற்றும் தாக்கல் கட்டணங்கள் மற்றும் வரிகள் எதுவாயினும் அவை உட்பட), (அ)வசதிக்கான விண்ணப்பம், வசதி வழங்கல் மற்றும் அதன் திரும்பச் செலுத்தல்; (ஆ) இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது எதாவது பரிவர்த்தனை ஆவணம், (இ) கடன் பெறுபவர்(கள்) செலுத்த வேண்டிய பணத்தை மீட்பது மற்றும் பெறுவது, (ஈ) பிணையை உருவாக்குதல், அமலாக்குதல் மற்றும் பெறுதல் [தயாரிப்பை(களை) வசப்படுத்துதல், பராமரித்தல், சேமித்தல் மற்றும் விற்றல்/இடமாறல்/பணமாக்கல் உட்பட], (உ) தயாரிப்பை(களை) பழுது பார்த்தல் மற்றும் தயாரிப்புடன்(களுடன்) தொடர்புடையதாகச் செலுத்தப்பட வேண்டிய நிலுவையில் உள்ள அனைத்து வரிகள் மற்றும் மற்ற எதாவது கட்டணங்கள் மற்றும் விதிப்புகள், (ஊ) ஆய்வு, (எ) தயாரிப்பிற்கான(களுக்கான) காப்பீடு மற்றும் (ஏ) கடன் வழங்குபவரின் வழக்கறிஞர் கட்டணங்கள் மற்றும் செலவினங்களுடன் தொடர்புடைய மற்ற அனைத்து செலவுகள், கட்டணங்கள் மற்றும் செலவினங்களை (கடன் வழங்குபவருக்கு ஏற்படும் செலவுகள் மற்றும் செலவினங்கள் உட்பட ஆனால் அவை மட்டுமல்ல) கடன் பெறுபவர்/கள் ஏற்றுக்கொண்டு செலுத்த வேண்டும். முத்திரை வரி, மற்ற வரிகள், கட்டணங்கள் மற்றும் அபராதங்கள் மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தம் மற்றும் பிணையத்தின் கீழ்/தொடர்புடையதாகச் சட்டம் அல்லது அதன் விளக்கத்தில் அல்லது நிர்வாகத்தில் எதாவது மாற்றம் காரணமாகக் கடன் வழங்குபவரின் செலவு அதிகரித்தல் உட்பட ஆனால் இவை மட்டும் அல்லாமல், அனைத்து மற்றும் எதாவது இழப்புகள், சேதங்கள், செலவுகள், கட்டணங்கள், கோரிக்கைகள், செலவினங்கள் மற்றும் பொறுப்புகள், எந்த வகை அல்லது இயல்புடையதாக இருந்தாலும், மேலுள்ள விஷயங்கள் தொடர்பாகக் கடன் பெறுபவரால்/களால் உருவாக்கப்பட்டு கடன் வழங்குபவர் பாதிக்கப்பட்டால் அல்லது ஏற்பட்டால், அவை தற்போதைக்கு நடைமுறையில் உள்ள சட்டத்தின் படி எப்பொழுது செலுத்த வேண்டுமோ, கடன் பெறுபவர்(கள்) கடன் வழங்குபவரிடம் செலுத்தலாம்/ஈடுசெய்யலாம்.

(t) மேலே குறிப்பிடப்பட்ட பணத்தைக் கடன் பெறுபவர்/கள் செலுத்தத் தவறினால், அதைச் செலுத்தும் தனியுரிமை (ஆனால் கடமைப்பட்டிருக்காது) கடன் வழங்குபவருக்கு உள்ளது. இங்குள்ள விதிகளுக்கிணங்கக் கடன் வழங்குபவரால் செலுத்தப்பட்ட தொகைகள் அனைத்தையும் கடன் பெறுபவர்/கள் ஈடு செய்யலாம். இந்த வசதி தொடர்பாகக் கடன் வழங்குபவரால் (பிரதிநிதிகள்/ஆலோசகர்கள்/மதிப்பீட்டாளர்களால் அல்லது அவர்கள் சார்பாகவும்) செலுத்தப்பட்ட தொகை மற்றும்/அல்லது ஏற்பட்ட செலவினங்கள் அனைத்தையும் கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவரிடமிருந்து கோரிக்கை விடப்பட்ட தேதியிலிருந்து 7 நாட்களுக்குள் ஈடு செய்ய வேண்டும். அத்தகைய அனைத்து தொகையும், செலுத்தப்பட்ட நாளிலிருந்து அது ஈடு செய்யப்படும் வரை பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகிதத்தில் வட்டியைச் சுமக்கும்.

(u) ஒப்பந்தச் சட்டம், 1872-இன் எதாவது விதிமுறைகள் அல்லது மற்ற எதாவது பொருந்தும் சட்டம் அல்லது ஒப்பந்தம் மற்றும்/அல்லது எதாவது பரிவர்த்தனை ஆவணங்களில் உள்ள எதாவது விதிமுறைகள் மற்றும்

SPECIMEN COPY

நிபந்தனைகளைச் சாராமல், இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது பரிவர்தனை ஆவணங்களுக்கு இணங்கக் கடன் பெறுபவரால்(களால்) செலுத்தப்பட்ட எதாவது தொகை அல்லது பிணையாக வைக்கப்பட்டதை அமலாக்குவதன் மூலம் அல்லது வேறு வழியில் கடன் வழங்குபவரால் பெறப்படும் தொகை, கடன் வழங்குபவரின் முழு சுய விருப்பத்துடன் இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது கடன் பெறுபவர்/கள் மற்றும் கடன் வழங்குபவரிடையிலான மற்ற எதாவது ஒப்பந்தங்களின் கீழ் கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவருக்குச் செலுத்தவேண்டிய தொகைக்கு ஒதுக்கீடு செய்யலாம். கடன் பெறுபவர்/கள் மற்றும் கடன் வழங்குபவருக்கு இடையிலான மற்ற எதாவது ஒப்பந்தங்களின் கீழ் கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவருக்குச் செலுத்த வேண்டிய எதாவது தொகைகளின் தீர்வுக்காகக் கடன் வழங்குபவரால் மேற்கொள்ளப்பட்ட அத்தகைய ஒதுக்கீடுகளைச் சாராமல், கடன் பெறுபவர்/கள் செலுத்த வேண்டிய தொகைகளை உள்ளடக்கிய அனைத்து நிலுவை/மீதமுள்ள தொகைகளுக்காகக் கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவருக்குக் கடமைப்பட்டுள்ளதைத் தொடரலாம்.

(v) கடன் பெறுபவர் அல்லது இணை கடன் பெறுபவர்/கள், கடன் வழங்குபவரின் முன்கூட்டிய எழுத்துப்பூர்வமான அனுமதி இருந்தால் மட்டுமே கடன் வழங்குபவரின் இணை நிறுவனம்(கள்)/பிரதிநிதியிடம்(களிடம்) பணம் செலுத்த வேண்டும்; தவறினால் கடன் பெறுபவர்/கள் அல்லது இணை கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவரின் இணை நிறுவனம்(கள்)/பிரதிநிதியிடம்(களிடம்) செலுத்திய பணம் கையாடல் செய்யப்பட்டால் அதற்குக் கடன் வழங்குபவர் பொறுப்பாகமாட்டார். கடன் பெறுபவர்/கள் அல்லது இணை கடன் பெறுபவரால்/களால் கடன் வழங்குபவருக்குச் செலுத்த வேண்டிய அனைத்து தொகையையும் நேரடியாகக் கடன் வழங்குபவர் மற்றும்/அல்லது கடன் வழங்குபவரால் நியமிக்கப்பட்ட முகமைகளிடம் செலுத்தலாம்.

(w) இந்த ஒப்பந்தத்தில், உரியச் சேவைகள்/வசதிகள்/அனுமதிகளுக்கு எதிராகக் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம், கடன் பெறுபவர்/கள், பிற்சேர்க்கை-I-இல் குறிப்பிடப்பட்டுள்ள பல்வேறு சேவைகள்/வசதிகள்/அனுமதிகளைக் கடன் வழங்குபவரிடமிருந்து பெறலாம்.

**III. தயாரிப்பு(கள்)**

(a) தயாரிப்பின்(களின்) தரம், நிலை, தகுதி மற்றும் செயல்திறன் மற்றும் உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரிடமிருந்து தயாரிப்பின்(களின்) ஒப்படைப்பைப் பெறுவது/உறுதி செய்வது கடன் பெறுபவரின்/களின் முழுமையான மற்றும் பிரத்தியேகமான பொறுப்பாகும் மற்றும் தயாரிப்பை(களை) ஒப்படைப்பில் தாமதம் (அல்லது ஒப்படையாமை) அல்லது சுணக்கக் கட்டணச் செலவு அல்லது தயாரிப்பின்(களின்) தரம், நிலை அல்லது தகுதி மற்றும் செயல்திறனில் குறைபாடு அல்லது மாறுபாடு அல்லது அதைச் சார்ந்து உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரால் வழங்கப்பட்ட உத்தரவாதங்களுக்குக் கடன் வழங்குபவர் பொறுப்பாக மாட்டார். உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளர் அல்லது அத்தகைய உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரின் எதாவது முகவரால் தயாரிப்பு(கள்) சார்ந்து செய்யப்பட்ட குறிப்பீடுகள் அல்லது உத்தரவாதங்களுக்குக் கடன் வழங்குபவர் பொறுப்பாகமாட்டார் அல்லது பிணைப்பில் இருக்காது. கடன் பெறுபவர்/கள், தயாரிப்பை(களை) பழுது பார்க்க உற்பத்தியாளர்/வியாபாரிகள்/விற்பனையாளர் களால் அங்கீகரிக்கப்பட்ட இயந்திரப் பழுது பார்ப்பவர்/ சேவை மையத்தைத் தவிர மற்ற எந்த நபரையும் ஈடுபடுத்தக் கூடாது.

(b) தயாரிப்பு(கள்) மோடார் வாகனம் (மோடார் வாகன சட்டத்தின் கீழ் வரையறுக்கப்பட்டதின் படி) அல்லது மற்ற எதாவது இயந்திர உபகரணங்களாக அல்லது அமலில் உள்ள சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட வேண்டிய பொருளாக இருந்தால், கடன் பெறுபவர்/கள், இந்த ஒப்பந்தத்தில் உள்ள தேதியிலிருந்து அல்லது தயாரிப்பு(கள்)ஒப்படைக்கப்பட்ட தேதியிலிருந்து (எது தாமதமாக நிகழ்கிறதோ) மூன்று (3) நாட்களுக்குள் உகந்த பதிவு செய்யும் அதிகாரியிடம் பதிவு செய்து, பதிவு அதிகாரியால் வழங்கப்பட்ட நாளில், வழங்கிய படி மற்றும் எதாவது சூழலில் பதிவு செய்த நாளிலிருந்து அறுபது(60) நாட்களுக்குள் பதிவுச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகலைக் கடன் வழங்குபவரிடம் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய தயாரிப்பு(கள்) கடன் வழங்குபவரிடம் பிணையாக வழங்கப்பட்டிருந்தால், கடன் வழங்குபவருக்குச் சாதகமாக அடகு வைக்கப்பட்டுள்ளது/ பிரத்தியேகமாகப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற உண்மையைத் தெளிவாகக் குறிக்கும் விதத்தில் உகந்த அதிகாரியிடம் தயாரிப்பு(கள்) பதிவு செய்யப்பட வேண்டும். எங்கெல்லாம் தேவைப்படுகிறதோ/பொருந்துகிறதோ (வணிக வாகனங்கள்/வாடகைக்கான வாகனங்கள் போன்று), கடன் பெறுபவர்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடமிருந்து தயாரிப்பை(களை) மாநிலம் அல்லது அத்தகையத் தயாரிப்பு(கள்)பதிவு செய்யப்பட்ட பகுதியில் / மாநிலம் அல்லது

SPECIMEN COPY

பகுதி முழுவதும் பயன்படுத்துவதற்குத் தேவையான அனைத்து அனுமதிகள் / உரிமங்களைப் பெற வேண்டும். யாருடைய பெயரில் தயாரிப்பு பதிவு செய்யப்படப் போகிறதோ அந்த கடன் பெறுபவர், இணை கடன் பெறுபவரின் ஒப்புதலுடன், கடன் பெறுபவர், கடன் பெறுபவரிடம் தயாரிப்பு ஒப்படைக்கப்படும் நேரத்தில், வாய்மொழி ஒப்பந்தம் மூலம் இந்த ஒப்பந்தத்தில் உள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீது கடன் வழங்குபவருக்குச் செலுத்த வேண்டிய தொகைகள் மற்றும் கட்டணங்களைப் பாதுகாப்பதற்காகத் தயாரிப்பு கடன் வழங்குபவருக்குச் சாதகமாக அடகு வைக்கப்பட்டுள்ளது மற்றும் அத்தகைய வாய்மொழி ஒப்பந்தத்தின் மீது தயாரிப்பு கடன் வழங்குபாவருக்குச் சாதகமாக அடகு வைக்கப்பட்டதாக இருக்கும் என்று ஒப்புக்கொள்கிறார். "ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடட்" பெயரில் வலியுறுத்தப்பட்டு, "மேலே விவரிக்கப்பட்டுள்ள தயாரிப்பு(கள்), கடன் ஒப்பந்தத்தின் கீழ், ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடட், சில்வர் யுதோபியா, 3-ஆம் தளம், ஏ விங், கார்டினல் கிரேசியஸ் சாலை, சகலா, கிழக்கு அந்தேரி, மும்பை 400 099-இடம் அடகு வைக்கப்பட்டுள்ளது" என்று தயாரிப்பு ஒப்படைக்கப்பட்ட மூன்று நாட்களுக்குள், கடன் பெறுபவர் கடன் வழங்குபவருக்குச் சாதகமாகத் தயாரிப்பை அடகு வைத்துள்ளார் என்பதை உறுதிப்படுத்த மற்றும் பதிவு செய்யத் தயாரிப்பின்(களின்) பதிவுச் சான்றிதழ் பெறப்படும் என்று கடன் பெறுபவர்(கள்) பொறுப்பேற்கிறார், அது கடன் வழங்குபவருக்குச் சாதகமாகத் தயாரிப்பின் அடைமானத்திற்கான முடிவான ஆதாரமாகும். கடன் பெறுபவர் கடன் வழங்குபவரின் பெயரை மேற்குறித்து, தயாரிப்பிற்கான பதிவுச் சான்றிதழைப் பெறத் தவறினால், அது கடன் வழங்குபவருக்குச் சாதகமாகக் கடன் பெறுபவர்களால் தயாரிப்பு(கள்) வாய்வழியாக அடகு வைக்கப்பட்டது இல்லை என்று கருதக்கூடாது அல்லது அமையக்கூடாது. கூறப்பட்டுள்ள அடைமானம், இந்த ஒப்பந்தத்தின் கீழ் அவர்களின் செலுத்த வேண்டிய தொகை மற்றும் கட்டணங்களுக்காகக் கடன் வழங்குபவரின் முதலாவது மற்றும் பிரத்தியேகப் பொறுப்பாகும். மேலே இருப்பதைச் சாராமல், கடன் பெறுபவர், பகர அதிகாரத்திற்கு இணங்க, தயாரிப்பு கடன் பெறுபவரிடம் ஒப்படைக்கப்படும் நேரத்தில் அல்லது அதற்குப் பிறகு எந்த நேரத்திலும் கடன் வழங்குபவருக்குச் சாதகமாகத் தயாரிப்பை அடகு வைக்கக் கடன் வழங்குபவருக்கு அதிகாரமளிக்கிறார்.

(c) எதாவது தயாரிப்பிற்கு(களுக்கு) எதிராக இருக்கும் கடனை முன் கூட்டியே முடிக்கும் மற்றும் அமலில் உள்ள எதாவது சட்டத்தின் கீழ் எதாவது அதிகாரியிடம் தயாரிப்பு(கள்) எங்குப் பதிவு செய்யப்பட வேண்டும் என்ற எதாவது வசதியைப் பெற்றால், பிறகு கடன் பெறுபவர்/கள் கடன் வழங்கப்பட்ட 7 நாட்களுக்குள்ளாக முன்னர் குறிப்பிடப்பட்ட பொறுப்பைத் தயாரிப்பு(கள்) சான்றிதழ் மற்றும்/அல்லது பதிவு செய்யும் அதிகாரியின் பதிவிலிருந்து நீக்கி, அத்தகைய பதிவு செய்யும் அதிகாரியிடம் தயாரிப்பை(களை) மறு பதிவு செய்ய வேண்டும். அத்தகைய தயாரிப்பு(கள்) கடன் வழங்குபவரிடம் பிணையாக வழங்கப்பட்டிருந்தால், கடன் வழங்குபவருக்குச் சாதகமாகப் பிரத்தியேகமாகப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது என்ற உண்மையைத் தெளிவாகக் குறிக்கும் விதத்தில் உகந்த அதிகாரியிடம் தயாரிப்பு(கள்) பதிவு செய்யப்பட வேண்டும். கடன் பெறுபவர்/கள் உடனடியாகப் பதிவுச் சான்றிதழின் சான்றளிக்கப்பட்ட நகலைக் கடன் வழங்குபவரிடம் வழங்க ( மேலே உட்கூறு 2-இல் குறிப்பிடப்பட்டுள்ள படி அல்லது சுழலுக்கு ஏற்ப மேற்குறிப்புடன்) வேண்டும்.

(d) இந்த ஒப்பந்தத்தைச் செயல்படுத்தும் நேரத்தில் தயாரிப்பு(கள்) குறித்த முழு விவரங்கள் (பிற்சேர்க்கை I-இல் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று தேவைக்கேற்ப எஞ்சின் எண்/சேஸ் எண்/வரிசை எண்/பதிவு எண் மற்றும் பல) இல்லையென்றால், கடன் பெறுபவர்/கள் தயாரிப்பு(கள்) குறித்த அத்தகைய அனைத்து விவரங்களையும் கடன் வழங்குபவரால் குறிப்பிடப்பட்ட முறையில் தயாரிப்பு(கள்) ஒப்படைக்கப்பட்ட அல்லது தகுந்த அதிகாரியிடமிருந்து அத்தகைய விவரங்கள்(வாகனத்தின் பதிவு எண் போன்று) பெறப்பட்ட 3 (மூன்று)நாட்களுக்குள் கடன் வழங்குபவரிடம் வழங்க வேண்டும்.

(e) கடன் வழங்குபவரால் தேவைப்பட்டால் மற்றும் அறிவுறுத்தப்பட்டால், கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவருக்குச் சாதகமாகத் தயாரிப்பு(கள்) மீதிருக்கும் பொறுப்பின் உண்மையைக் குறிக்கும் தகடு/ஸ்டிக்கரை தயாரிப்பு(கள்) மீது இணைக்க வேண்டும், கடன் பெறுபவரின்/களின் நிலுவைகளில் எதாவது பகுதி செலுத்தப்படாமல் இருக்கும் வரை அத்தகைய தகடு/ஸ்டிக்கர் தயாரிப்பு(கள்) மீது தொடர்ச்சியாக இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.

(f) வசதி அல்லது அதன் எதாவது பகுதி கடன் வழங்குபவரிடம் நிலுவையில் இருக்கும் வரைத் தயாரிப்பு(கள்) கடன் பெறுபவருக்குச் சாதகமாக உருவாக்கப்பட்ட/ உருவாக்கப்படவிருக்கும் பொறுப்பிற்கு/

SPECIMEN COPY

பிணைக்கு உட்பட்டிருக்கும்; கடன் பெறுபவர்(கள்), அவரது(களது) சொந்த உடைமையாக மற்றும் கட்டுப்பாட்டின் கீழ் முறையாகப் பயன்படுத்தி, இயக்கி, தயாரிப்பை(களை) நன்றாகச் செயல்படும் நிலையில் வைத்திருக்க வேண்டும் மற்றும் கடன் பெறுபவர்/கள் தயாரிப்பை(களை) பயன்படுத்த, இடமாற்ற அல்லது அகற்ற எந்த நபர், நிறுவனம் அல்லது அதிகார அமைப்புடனும் எந்த ஒப்பந்தம்/ஏற்பாடும் செய்யக்கூடாது. எங்கு எல்லாம் கடன் வழங்குபவரால் தேவைப்படுகிறதோ, கடன் வழங்குபவரின் திருப்திக்காகக் கடன் பெறுபவர்/கள் தயாரிப்புகளின் உற்பத்தியாளர்கள்/வினியோகஸ்தர்களுடன் வருடாந்திர பராமரிப்பு ஒப்பந்தங்களை ஏற்பாடு/ ஒப்பந்தம் செய்ய வேண்டும் மற்றும் கடன் வழங்குபவருக்கு எதாவது தொகை நிலுவையிலிருந்தால் அல்லது செலுத்த வேண்டி இருந்தால் அது வரை அத்தகைய பராமரிப்பு ஒப்பந்தங்களைப் புதுப்பித்து நடைமுறையில் வைத்திருக்க வேண்டும்.

(g) கடன் வழங்குபவரின் முன்கூட்டிய ஒப்புதலின்றி கடன் பெறுபவர்/கள் தயாரிப்பு(கள்) அல்லது அதன் எதாவது பகுதியின் உரிமையில் பங்கெடுக்க, வாடகைக்கு விட, குத்தகைக்கு விட, விட்டு விட மற்றும் உரிமம் பெற அல்லது எதாவது ஏற்பாடு அல்லது ஒப்பந்தத்தைச் செய்யமாட்டார்கள்.

(h) கடன் பெறுபவர்/கள், தயாரிப்புகளை எதாவது மற்றும் அனைத்து பற்றுரிமைகள், கட்டணங்கள் மற்றும் வில்லங்கங்களின்றி வைத்திருத்தல் வேண்டும், சேமித்தல் மற்றும் கடன் வழங்குபவருக்கு சாதகமாக உருவாக்கப்பட்ட/உருவாக்கப்பட வேண்டிய முதலாவது மற்றும் பிரத்தியேகமான கட்டணம் தவிர, மற்றும் கடன் பெறுபவர்/கள், எந்த விதத்திலும் தயாரிப்புகளை அடகு வைக்க, அடைமானம் வைக்க, ஈடு வைக்க, உரிமையாக்க, வில்லங்கப்படுத்த, விற்க, உரிமை மாற்றம் செய்ய, வாடகைக்கு விட, குத்தகைக்கு விட, வெளியே விட அல்லது உரிமையில் பங்கு வகிக்கக் கூடாது.

(i) அத்தகைய எதாவது நேரடி அல்லது மறைமுகமான ஒப்பந்தம்/ஏற்பாடு, பற்றுரிமை, பொறுப்பு, வில்லங்கம், வாடகைக்கு விடுதல், குத்தகைக்கு விடுதல், இடமாற்றுதல் அல்லது தயாரிப்பின்(களின்) உடைமையில் பங்கெடுப்பது, மேலே உட்கூறு 7 மற்றும் 8-இல் குறிப்பிடப்பட்டுள்ளதின் படி, நம்பிக்கை மோசடிக் குற்றச் செயல் மற்றும் கடன் பெறுபவரால் ஏமாற்றப்பட்டதாகக் கருதப்படும் மற்றும் அத்தகைய சூழ்நிலையின் போது இந்த ஒப்பந்தம் மற்றும்/அல்லது சட்டத்தின் கீழ் கடன் வழங்குபவரின் மற்ற உரிமைகளைச் சாராமல், கடன் பெறுபவருக்கு/களுக்கு எதிராக ஏற்ற குற்றவியல் நடவடிக்கைகளைத் தொடங்கும் உரிமை கடன் வழங்குபவருக்கு உள்ளது.

(j) தயாரிப்பு(கள்) பதிவு செய்யப்பட்டுள்ள மாநிலத்தின் பிராந்திய எல்லைக்கு வெளியே தயாரிப்பு(கள்) அகற்றப்படுகிறது/எடுத்துச் செல்லப்படுகிறது என்றால் அல்லது நிரந்தரமாக அல்லது 60 நாட்கள் காலம் தொடர்ச்சியாக வைத்திருக்க, பொருத்தியிருக்க அல்லது சேமித்திருக்க வேண்டிய இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு /இடத்திற்கு வெளியே அகற்றப்படுகிறது அல்லது எடுத்துச் செல்லப்படுகிறது என்றால், கடன் பெறுபவர்/கள், கடன் வழங்குபவரிடமிருந்து முன்கூட்டிய எழுத்துப்பூர்வமான ஒப்புதலைப் பெற வேண்டும்.

(k) கடன் பெறுபவர்/கள் எல்லா நேரத்திலும் தயாரிப்பின்(களின்) நிலையை மற்றும் /அல்லது அது தொடர்பான ஆவணங்களை ஆய்வு செய்ய, பார்க்க மற்றும் ஆராயக் கடன் வழங்குபவரை(மற்றும் அதன் எதாவது பிரதிநிதிகள்/முகவர்கள்) அனுமதிக்க வேண்டும் மற்றும் அந்த நோக்கத்திற்காகக் கடன் பெறுபவர்கள் மற்றும் அதன் பிரதிநிதிகளை/முகவர்களைத் தயாரிப்புகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள/அமைந்துள்ள வளாகத்தினுள் நுழைய அனுமதிக்க வேண்டும் கடன் வழங்குபவரால் தேவைப்பட்டா, கடன் பெறுபவரின்/களின் சொந்த செலவில் மற்றும் செலவினத்தில் கடன் வழங்குபவரால்(மற்றும் அதன் பிரதிநிதிகள்) நியமிக்கப்பட்ட அத்தகைய இடத்தில் ஆய்விற்காகத் தயாரிப்பு(கள்)/ மற்றும்/அல்லது அதனுடன் தொடர்புடைய ஆவணங்களைக் கடன் வழங்குபவரிடம்(மற்றும் அதன் பிரதிநிதிகள்) வழங்க வேண்டும். கடன் வழங்குபவரின் கருத்துப்படி எங்கெல்லாம் தேவையானது அல்லது அவசியமானதோ, தயாரிப்பு(கள்) சேமிக்கப்பட்டுள்ள/பொருத்தப்பட்டுள்ள/வைக்க ப்பட்டுள்ள இடத்தினுள்/வளாகத்தினுள் நுழைய அல்லது தயாரிப்பை(களை) ஆய்வு செய்யக் கடன் வழங்குபவரால் (அல்லது அதன் எதாவது பிரதிநிதிகள்) தேவைப்படும் படி இடத்தின்/வளாகத்தின் உரிமையாளரின் அனைத்து அனுமதிகள் மற்றும் ஒப்புதல்களைக் கடன் பெறுபவர்/கள் பெற வேண்டும்.

(l) கடன் பெறுபவர்/கள், தயாரிப்பு(கள்) மற்றும் அதன் பயன்பாட்டுடன் தொடர்புடைய அனைத்து சட்டங்கள், விதிகள், மற்றும் ஒழுங்குமுறைகளுடன் (சட்டரீதியான அல்லது வேறு வழியில்)இணங்கலாம் மற்றும் தயாரிப்பின்(களின்)சேமிப்பு, பயன்பாடு மற்றும் செயல்பாட்டிற்குத் தேவையான அனைத்து காப்பீடு, உரிமங்கள், பதிவுகள், அனுமதிகள், அங்கீகாரங்கள் மற்றும் இசைவுகளைப் பெற்று அனைத்து நேரத்திலும் பயனுற வைத்திருக்க வேண்டும். ஒரு வேளை, தயாரிப்பை(களை) இறக்குமதி செய்ய வேண்டுமென்றால், கடன் பெறுபவர்/கள், தேவையான அனைத்து இறக்குமதி உரிமங்கள் மற்றும் திறந்த நிலை போது உரிமத்தின் கீழ் தயாரிப்பின்(களின்) இறுதி

SPECIMEN COPY

விலை கூறல், தகுதி, நோக்கம் மற்றும் இறக்குமதியின் செல்லுபடி காலம் குறித்த தேவையான அனைத்து தகவல்களையும் பெற வேண்டும் மற்றும் தயாரிப்பின்(களின்) இறக்குமதியைப் பாதிக்கக்கூடிய இறக்குமதித் திட்டம். தகுதி வரம்பு மற்றும் நோக்கத்தில் செய்யப்படும் அனைத்து மாற்றங்கள் குறித்தும் அவ்வப்போது உடனடியாக கடன் வழங்குபவருக்குத் தெரிவிக்க வேண்டும்.

(m) கடன் பெறுபவரின் இருப்பிடத்தை அல்லது கூறப்பட்டுள்ள தயாரிப்பை(களை) ஆராய்ந்தறிய அல்லது அந்த நேரத்தில் யாருடைய வசம் தயாரிப்பு உள்ளதோ அவர்களிடமிருந்து மீட்க அல்லது மீட்க முயல ஆகும் அனைத்து செலவினங்கள், செலவுகள் அல்லது கட்டணங்களைக் கோரிக்கையின் பெயரில் கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவருக்குச் செலுத்தலாம்.

(n) கடன் பெறுபவர்/கள், தயாரிப்பை/களை எதாவது சரக்குகளைக் கடத்த அல்லது எதாவது கடத்தப்பட்ட அல்லது தடை செய்யப்பட்ட சரக்குகளைச் சுமந்து செல்வதற்கான போக்குவரத்து முறையாகப் பயன்படுத்தக் கூடாது மற்றும் அத்தகைய சரக்குகளை மறைத்து வைக்கும் நோக்கத்திற்காக அல்லது எதாவது மற்ற சட்ட விரோத நோக்கத்திற்காகத் தயாரிப்பு(கள்) தகமையாக்கப்பட, மாற்றியமைக்கப்பட அல்லது பொருத்தப்படக் கூடாது.

## IV. காப்பீடு

(a) கடன் பெறுபவர்/கள் செலுத்த வேண்டிய தொகையில் எதாவது பகுதி கடன் வழங்குபவருக்கு நிலுவையில்/பணம் செலுத்த வேண்டி இருக்கும் வரை, கடன் பெறுபவர்/கள் முழுமையாகக் காப்பீடு செய்திருக்க வேண்டும், மற்றும் கடன் பெறுபவர்/கள் மற்றும் கடன் வழங்குபவரின் கூட்டுப் பெயர்களுடன் அவரது/அவர்களது சொந்த செலவில் தயாரிப்பை(களை) காப்பீடு செய்து வைக்க வேண்டும், அத்தகைய காப்பீட்டுத் திட்டத்தில்/களில் கடன் வழங்குபவரின் பெயர் 'இழப்பு தொகைப் பெறுநர்' என்று குறிப்பிடப்பட வேண்டும். தயாரிப்புக்காக(களுக்காக) கடன் பெறுபவர்/கள் எடுக்க வேண்டிய அத்தகைய காப்பீடு, பின்வருவனவற்றை உள்ளடக்கிய சரிதிட்டமான முழுமையான தொகுப்பாக இருக்கும் (அ) கலவரம், உரிமையியல் கலகம் மற்றும் தயாரிப்புகளுக்கு இயல்பாக ஏற்படக் கூடிய அத்தகைய கூடுதல் அபாயங்கள்/பொறுப்புகள் உட்பட ஆனால் அவற்றின் வரம்பிற்குள் மட்டும் இல்லாமல், அனைத்து அபாயங்கள் மற்றும் (ஆ) வரம்பில்லாத மூன்றாம் தரப்பு பொறுப்பு அபாயங்கள். கடன் பெறுபவர்/கள், உடனே அத்தகையக் காப்பீட்டுத் திட்டங்களை எடுக்க/புதுப்பிக்க வேண்டும், இந்த கடமைக்கு உடன்பட்டதை உறுதிப்படுத்துவதற்காக அத்தகையக் காப்பீட்டுத் திட்டத்தின்/களின் உண்மையான நகல்களைக் கடன் வழங்குபவரிடம் வழங்க வேண்டும்.

(b) கடன் பெறுபவர், தற்போதைக்கு தயாரிப்பு(கள்) வைக்கப்பட்டிருக்கும் மற்றும்/அல்லது சேமிக்கப்பட்டிருக்கும் எதாவது அசையா சொத்திற்கான அனைத்து வாடகைகள், வரிகள் மற்றும் செலவுகளைச் செலுத்த வேண்டும் மற்றும் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் தேவைப்படும் படி அத்தகைய சொத்தை நெருப்பினால் ஏற்படும் இழப்பு அல்லது சேதம் மற்றும் அத்தகைய அபாயங்களுக்கு எதிராகக் காப்பீடு செய்து வைத்திருக்க வேண்டும் மற்றும் எப்பொழுதெல்லாம் தேவைப்படுகிறதோ அப்பொழுதெல்லாம் காப்பீட்டுத் திட்டங்களை வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடம் வழங்க வேண்டும். பணம் செலுத்தத் தவறினால், அத்தகைய பணத்தைச் செலுத்தும் உரிமை வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு உள்ளது(அவ்வாறு செய்யக் கடமைப்படவில்லை என்றாலும்). வி.டபில்யூ.எஃப்.பி.எல்-ஆல் எதாவது பணம் செலுத்தப்பட்டிருந்தால் வி.டபில்யூ.எஃப்.பி.எல் இடமிருந்து கோரிக்கைக்கான அறிவிப்பைப் பெற்ற உடனே கடன் பெறுபவரால் வி.டபில்யூ.எஃப்.பி.எல்-க்கு, கடன் விதிமுறைகளின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வட்டி விகிதத்தில், பணம் செலுத்தப்பட்ட தேதியிலிருந்து செலவு ஈடு செய்யும் வரை உள்ள வட்டியுடன் செலவு ஈடு செய்யப்பட வேண்டும் மற்றும் கடன் பெறுபவரால் அத்தகைய செலவு ஈடு செய்யப்படும் வரை, அவை சொத்துக்கள் மீதும் வசூலிக்கப்படும்

(c) ஒரு வேளைக் கடன் பெறுபவர்/கள் அத்தகையக் காப்பீட்டுத் திட்டங்களைப் பெற மற்றும்/அல்லது அதன் ஆதாரத்தைக் கடன் வழங்குபவரிடம் வழங்கத் தவறினால், கடன் வழங்குபவர் கடன் பெறுபவரின்/களின் செலவில் தயாரிப்பைக் காப்பீடு செய்யலாம்(ஆனால் கடமைப்படாமல்). கடன் வழங்குபவர், தயாரிப்பின்(களின்) காப்பீட்டுத் தவணை அல்லது மற்ற எதாவது செலவு, தொகைகளைச் செலுத்தினால், கடன் பெறுபவர்/கள், கடன் வழங்குபவர் செலுத்திய அத்தகைய அனைத்து தொகையையும் ஈடு செய்ய வேண்டும்.

(d) எதாவது விபத்தின் காரணமாகத் தயாரிப்புக்கு(களுக்கு) எதாவது இழப்பு அல்லது சேதம் ஏற்பட்டால், எதாவது காப்பீட்டு நடவடிக்கை மீது முதல் கோருரிமையைக் கடன்



SPECIMEN COPY

வழங்குபவருடையது, இந்த நடவடிக்கைகள் கடன் வழங்குபவரால் கடன் பெறுபவரின்/களின் நிலுவைகளுக்காகப் பயன்படுத்தலாம் அல்லது கடன் வழங்குபவர் உகந்தது எனக் கருதும் மற்ற முறையில் பயன்படுத்தலாம். மேலும், தயாரிப்பு(கள்) முழுமையாக இழப்பு/சேதமடையும் போது, காப்பீட்டு நிறுவனத்தால் தீர்வாக வழங்கப்பட்ட கோருரிமைத் தொகை கடன் பெறுபவரின்/களின் மொத்த நிலுவைத் தொகை மற்றும் கடன் பெறுபவர்/கள் செலுத்த வேண்டிய தொகையையும் விடக் குறைவாக இருந்தால், கடன் பெறுபவரால்/களால் கடன் வழங்குபவருக்குச் செலுத்த வேண்டிய மீதமுள்ள நிலுவைத் தொகையைக் கடன் பெறுபவர்/கள் உடனடியாகச் செலுத்த வேண்டும். இதன் மூலம் கடன் வழங்குபவர் கடன் பெறுபவர்/கள் சார்பாகச் செயல்பட்டு, கடன் பெறுபவரின்/களின் சொந்த அபாயங்கள் மற்றும் செலவில், கடன் வழங்கியவர் தனது வட்டிகளைப் பாதுகாக்கப் பொருத்தமானது எனக் கருதும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம் எனக் கடன் பெறுபவரால்/களால் திரும்பப்பெறமுடியாத அளவிற்கு அனுமதி மற்றும் அதன் சுய தேர்வின் படி உரிமை அளிக்கப்படுகிறது: (i) எதாவது காப்பீட்டின் கீழ் அல்லது தொடர்பாக எழும் எதாவது சர்ச்சையைச் சரிக்கட்ட, தீர்வடைய, சமரசம் செய்ய அல்லது மத்தியஸ்தம் செய்ய மற்றும் அத்தகைய சரிக்கட்டல், தீர்வு, சமரசம் மற்றும் அத்தகைய மத்தியஸ்தம் மூலம் பெறப்படுபவை கடன் பெறுபவர்/கள் மீது செல்லுபடி ஆகும் மற்றும் பிணைப்பில் இருக்கும், மற்றும் (ii) எதாவது அத்தகைய காப்பீடு அல்லது அதன் கீழ் செய்யப்பட்ட கோருரிமையின் கீழ் செலுத்தப்பட வேண்டிய அனைத்து தொகையையும் பெற மற்றும் அதற்காகச் செல்லுபடியாகும் ரசீதை வழங்க மற்றும் விதிமுறைகளுக்கேற்ப அத்தகையத் தொகையைப் பயன்படுத்த அல்லது கடன் வழங்குபவரால் பொருத்தமானது எனக் கருதப்படும் முறையில்.

(e) ஒரு வேளை கடன் வழங்குபவர் காப்பீட்டுக் கோரிக்கைகள் அல்லது நடவடிக்கைகள் தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் எனத் தேர்வு செய்தால் மற்றும்/ அல்லது கோரிக்கைகளில்/தீர்வில் ஓர் பெரிய தொகைக் கிடைக்கலாம் அல்லது கிடைக்க வேண்டும் அல்லது அத்தகைய சரிக்கட்டலுக்குப் பிறகு மீதமுள்ள கடன் பெறுபவரின்/களின் நிலுவைத் தொகை மீது கடன் பெறுபவரின்/களின் பொறுப்பைக் கேள்வி கேட்க உரிமை உள்ளது என்ற அடிப்படையில் கடன் வழங்குபவருக்கு எதிராகக் கோரிக்கையை எழுப்பக் கடன் பெறுபவருக்கு/களுக்கு எந்த உரிமையும் இல்லை.

(f) கடன் பெறுபவர்/கள் தயாரிப்பை அவராக/அவர்களாக மற்றும் / அல்லது அவரது/அவர்களது பணியாட்கள்/முகவர்கள் மூலமாக, கண்டிப்பாகக் காப்பீட்டுத் திட்டத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு ஏற்பப் பயன்படுத்தலாம் மற்றும் அத்தகையக் காப்பீட்டைச் செல்லாததாக்கும் எந்த செயலையும் அல்லது காரியத்தையும் செய்யவோ செய்ய அனுமதிக்கவோ கூடாது மற்றும் தயாரிப்பை(களை) முறையாகப் பயன்படுத்த வேண்டும் மற்றும் தயாரிப்பின்(களின்) உரிமை அல்லது பொறுப்பைப் பாதிக்கக்கூடிய எந்த சட்டவிரோத நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது.

## V. குறிப்பீடுகள் மற்றும் உத்தரவாதங்கள்

(a) இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்கள் சார்ந்த, கடன் பெறுபவரின்/களின் பரிவர்த்தனைகளின் உள்நுழைதல், ஒப்படைத்தல் மற்றும் செயல்பாடு பின் வருவனவற்றுடன் முரண்படக் கூடாது (அ) எதாவது சட்டம்; (ஆ) கடன் பெறுபவரின்/களின் அரசியலமைப்பு ஆவணங்கள்; அல்லது (இ) கடன் பெறுபவர்/கள் அல்லது அதன்/அவரது/அவர்களது சொத்துக்களுடன் பிணைப்பில் இருக்கும் எதாவது ஆவணம்.

(b) கடன் பெறுபவர்/கள் செலுத்த வேண்டிய தொகைகள் கடன் பெறுபவரின்/களின் முடித்தல்/நொடித்துப் போதல்/இறப்பு/கலைத்தல்/இணைப்பு அல்லது ஒன்று சேர்தல்/ மறுகட்டமைப்பு அல்லது வேறு வழியில் அல்லது நிர்வாகம் கையகப்படுத்தப்படுவது அல்லது கடன் பெறுபவரின்/களின் பொறுப்பு தேசியமயமாக்குதலால் பாதிக்கப்படாது, பலவீனமடையாது அல்லது விடுவிக்கப்படாது.

(c) எழுத்துப்பூர்வமாகக் கடன் வழங்குபவருக்கு வெளிப்படுத்தப்பட்டால் தவிர அல்லது கடன் வழங்குபவரால் அனுமதிக்கப்பட்டால் ஒழிய, எந்த தயாரிப்பிலும்(களிலும்) வில்லங்கங்கள் இருக்கக் கூடாது.

(d) கடன் பெறுபவர் மற்றும் அல்லது இணை கடன் பெறுபவர்/கள் அல்லது சூழலுக்கு ஏற்ப கடன் பெறுபவரின்/களின் மற்றும் அல்லது இணை கடன் பெறுபவரின்/களின் எதாவது இயக்குநர்/கூட்டாளி/உறுப்பினர் பணம் செலுத்தத் தவறியவர்/வேண்டுமென்றே

SPECIMEN COPY

பணம் செலுத்தத் தவறியவர் என்று அறிவிக்கப்பட மாட்டார்கள். கடன் பெறுபவர்/கள் மற்றும் அல்லது இணை கடன் பெறுபவர்/கள், பணத்தைச் செலுத்தத் தவறியவர்/ வேண்டுமென்றே பணத்தைச் செலுத்தத் தவறியவர் என்று கண்டறியப்பட்ட, ஒரு நிறுவனத்தின் இயக்குநர்/கூட்டாளி/உறுப்பினரைச் சேர்க்கக்கூடாது. ஒரு வேளை ஓர் நிறுவனத்தின் இயக்குநர்/கூட்டாளி/உறுப்பினரான ஓர் நபர் பணத்தைச் செலுத்தத் தவறியவர்/ வேண்டுமென்றே பணத்தைச் செலுத்தத் தவறியவர் என்று கண்டறியப்பட்டால், கடன் பெறுபவர்/கள் மற்றும் அல்லது இணை கடன் பெறுபவர்/கள், அத்தகைய நபரை நீக்குவதற்கான துரிதமான மற்றும் பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

(e) வசதியின் செலாவணியின் போது எந்த நேரத்திலும் பரிவர்தனை ஆவணங்கள் கீழ் நிலுவையில் இருக்கும் செயல்படுத்தப்படாத கடமைகளை ரத்து செய்யும் நிபந்தனையற்ற உரிமைக் கடன் வழங்குபவருக்கு உள்ளது மற்றும் கடன் வழங்குபவர் அதைக் குறித்து முன்கூட்டி தகவல் அளிக்க முயற்சி செய்வார் என்று கடன் பெறுபவர் நிபந்தனைகளின்றி ஒப்புக்கொள்கிறார் மற்றும் மேற்கொள்கிறார்.

**VI. சரியீடு**

(a) கடன் வழங்குபவர் மற்றும் அதன் இணை/குழு நிறுவனங்களுக்கு, மற்ற பற்றுரிமை அல்லது பொறுப்பு எதுவாக இருந்தாலும், தற்போதைய அத்துடன் எதிர்கால வைப்புகள் எந்த வகை மற்றும் இயல்பானாலும் (நிலை வைப்பு உட்பட)/ கடன் பெறுபவரின்/களின் எதாவது கணக்குகளில் இருக்கும் இருப்பு, அவை ஒற்றை பெயரில் அல்லது கூட்டுப் பெயரில்(களில்) இருந்தாலும் மற்றும் கடன் வழங்குபவரால் அல்லது அதன் குழு நிறுவனங்களால் கடன் பெறுபவருக்கு/களுக்கு வழங்கப்படும் மற்றும்/அல்லது கடன் பெறுபவரால்/களால் பயன்படுத்தப்படும் சேவைகள் மற்றும்/அல்லது கடன் வழங்குபவரால் அல்லது அதன் குழு நிறுவனங்களால் கடன் பெறுபவருக்கு/களுக்கு வழங்கப்படும் மற்ற எதாவது வசதிகளின் விளைவாக எழும் அனைத்து நிலுவைத் தொகைகளுக்காகக் கடன் வழங்குபவர் மற்றும்/அல்லது அதன் குழு நிறுவனங்கள் வைத்திருக்கும் /கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் (பிணை மூலம் அல்லது கடன் பெறுபவரால்/களால் கையெழுத்திடப்பட்ட/கையெழுத்திடப்படவிருக்கும் எதாவது ஒப்பந்தம் தொடர்புடையதாக) எதாவது தொகைகள், பிணைகள், பத்திரங்கள் மற்றும் மற்ற அனைத்து சொத்துக்கள் மற்றும் ஆவணங்கள் மீது சரியீடு மற்றும் பற்றுரிமைக்கான தலையாய உரிமை உள்ளது. இதன் கீழ் அல்லது மற்ற எதாவது ஆவணம்/ஒப்பந்தத்தின் கீழ் கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவர் மற்றும்/அல்லது அதன் குழு நிறுவனங்களுக்குக் கடன் பட்டிருக்கும் கடன் பாட்டை(உண்மையானது அல்லது வருநிகழ்வானது அல்லது முதன்மையானது அல்லது துணை ஈடானது அல்லது கூட்டானது மற்றும் அல்லது தனித்தனியானது), கடன் பெறுபவருக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல், சரிக்கட்டல், எதாவது வைப்பின்(களின்) சரியீடு மற்றும்/அல்லது கடன் வழங்குபவர் மற்றும் /அல்லது அதன் குழு நிறுவனங்களுடன் கடன் பெறுபவருக்கு இருக்கும் எதாவது கணக்கின்/களின் இருப்பிலிருந்து தொகைகளைப் பரிமாற்றம் செய்வதன் மூலம் தீர்க்க கடன் வழங்குபவர் மற்றும்/அல்லது அதன் குழு நிறுவனங்களுக்கு உரிமை உள்ளது, அத்தகைய கணக்கில் இருக்கும் வைப்பு(கள்)/இருப்புகள் அத்தகைய கட்டுப்பாட்டின் அதே செலாவணியில் இல்லை என்றாலும். கடன் பெறுபவரின்/களின் திவால், இறப்பு அல்லது முடிப்பதனால், இதன் கீழ் கடன் வழங்குபவர் மற்றும் அதன் குழு நிறுவனங்களின் உரிமைகள் பாதிக்கப்படாது. அத்தகையக் கூட்டுக் கணக்கு வைத்திருப்பவர்களுடனான அனைத்து சர்ச்சைகளை/ஆட்சேபனைகளைத் தீர்த்து வைப்பது கடன் பெறுபவரின்/களின் முழு பொறுப்பாகும்.

(b) மேலே குறிப்பிடப்பட்டுள்ள உரிமை அல்லது சட்ட செயல்பாடு, ஒப்பந்தம் அல்லது வேறு வழியில் கடன் வழங்குபவர் மற்றும் அதன் குழு நிறுவனங்கள் அந்த நேரத்தில் பெற்றுள்ள எதாவது மற்ற உரிமையுடன் கூடுதலாக, கடன் பெறுபவர், கடன் வழங்குபவரைப் பின்வருவனவற்றிற்கு அனுமதிக்கிறார்: (அ) எந்த நேரத்திலும் கடன் வழங்குபவர் மற்றும்/ அல்லது அதன் குழு நிறுவனங்களின் எதாவது கிளையுடன்/இடம் கடன் பெறுபவரின் எதாவது அல்லது அனைத்து கணக்குகள் மற்றும் பொறுப்புகளை ஒன்றிணைக்க; (ஆ) எந்த சட்ட நடவடிக்கையும் மேற்கொள்ளாமல் பொது அல்லது தனிப்பட்ட விற்பனை மூலம் கடன் வழங்குபவரிடம் இருக்கும் கடன் பெறுபவரின்/களின் எதாவது பிணைகள் அல்லது சொத்துக்களை விற்று, அத்தகைய விற்பனையுடன் தொடர்புடைய செலவுகள் மற்றும் செலவினங்கள் உட்படக் கடன் வழங்குபவர் மற்றும் /அல்லது அதன் குழு நிறுவனங்களுக்கு நிலுவையில் உள்ள மொத்த தொகையை வைத்துக்கொள்ள/ஈடு செய்ய; மற்றும்

SPECIMEN COPY

(c) ஒரு வேளை குறுக்கு செலாவணி சரியீடாக இருந்தால், கடன் வழங்குபவர் மற்றும்/அல்லது அதன் குழு நிறுவனங்களின் சுய விருப்பத்தில் நிர்ணயிக்கப்படும் விகிதத்தில் ஒரு செலாவணியில் இருக்கும் ஓர் கடமையை மற்றொரு செலாவணியாக மாற்ற.

**VII. பிணையமாக்குதல்**

(a) கடன் வழங்குபவருக்கு மேலும் எந்த எழுத்துப்பூர்வமான அறிவிப்பும் கொடுக்காமல் அல்லது கடன் வழங்குபவரிடமிருந்து எந்த எழுத்துப்பூர்வமான அறிவிப்பும் பெறாமல், கடன் பெறுபவரின்/களின் முழு அல்லது எதாவது நிலுவைகள், கடன் வழங்குபவரின் தேர்வான எதாவது மூன்றாம் தரப்பினரிடம், கடன் வழங்குபவர் முடிவு செய்யும் அத்தகைய முறையில் அல்லது வாங்குபவர், நியமிக்கப்பட்டவர் அல்லது இடமாற்றப்பட்டவர் சார்பாகக் கடன் பெறுபவருக்கு/களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கக் கடன் வழங்குபவரின் உரிமையைத் தக்க வைத்துக்கொள்வது உட்படக் கடன் வழங்குபவரால் முடிவு செய்யப்படும் அத்தகைய விதிமுறைகளில், முழுமையாக அல்லது பகுதியாக, விற்க, உரிமை மாற்றம் செய்யக் கடன் வழங்குபவருக்கு முழு உரிமை மற்றும் முழு அதிகாரம் உள்ளது என்று கடன் பெறுபவர்/கள் வெளிப்படையாக அங்கீகரித்து ஏற்றுக்கொள்கின்றனர்.

(b) எதாவது அத்தகைய நடவடிக்கை மற்றும் எதாவது அத்தகைய விற்பனை அல்லது உரிமை மாற்றம், அத்தகைய மூன்றாம் தரப்பினரைப் பிரத்தியேகமாகக் கடன் கொடுத்தவர் அல்லது கடன் வழங்குபவருடன் கூட்டாகக் கடன் கொடுத்தவர் அல்லது அத்தகைய மூன்றாம் தரப்பினர் சார்பாக இதன் கீழ் அனைத்து அதிகாரங்களையும் வலியுறுத்துவதைத் தொடரும் கடன் வழங்குபவரின் முழு உரிமைகளுடனான கடன் கொடுத்தவர் என்று ஏற்றுக்கொள்ளும் படி கடன் பெறுபவரை/களைப் பிணைக்கிறது மற்றும் கடன் வழங்குபவரின் வழிக்காட்டுதலின் படி அத்தகைய நிலுவைத் தொகைகளை அத்தகைய மூன்றாம் தரப்பினரிடம் மற்றும்/அல்லது கடன் வழங்குபவரிடம் செலுத்தலாம்.

(c) அத்தகைய விற்பனை, உரிமை மாற்றம் அல்லது உரிமைகளைச் செயல்படுத்துதல் மற்றும் நிலுவைகளை மீட்டல் போன்ற, இது சார்பான எந்த செலவும், கடன் பெறுபவருக்கு(களுக்கு) உரியது.

(d) கடன் பெறுபவர்/கள், அவரது/அதன் வசதி/கடன் கணக்கு போர்ட்ஃபோலியோவை மூன்றாம் தரப்பினருக்கு மாற்றும் போது நிலுவையில் உள்ள தொகை மற்றும் கடன் வழங்குபவரால் பெறப்பட்ட தொகைக்கும் இடையே இருக்கும் வேறுபாட்டை மூன்றாம் தரப்பினருக்குச் செலுத்துவதாகப் பொறுப்பேற்று ஒப்புக்கொள்கிறார்/கள்.

(e) கடன் கணக்கின் அத்தகைய இடமாற்றம் /உரிமைமாற்றத்தின் போது செலுத்த வேண்டிய தொகையை வசூலிக்கும் கடன் பெறுபவரின் அதிகாரம் மூன்றாம் தரப்புக்கு உள்ளது.

**VIII. இடையீட்டுப் பொறுப்பு**

(a) இந்த ஒப்பந்தம் அல்லது எதாவது மற்ற ஒப்பந்தம் சார்பான இந்த ஒப்பந்தம் அல்லது கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவரால்/களால் செய்யப்பட்ட பரிவர்த்தனையின் கீழ் மற்றும்/அல்லது மற்ற கடன்பட்ட நிலை சார்பாகக் கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவரால்/களால் செலுத்தப்பட்ட தொகையைக் கடன் வழங்குபவர், முழுமையாகத் தனது சுய தேர்வில் பயன்படுத்தலாம் மற்றும் அத்தகைய உபயோகம் இறுதியானது மற்றும் கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவர்/கள் மீது பிணைப்புடையது, அவ்வாறு மற்ற ஒப்பந்தங்கள் அல்லது கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவரால்/களால் செய்யப்பட்ட பரிவர்தனை அல்லது மற்ற கடன் பட்ட நிலை சார்பாக உபயோகப்படுத்தப்பட்ட அத்தகைய தொகையை இந்த ஒப்பந்தத்தின் கீழ் செலுத்தவேண்டிய பொறுப்பில் கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவர்/கள் தொடர்வர் என்று கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவர்/கள் ஒப்புக்கொண்டு உறுதிப்படுத்துகின்றனர்.

(b) கூடுதலாக, கடன் நிலுவைத் திரும்பச் செலுத்தப்பட்டாலும் கூட, இந்த ஒப்பந்தம் அல்லது கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவர்/கள் மற்றும் கடன் வழங்குபவரின் இணை / தொடர்புடைய அல்லது குழு நிறுவனம் இடையே கையெழுத்திடப்பட்ட எதாவது மற்ற ஒப்பந்தத்தின் கீழ் கடன் வழங்குபவருக்குச் சாதகமாக உருவாக்கப்பட்ட அனைத்து அல்லது எதாவது பிணை அல்லது எதாவது மற்ற பிணை ஆவணங்கள் அல்லது கடன் வழங்குபவருடனான வைப்பு அல்லது கடன் வழங்குபவரின் வசம் அல்லது கட்டுப்பாட்டின் கீழ் இருப்பவற்றை

SPECIMEN COPY

உடைமையாக்கிக் கொள்ள/விற்க/உரிமை மாற்றம் செய்ய அல்லது அகற்ற மற்றும் அதை இந்த ஒப்பந்தம் அல்லது கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவரால்/களால் செய்யப்பட்ட பரிவர்தனை அல்லது கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவரின்/களின் கடன்பட்ட நிலையின் மீது கடன் வழங்குபவரிடம் நிலுவையில் உள்ள தொகையை நிறைவு செய்வதற்காக உபயோகித்துக்கொள்ளக் கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவருக்கு வெளிப்படையாக மற்றும் திரும்பப்பெற முடியாத படி அதிகாரம் அளிக்கிறார்கள். இந்த ஒப்பந்தம் மற்றும் இந்த ஒப்பந்தம் தொடர்பாகச் செயல்படுத்தப்பட்ட எதாவது பிணைய ஆவணத்தில் உள்ள விதிகள் இந்த சட்டப்பகுதியின் கீழ் தேவையான மாறுதல்களுடன் பிணையை நிறைவேற்றும் மற்றும் கைப்பற்றும் முறைக்குப் பொருந்தும்.

## IX. தகவல்களை வெளிப்படுத்துதல்

a) கடன் வழங்குபவர், உகந்தது மற்றும் அவசியமானது என்று கருதினால், பின்வருவன அனைத்தையும் அல்லது அவற்றில் எதையாவது கடன் தகவல் நிறுவனம் (இந்தியா) (சி.ஐ.பி.ஐ.எல்) அல்லது இது சார்பாக அங்கீகரிக்கப்பட்ட ஆர்.பி.ஐ-இன் மற்ற எதாவது முகமைக்கு வெளிப்படுத்த உரிமை உள்ளது;(i) கடன் பெறுபவர்/கள் மற்றும் இணை கடன் பெறுபவர்/கள் தொடர்புடைய தகவல்கள் மற்றும் தரவுகள்; (ii) வசதி, கடன் விதிமுறைகள், பரிவர்தனை ஆவணங்கள் மற்றும் /அல்லது கடன் வழங்குபவருக்குச் சாதகமாகக் கடன் பெறுபவரால்/களால் வழங்கப்பட்ட மற்ற எதாவது பிணைகள்; (iii) இந்த ஒப்பந்தத்தின் கீழ் வழங்கப்பட்ட வசதி, பரிவர்தனை ஆவணங்கள் அல்லது கடன் வழங்குபவரால் வழங்கப்பட்ட/வழங்கப்படவிருக்கும் மற்ற எதாவது கடன் வசதிக்காகக் கடன் பெறுபவரால்/களால் வழங்கப்பட்ட எதாவது மற்ற பிணைகளுடன் தொடர்புடையதாகக் கருதப்பட்ட/கருதப்படக்கூடிய எதாவது கடமைகள்; (iv) கடன் பெறுபவர்/கள் மேற்படி கடமைகளை நிறைவேற்றத் தவறினால். சி.ஐ.பி.ஐ.எல் மற்றும்/அல்லது அங்கீகரிக்கப்பட்ட மற்ற எதாவது முகமை, அவர்களால் உகந்தது எனக் கருதப்படும் எதாவது முறையில், கடன் வழங்குபவரால் வெளிப்படுத்தப்பட்ட மேற்படி தகவல்கள் மற்றும் தரவுகளைப் பயன்படுத்தலாம் மற்றும்/அல்லது செயல்படுத்தலாம். கடன் வழங்குபவர்/நிதி நிறுவனங்கள் மற்றும் மற்ற கடன் வழங்குபவர்கள் அல்லது இது சார்பாக ஆர்.பி.ஐ-ஆல் குறிப்பிடப்பட்ட பதிவு செய்யப்பட்ட பயன்பாட்டாளர்களுக்காகத் தயாரிக்கப்பட்ட செயலாக்கப்பட்ட தகவல்கள் மற்றும் தரவுகள் அல்லது தயாரிப்புகளைக் கருத்தில் கொள்வதற்காக சி.ஐ.பி.ஐ.எல் மற்றும்/அல்லது அங்கீகரிக்கப்பட்ட மற்ற எதாவது முகமை வழங்கலாம். கடன் பெறுபவரால் கடன் வழங்குபவருக்கு அவ்வப்போது வழங்கப்படும் அனைத்து தகவல்கள் மற்றும் தரவுகள், உண்மையானதாகவும் மற்றும் சரியானதாகவும் இருக்க வேண்டும்.

b) ஒரு வேளை, கடன் பெறுபவர்/கள், வசதியின் அசல் தொகை அல்லது வட்டியை/கட்டணங்களைச் செலுத்த அல்லது திரும்பச் செலுத்தத் தவறினால், கடன் வழங்குபவர் மற்றும்/அல்லது இந்திய ரிசர்வ் வங்கி ("ஆர்.பி.ஐ") அத்தகைய பணம் செலுத்தத் தவறுதல் குறித்த தகவல்களைக் கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது அதன் இயக்குநர்கள்/கூட்டாளிகள்/கூட்டு விண்ணப்பதாரர்களின் பெயருடன் பணம் செலுத்தத் தவறியவர்கள் என்று அத்தகைய முறையில் மற்றும் கடன் வழங்குபவர் மற்றும்/அல்லது ஆர்.பி.ஐ-ஆல் அதன் முழுமையான சுயத் தேர்வில் பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய ஊடகம் மூலம் வெளிப்படுத்தவும் அல்லது வெளியிடவும் தகுதியற்ற உரிமை உள்ளது. இப்பொழுது அல்லது எதிர்காலத்தில் தகவல்களைப் பகிர்வதற்கு மற்றும்/அல்லது வெளிப்படுத்துவதற்கு மற்றும் அதன் காரணமாகக் கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது மற்றவருக்கு ஏற்படும் ஏற்படும் எந்த விளைவுகளுக்கும் கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது இணை கடன் பெறுபவர்/கள் கடன் வழங்குபவரைப் பொறுப்பாகக் கூற முடியாது. இந்த ஒப்பந்தம் நிறுத்தப்பட்ட பிறகு மற்றும் கடன் பெறுபவரின் நிலுவைகள் திரும்பச் செலுத்தப்பட்ட பிறகும் இந்த உட்கூறில் உள்ள விதிகள் செல்லுபடி ஆகும்.

## X. மத்தியஸ்தம்

இந்த வழங்கல்கள் அல்லது எதாவது விதத்தில் அது சம்பந்தமாக அல்லது அதன் அமைப்பு, பொருள் அல்லது விளைவு அல்லது இதன் கீழ் உள்ள தரப்பினரின் உரிமை மற்றும் பொறுப்பால் எழும் அனைத்து முரண்பாடுகள், வேறுபாடுகள் மற்றும்/அல்லது கோரிக்கைகள், மத்தியஸ்தம் மற்றும் ஒத்துழைப்பு சட்டம், 1996 அல்லது எதாவது சட்டத் திருத்தங்கள் அல்லது அதன் மறு சட்டமிடலின் விதிகளுக்கு இணங்க மத்தியஸ்தம் மூலம் தீர்வு காணப்பட வேண்டும்

SPECIMEN COPY

மற்றும் கடன் வழங்குபவரால் நியமனம் செய்யப்பட்ட தனிப்பட்ட நடுவரிடம் குறிப்பிடலாம். ஒரு வேளை நடுவராகச் செயல்பட நியமிக்கப்பட்ட நபர் இறந்து, மறுத்து, புறக்கணித்து, இயலாமல் அல்லது திறமையற்று போனால், கடன் வழங்குபவர், அவரது இடத்தில் மற்றொரு நபரை நடுவராக நியமிக்கலாம். இசைவுத் தீர்வு நடவடிக்கைகள், மும்பை அல்லது கடன் வழங்குபவரால் தேர்ந்தெடுக்கப்படும்/நெறிப்படுத்தப்படும் அத்தகைய மற்ற இடங்களில் மேற்கொள்ளப்படலாம். நடுவரால் வழங்கப்படுவ தான் இறுதியானது மற்றும் அது சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினர் மீதும் பிணைப்பில் இருக்கும் மற்றும் செயல்படுத்தல் நடவடிக்கைகளின் போது கூறப்பட்ட தயாரிப்பு(கள்) வைக்கப்பட்டுள்ள/சேமிக்கப்பட்டுள்ள / நிறுத்தப்பட்டுள்ள இடத்தில் செயல்படுத்தப்படும்.

**XI. சட்ட எல்லை**

இந்த ஒப்பந்தம், பரிவர்த்தனை ஆவணங்கள் மற்றும் தயாரிப்புகள்/ தொடர்பாக எழும் அனைத்து சட்ட ரீதியான நடவடிக்கை/கள் மற்றும்/அல்லது செயல்முறை ஆணைகள், நீதிமன்றம் அல்லது சம்பந்தப்பட்ட தீர்ப்பாயம் அல்லது கடன் வழங்குபவரால் தேர்ந்தெடுக்கப்படும் அத்தகைய மற்ற இடத்தின் முன் கொண்டு வரப்பட்டு, கடன் பெறுபவர்/கள் அந்த நீதிமன்றத்தின் பிரத்தியேக சட்ட எல்லைக்குக் கீழ்ப்படிய வேண்டும். கடன் வழங்குபவர், அவர் முழு விருப்பத்தில், இந்த மேலுள்ள எதாவது (அல்லது தொடர்புடையது) மூலம் எழும் எதாவது சட்ட ரீதியான நடவடிக்கை அல்லது செயல்முறை ஆணைகளை மற்ற எதாவது நீதிமன்றம், தீர்ப்பாயம் அல்லது பொருத்தமான மற்ற மன்றத்தில் தொடங்கலாம் மற்றும் கடன் பெறுபவர்/கள் அத்தகைய சட்ட எல்லையை எதிர்க்கக்கூடாது.

**XII. அறிவிப்புகள்**

கடன் பெறுபவர்/கள் செலுத்த வேண்டிய தொகைகள் மற்றும்/அல்லது இந்த ஒப்பந்தத்தின் கீழ் அல்லது தொடர்புடையதாக வழங்கப்படும் அனைத்து அறிவிப்புகள் அல்லது மற்ற தகவல் தொடர்புகள் எழுத்துப்பூர்வமாக இருக்க வேண்டும் மற்றும் இல்லையென்றால் கடிதம் அல்லது தொலைநகல் மூலமாகச் செய்யப்படலாம். அத்தகைய அறிவிப்பு அல்லது மற்ற தகவல் தொடர்புகள் செயல் விளைவுடையதாகக் கருதப்படும்:
(i) கடிதம் மூலம் அனுப்பப்பட்டால், நேரில் ஒப்படைக்கப்பட்டால் அல்லது தபால் மூலம் அனுப்பப்பட்டால், கடிதத்தைத் திரும்பப் பெறுதல் அனுப்புபவரின் கட்டுப்பாட்டிற்கு வெளியே இருக்கும் போது; மற்றும் (ii) தொலைநகல் மூலம் அனுப்பப்பட்டிருந்தால், அனுப்பப்பட்ட போது (சரியான தொலைநகல் எண்ணிலிருந்து உறுதிப்பாட்டைப் பெறும் போது). கடன் வழங்குபவருக்கு வழங்கப்பட்ட அறிவிப்பு அல்லது தகவல் தொடர்பு உண்மையில் கடன் வழங்குபவரால் பெறப்பட்டு ஒப்புக்கொள்ளப்படும் வரை செயல் விளைவுடையதாகாது. அறிவிப்புகள் அல்லது தகவல் தொடர்பைப் பின்வருவனவற்றிற்கு அனுப்பலாம்: (i) அறிவிப்புகளை அனுப்ப வேண்டிய கடன் பெறுபவர்/கள் மற்றும் இணை கடன் பெறுபவரின்/களின் அல்லது தொலைநகல் எண் (ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள படி), மற்றும் (ii) கடன் வழங்குபவருக்கு, பின்வரும் அதன் பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தில் ஃபோக்ஸ்வேகன் ஃபைனான்ஸ் ப்ரைவேட் லிமிடட், சில்வர் யுதோபியா, 3-ஆம் தளம், ஏ விங், கார்டினல் கிரேசியஸ் சாலை, சகலா, கிழக்கு அந்தேரி, மும்பை 400 099. கடன் பெறுபவர்/கள், அவரது/அவர்களது தொடர்பு முகவரியில் அல்லது விவரங்களில் எதாவது மாற்றங்கள் குறித்து எழுத்துப் பூர்வமாகக் கடன் வழங்குபவரிடம் இடம் அறிவிக்கத் தவறினால், பிறகு இந்த ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அறிவிப்பு/கடிதத் தொடர்பு சேவை வழங்கக் கடன் பெறுபவரால்/களால் இறுதியாக வழங்கப்பட்ட முகவரி சரியானது மற்றும் போதுமானது என்று கருதப்பட்டு கடன் பெறுபவருக்கு/களுக்கு சேவை வழங்கப்படும், அத்தகைய அறிவிப்பு "பணியாற்றாமல்" திருப்பி அனுப்பப்பட்டாலும் திருப்பி அனுப்பப்படாவிட்டாலும்.

**XIII. இதர**

(a) தயாரிப்புகளுக்கான எதாவது உற்பத்தியாளர்கள்/வியாபாரி/விற்பனையாளர்கள் யாரால் அல்லது யார் மூலமாக இந்த பரிவர்த்தனை அறிமுகப்படுத்தப்பட்டது, பேச்சுவார்த்தை நடத்தப்பட்டது அல்லது நடத்தப்பட்டதோ அவர்கள் கடன் வழங்குபவரின் ஓர் முகவர் என்று கருதப்படக் கூடாது மற்றும் அத்தகைய உற்பத்தியாளர்/வியாபாரி/விற்பனையாளரால் கடன் பெறுபவருக்கு/களுக்கு செய்யப்பட்ட விளக்கம் அல்லது கூற்றிற்குக் கடன் வழங்குபவர்கள் பொறுப்பாக மாட்டார்கள் என்று வெளிப்படையாகத் தெளிவுபடுத்தப்பட்டு அறிவிக்கப்படுகிறது.

(b) கடன் பெறுபவர்/கள் செலுத்த வேண்டிய தொகைகள் அல்லது பிணை, கடன் வழங்குபவருக்குச் சாதகமாக உருவாக்கப்பட்டிருந்தால், அவை கடன் பெறுபவர்/கள் அல்லது எதாவது மூன்றாம் தரப்பினரின் மரணம், கலைப்பு, நொடிப்பு அல்லது முடிவடைவதால் திரும்பப்

SPECIMEN COPY

பெறப்படாது அல்லது ரத்து செய்யப்படாது அல்லது பாதிக்கப்படாது மற்றும் கடன் பெறுபவர்/கள் செலுத்த வேண்டிய தொகைகள் முழுவதும் (அல்லது எதாவது பகுதி) கடன் வழங்குபவருக்கு நிலுவையில்/செலுத்த வேண்டி இருக்கும் வரை, உடைமையாக்கிக்கொள்ள மற்றும் விற்க, குத்தகைக்கு விட, வாடகைக்கு விட, இடமாற்றம் செய்ய மற்றும்/அல்லது தயாரிப்பின்(களின்) அடிப்படையில் வேறு எதாவது செயல்/ஒப்பந்தம் செய்ய மற்றும் கடன் வழங்குபவருக்குச் சாதகமாகக் கடன் பெறுபவர்/கள் மற்றும்/அல்லது மற்ற எதாவது நபர்களால் செயல்படுத்தப்பட்ட பரிவர்தனை ஆவணங்கள் மற்றும் கடன் ஒப்பந்த விதிமுறைகளுக்கு இணங்க அதன் அனைத்து உரிமைகள் மீதும் செயலாற்ற மற்றும் செயல்படுத்தக் கடன் வழங்குபவருக்கு உரிமை உள்ளது.

(c) அதன் வழக்கமான நடைமுறைக்கு ஏற்ப மற்றும் சட்டமுறையான தேவைகளுடன் இணக்கமாகப் பராமரிக்கப்படும் கடன் வழங்குபவரின் கணக்குகள்/கணக்கு புத்தகம்/ஆவணத்தில் செய்யப்பட்டுள்ள பதிவுகள் மற்றும்/ அல்லது கடன் வழங்குபவரின் நியமிக்கப்பட்ட அதிகாரியால் கடன் பெறுபவர்/கள் செலுத்த வேண்டிய தொகையின் அடிப்படையில் கையெழுத்திடப்பட்ட அறிக்கை, இறுதியானது மற்றும் கடன் பெறுபவர்/கள் மீது பிணைப்பில் இருக்கக் கூடியது. அத்தகைய பதிவுகள் மற்றும்/அல்லது அறிக்கை, வசதி மற்றும் கடன் பெறுபவரால்/களால் செலுத்தப்பட வேண்டிய தொகை சம்பந்தமாகப் பதிவு செய்யப்பட்ட கடன் பெறுபவரின்/களின் நிலுவைக் கடமைகளின் இருப்பு மற்றும் அளவின் அறுதிச் சான்றாகும்.

(d) கடன் வழங்குபவரின் ஒப்புதலின்றி, கடன் பெறுபவர்/கள், இந்த ஒப்பந்தத்தின் கீழ் அதன் அனைத்து அல்லது எதாவது உரிமைகள், பலன்கள் அல்லது கடமைகளை உரிமை மாற்றம் செய்யக் கூடாது. கடன் வழங்குபவர், எந்த நேரத்திலும் இந்த ஒப்பந்தம் அல்லது மற்ற பரிவர்தனை ஆவணங்களின் கீழ் அதன் அனைத்து அல்லது எதாவது உரிமைகள், பலன்கள் அல்லது கடமைகளை உரிமை மாற்றம் செய்யலாம். எதாவது அத்தகைய உரிமை மாற்றம் இருந்தாலும் கூட, கடன் பெறுபவர்/கள், கடன் வழங்குபவரால் அறிவிக்கப்பட்டால் ஒழிய, இந்த ஒப்பந்தத்தின் கீழ் கடன் வழங்குபவருக்கு அனைத்து பணம் செலுத்தல்களையும் தொடர வேண்டும் மற்றும் அத்தகைய அனைத்து செலுத்தல்களும் கடன் வழங்குபவருக்குச் செலுத்தப்பட்டவுடன், அத்தகைய செலுத்தல் தொடர்பான கடன் பெறுபவரின்/களின் அனைத்து பொறுப்புகளுக்குமான முழு நிறைவேற்றமாக அமையும்.

(e) உட்கூறு 6-இன் மேற்படி விதிகளைச் சாராமல், கடன் வழங்குபவர், கடன் பெறுபவருக்கு(களுக்கு) முன்னறிவிப்பு வழங்காமல், வசதிகள் முழுவதும் அல்லது பகுதியின் கடன் அபாயத்தை, பங்கேற்பு முறை மூலம் மற்ற எதாவது நபருடன் பகிரலாம். அத்தகைய பங்கேற்பைச் சாராமல், இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்களின் கீழ் கடன் வழங்குபவர் அனுபவிக்கும் அல்லது மீது நிலைநாட்டப்படும் அல்லது கொண்டுள்ள அனைத்து உரிமைகள், உரிமைப் பட்டியல், வட்டிகள், சிறப்பு அந்தஸ்து மற்றும் மற்ற பலன்கள் மற்றும் சிறப்புரிமைகள், செல்லுபடியானது, பயன் விளைவுடையது மற்றும் கடன் வழங்குபவரால் அதே விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் மீது செயல்படுத்தக்கூடியது மற்றும் கடன் பெறுபவர்/கள் இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்களின் கீழ் கடன் வழங்குபவரிடம் அவரது அனைத்து கடமைகளை முழுவதுமாக நிறைவேற்றுவதைத் தொடர வேண்டும். கடன் பெறுபவர்/கள் எந்த காரணத்திற்காகவும் அத்தகைய நபரிடம் எந்த ஒப்பந்தச் சார்புறவையும் கொள்ளக் கூடாது மற்றும் கோரக்கூடாது

(f) இந்த ஒப்பந்தம் அல்லது எதாவது மற்ற பரிவர்தனை ஆவணத்தில் உள்ள விதிமுறையை, எதாவது ஆட்சி எல்லையில் தடை செய்யப்பட்டுள்ளது அல்லது செயல்படுத்த முடியாது என்றால், அத்தகைய ஆட்சி எல்லையில் தடை அல்லது செயல்படுத்த முடியாமல் இருக்கும் வரை விளை பயனற்றதாகும், ஆனால், இந்த ஒப்பந்தம் அல்லது அத்தகைய மற்ற பரிவர்தனை ஆவணத்தில் மீதமுள்ள விதிமுறைகளை விளை பயனற்றதாக்காது அல்லது வேறு எந்த ஆட்சி எல்லையிலும் அத்தகைய விதிமுறையைப் பாதிக்காது.

(g) பணம் செலுத்தத் தவறுதல் மீது அல்லது இந்த ஒப்பந்தம் அல்லது மற்ற பரிவர்த்தனை ஆவணங்களின் கீழ் கடன் வழங்குபவரிடம் சேரும் எதாவது உரிமை, அதிகாரம் அல்லது தீர்வை பயன்படுத்தத் தவறினால் அல்லது பயன்படுத்தாமல் தவிர்த்தால், அது அத்தகைய உரிமை, அதிகாரம் அல்லது தீர்வை முடக்காது அல்லது அதன் தள்ளுபடியாக அல்லது அத்தகைய பணம் செலுத்தத் தவறுதலுக்கு இணக்கமானது என்று கருதக்கூடாது அல்லது எதாவது பணம் செலுத்தத் தவறுதலுக்குக் கடன் வழங்குபவர் நடவடிக்கை எடுத்தல் அல்லது நடவடிக்கை எடுக்காமை அல்லது எதாவது பணம்

SPECIMEN COPY

செலுத்தத் தவறுதலில் எதாவது இணக்கம், எதாவது மற்ற பணம் செலுத்தத் தவறுதலைப் பொறுத்து கடன் வழங்குபவரின் எந்த உரிமை, அதிகாரம் அல்லது தீர்வும் பாதிப்படையாது அல்லது முடங்காது. இந்த ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்களின் கீழ் கடன் வழங்குபவரின் உரிமைகள் தேவைக்கேற்ப அவ்வப்போதுப் பயன்படுத்தப்படலாம், அவை திரளானது மற்றும் பொதுச் சட்டத்தின் கீழ் இருக்கும் அவர்களது உரிமைகளிலிருந்து பிரத்தியேகமானது அல்ல மற்றும் குறிப்பாக கடன் வழங்குபவரின் சுய விருப்பப்படி எழுத்துப் பூர்வமாக மட்டும் தள்ளுபடி செய்யப்படலாம்.

(h) வசதி, கடன் ஒப்பந்தம் மற்றும் மற்ற பரிவர்தனை ஆவணங்கள் (இந்த ஒப்பந்தத்தில் அல்லது அத்தகைய எதாவது பரிவர்தனை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டிருந்தால் ஒழிய) இந்தியச் சட்டங்களால் கண்காணிக்கப்பட்டு அதற்கு இணக்கமாக அமைக்கப்படும்.

(i) ஒரு வேளை ஒன்றுக்கும் மேற்பட்ட கடன் பெறுபவர் கூட்டாகக் வசதிக்கு விண்ணப்பித்தால், தயாரிப்பு(கள்) கூட்டாக கடன் பெறுபவர்/கள் அனைவரின் பெயரிலும் இருந்தாலும் இல்லாவிட்டாலும், கடன் பெறுபவரின்(களின்) நிலுவையைத் திரும்பச்செலுத்தக் கடன் பெறுபவரின்/களின் பொறுப்பு, கூட்டாக மற்றும் பல்வேறுபட்டு இருக்கும். கடன் பெறுபவர்/கள் ஓர் சொந்த நிறுவனத்தில் தொழில் செய்யும் ஓர் தனிப்பட்ட நபராக இருந்தால், மேலே குறிப்பிட்டுள்ள நிறுவனத்தின் பொறுப்புகளுக்குக் கடன் பெறுபவர்/கள் தான் முழு பொறுப்பு மற்றும் வசதி சம்பந்தப்பட்ட அனைத்து தொகையையும் கடன் வழங்குபவரிடம் திரும்பிச் செலுத்துவது/செலுத்துவது தனிப்பட்ட முறையில் கடன் பெறுபவரின் பொறுப்பாகும்.

(j) இந்த ஒப்பந்தம், ஆர்.பி.ஐ அல்லது மற்ற எதாவது சட்ட அதிகார சபையால் அவ்வப்போது வழங்கப்படும் வழிகாட்டுதல்களின் அடிப்படையில், கடன் வழங்குபவரின் விருப்பப்படி மாற்றங்களுக்கு உட்பட்டது.

(k) துணை உட்கூறு 12-ஐ சாராமல், எழுத்துப்பூர்வமாகச் செய்யப்பட்டு மற்றும் இந்த ஒப்பந்தத்தில் உள்ள அனைத்து தரப்பினராலும் முறையாகச் செயல்படுத்தப்பட்டால் ஒழிய இந்த ஒப்பந்தத்தின் மாற்றங்கள் மற்றும் திருத்தங்கள் மற்றும் இங்குள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் விலக்கு செல்லுபடியாக் கூடியதாக அல்லது பிணைப்புடையதாகக் கருதப்படாது.

(l) இந்த ஒப்பந்தத்தின் கீழ் இருக்கும் இரண்டு தரப்பினரின் அனைத்துத் தீர்வுகளும் இங்கு வழங்கப்பட்டாலும் அல்லது எதாவது சட்டம், உரிமையியல் சட்டம், வழக்கம் அல்லது வணிக பயன்பாடுகளால் வழங்கப்பட்டாலும், அவைத் திரளானது மற்றும் மாற்று இல்லாதது மற்றும் அடுத்தடுத்து அல்லது ஒருங்கிணைந்து செயலாக்கப்படலாம்.

(m) ஜி.எஸ்.டி நடைமுறைப்படுத்தப்பட்டதன் காரணமாக, செயலாக்கக் கட்டணங்கள், கடன் ரத்தாக்கல் கட்டணங்கள் உட்பட ஆனால் இவை மட்டும் அல்லாமல் கட்டணங்கள் தொடர்பாகப் பெறப்பட்ட தொகையிலிருந்துலிருந்து வரி(கள்) (அதாவது, ஐ.ஜி.எஸ்.டி அல்லது எஸ்.ஜி.எஸ்.டி & சி.ஜி.எஸ்.டி), பொருந்தும் விகிதத்தில் விதிக்கப்பட்டு மீட்கப்படும். கடன் பெறுபவர் செலுத்த வேண்டிய அத்தகைய தொகையை எதாவது காரணத்திற்காகச் செலுத்த மறுத்தால்/தவறினால், பிறகு அதைப் பொருந்தும் வட்டி விகிதத்துடன் மீட்கும் உரிமைக் கடன் வழங்குபவருக்கு உள்ளது. கட்டணங்கள் தொடர்பாகக் கடன் பெறுபவர் முன்பணம் செலுத்திவிட்டு, ஒப்பந்தம் நிறுத்தப்பட்டால் அல்லது எதிர்காலத்தில் எதாவது காரணத்திற்காகக் கடன் பெறுபவர் 'வசதியை' பெற மறுத்தால், முன்பணம் பெறும் போது வசூலித்த வரியை(களை) (அதாவது, ஐ.ஜி.எஸ்.டி அல்லது எஸ்.ஜி.எஸ்.டி & சி.ஜி.எஸ்.டி) திருப்பிக் கொடுக்காமல் இருக்கும் உரிமை கடன் வழங்குபவருக்கு உள்ளது.

(n) ஜி.எஸ்.டி சட்டத்தால் கண்காணிக்கப்படும் வரி விகிதத்தில் மாற்றத்தின் காரணமாக கடன் வழங்குபவர் மீது எழும் பொறுப்புகளைச் சார்ந்து கடன் பெறுபவர்(கள்) கடன் வழங்குபவருக்கு இழப்பீடளிக்க மற்றும் ஊறு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளக் கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார். வரி பொறுப்பு அல்லது வரியைத் திருப்பிக்கொடுப்பதனால் எழும் அனைத்து கேள்விகள் அல்லது சர்ச்சைகள், பொருந்தும் ஜி.எஸ்.டி சட்டத்தால் கண்காணிக்கப்படும். மேலும், பணம் செலுத்தத் தவறுதல் அல்லது வேறு காரணத்திற்காகக் கடன் பெறுபவரிடமிருந்து நிலுவைகளை மீட்கும் காலத்தில் கட்டணங்களுக்காக/மீது கடன் வழங்குபவர் எதாவது வரி(கள்) (அதாவது ஐ.ஜி.எஸ்.டி அல்லது எஸ்.ஜி.எஸ்.டி & சி.ஜி.எஸ்.டி) செலுத்தி இருந்தால் கடன் வழங்குபவரைப் பாதுகாக்க, இழப்பீடளிக்க மற்றும் ஊறு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளக் கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

SPECIMEN COPY

மேலும், ரத்தாக்கல் கட்டணங்கள் என்று ஆனால் இதன் வரையறைக்குள் மட்டும் இல்லாமல் கட்டணமிடப்பட்ட எதாவது தொகை மீது கடன் வழங்குபவர் எதாவது வரி(கள்) (அதாவது ஐ.ஜி.எஸ்.டி அல்லது எஸ்.ஜி.எஸ்.டி & சி.ஜி.எஸ்.டி) செலுத்த வேண்டி இருந்தால் நிறுவனத்தைப் பாதுகாக்க, இழப்பீடளிக்க மற்றும் ஊறு விளைவிக்காமல் பார்த்துக்கொள்ளக் கடன் பெறுபவர் ஒப்புக்கொள்கிறார்.

(o) பதிவு செய்யப்பட்ட நபர் மற்றும் ஜி.எஸ்.டி சட்டத்தின் கீழ் சரியான ஜி.எஸ்.டி.ஐ.என்/யு.ஐ.டி வைத்திருக்கும் கடன் பெறுபவர், கடன் வழங்குபவர் மற்றும் கடன் பெறுபவரால் பரஸ்பரம் முடிவு செய்யப்பட்ட காலகட்டத்தில் தகுந்த நேரத்திற்குள் அவருக்கு வழங்கப்பட்ட வசதி ஆனால் அவை மட்டும் அல்லாமல் தொடர்புடைய ஜி.எஸ்.டி சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட இணக்கத்தை நிறைவேற்றும் காலத்தில் அவர் செய்த எதாவது திருத்தங்கள்/மாற்றங்கள் குறித்து கடன் வழங்குபவருக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளார். ஜி.எஸ்.டி சட்டத்துடன் இணங்காத காரணத்தால் கடன் ஒப்பந்தத்தை ரத்து செய்ய/நிறுத்த மற்றும் அதனுடன் தொடர்புடைய நிலுவைக் கடன் தொகை மற்றும் மற்ற செலவை மீட்க உகந்த நடவடிக்கை எடுக்கக் கடன் வழங்குபவருக்கு உரிமை உள்ளது.

(p) ஜி.எஸ்.டி சட்டத்தின் கீழ் அவ்வப்போது பொருந்தும் விகிதத்தில் வரியை வசூலிக்கக் கடன் வழங்குபவருக்கு உரிமை உள்ளது.

(q) ஒரு வேளை, கடன் பெறுபவர் கடன் வழங்குபவரின் பதிவுகளில் வழங்கப்பட்ட மற்றும் இற்றைப்படுத்தப்பட்ட முகவரியில் மாற்றங்கள் செய்தால், உடனடியாகக் கூறப்பட்ட மாற்றங்களைக் கடன் வழங்குபவரிடம் கடிதம் அல்லது மின்னஞ்சல் மூலம் தெரியப்படுத்துவது கடன் பெறுபவரின் கடமையாகும், அவை தற்போதுள்ள ஒப்பந்தத்தின் பின்னிணைப்பாகக் கருதப்படும். அத்தகைய தகவலின் அடிப்படையில், கடன் வழங்குபவர் ஒப்பந்தம் மற்றும் முறையை இற்றைப்படுத்துவார். அத்தகைய தகவலைப் பெற்ற 25 நாட்களுக்குப் பின்னர் அல்லது மாதத்தின் முதல் நாள், இவற்றில் எது பிற்பாடு வருகிறதோ அதன் பின்னர் மாற்றங்கள் செயல் விளைவடையும். ஒரு வேளை, கடன் பெறுபவர், கடன் வழங்குபவரிடம் புதிய முகவரியைத் தெரிவிக்கத் தவறினால், கடன் பெறுபவர், தனது ஆவணத்தில் உள்ள முகவரியை இறுதியானது என்று கருதி அதன்படி ஜி.எஸ்.டி கட்டணமிடுவார்.

**நான்/நாங்கள் கடன் ஒப்பந்தம் மற்றும் சரிதிட்டமான நிபந்தனைகளின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளைப் படித்துவிட்டேன்/டோம் மற்றும் இது எனக்கு/எங்களுக்குத் தெரிந்த மொழியில் எனக்கு/எங்களுக்குப் படித்துக்காட்டப்பட்டு, விவரிக்கப்பட்டு மற்றும் விளக்கப்பட்டுவிட்டது மற்றும் அவை என்னால்/எங்களால் புரிந்துகொள்ளப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டுவிட்டது என்று இதன் மூலம் நான்/நாங்கள் உறுதிப்படுத்தி ஒப்புக்கொள்கிறோம்.**

**சரிதிட்டமான நிபந்தனைகளின் நகல் என்னிடம்/எங்களிடம் வழங்கப்பட்டுவிட்டது மற்றும் நான்/நாங்கள் கூறப்பட்டுள்ள சரிதிட்டமான நிபந்தனைகள் Volkswagen-finance-india.co.in-இல் கிடைக்கும் என்று அறிவேன்/வோம் என்று இதன் மூலம் நான்/நாங்கள் உறுதிப்படுத்துகிறோம்.**

**கையொப்பமிடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, ஒப்படைக்கப்படுகிறது**
**"கடன் பெறுபவர்/கள்" எனப்படுபவரால்**

________________________ ________________________

பெயர்: ____________________ ________________________

**பெயர்:**

________________________ ________________________

பெயர்: ____________________ ________________________

SPECIMEN COPY

**பெயர்:**

பெயர்:

**** தனியுரிமை நிறுவன முத்திரையுடனான உரிமையாளரின் கையொப்பம்**

**** அங்கீகரிக்கப்பட்ட கூட்டாளிகள்/நிறுவனத்தின் உறுப்பினர்கள்/எச்.யு.எஃப்/கழகத்தின் முத்திரையுடனான கையொப்பம்:**

**** நிறுவனம்/சமூகம்/அறக்கட்டளையின் அங்கீகரிக்கப்பட்ட கையொப்பதாரரின் முத்திரையுடனான கையொப்பம்**
**(தனிப்பட்டவரில்லை என்றால் முத்திரைகளுடன் கையொப்பமிடவும்) (நிறுவனம் என்றால் பொதுவான முத்திரையை இணைக்கவும்)** 8

SPECIMEN COPY